
Registered as a News Paper in Sri Lanka
பக்கம் 20
ரூபா 14/00
මේ 19- 25, 2002

# வாரமலர்
# தினமுரசு


THINAMURASU SRI LANKA'S NATIONAL TAMIL WEEKLY [illegible] 460




சூடு - சுவை - சுவாரசியம் அது தான் தினமுரசு

## முருகா எனும் நாமம்

# ஆன்மீகம்



"விழிக்குத் துணை திரு மென் மலர்ப் பாதங்கள் மெய்மை குன்றா மொழிக்குத் துணை முருகா என்னும் நாமங்கள்" என்கிறார் அருணகிரிநாதப் பெருமான்.

முருகா என்னும் நாமங்கள் என்று கூற அவர் என்ன இலக்கண இலக்கியம் தெரியாதவரா? மு- என்றால் முகுந்தன், ரு- என்றால் ருத்திரன், கா- என்றால் பிரம்மா. இதனால் முருகா என்னும் நாமத்தைச் சொன்னால் மூவரினது பெயர்களையும் சொன்ன புண்ணியம் கிடைக்கும். இது மட்டுமல்ல, முகுந்தன் எனும் திருமால் தமது மார்பில் மகாலட்சுமியை வைத்திருக்கிறார். ருத்திரன் என்னும் சிவபெருமான் உமையவளுக்கு உடம்பில் ஒரு பாகத்தையே கொடுத்திருக்கிறார். பிரம்மா தமது மனைவியான சரஸ்வதியை நாவில் வைத்திருக்கின்றார். இதனால் முருகா என்றால் ஆறு தெய்வங்களையும் தொழுத புண்ணியம் கிடைக்கிறது. இதனால்தான் முருகா என்னும் நாமங்கள் என்றார் அருணகிரிநாதப் பெருமான்.

ரீ.குணவர்தன, களுவாஞ்சிக்குடி.

## அன்பு

அன்பு என்பது இவ்வுலகிலுள்ள புனிதமான உணர்வுகளில் ஒன்று. கொடுக்கக்கூடிய ஒன்று. 1 யோவான் 4:8ல்,"அன்பில்லாதவன் தேவனை அறியான்" என்று சொல்லப்பட்டிருக்கிறது. நாம் உண்மையாகவே தேவனுடைய பிள்ளைகள் என்று சொன்னால் நமக்குள் அன்பிருக்க வேண்டும். நம் பெற்றோருக்கு, உறவினர்களுக்கு, அயலவர்களுக்கு, உலகத்தவர்களுக்கு நம் அன்பைப் பகிர்ந்தளிக்க வேண்டும். ஏனெனில், 1 யோவான் 4:7ல் "அன்புள்ள எவனும் தேவனை அறிந்திருக்கிறான்" என்று சொல்லப்பட்டிருக்கிறது.

பரிசுத்த ஆவியைப் பெற்றிருக்கிறீர்களா? என்று யாரும் கேட்டால், ஆம்! என்றும் சிலர் இல்லை! என்றும் சொல்வர். ஆனால், "பரிசுத்த ஆவியைப் பெற்றவர்கள் உண்மையில் அன்புள்ளவர்களாகவே இருக்கவேண்டும்" (ரோமர்5:5) என்பது கிறிஸ்தவ நியதியாகும். பரிசுத்தாவியின் முதலாவது வெளிப்பாடு அன்புதான் என்பதை கலாத்தியர் 5:22 கோடிட்டுக் காட்டுகின்றது. இது தவிர 1கொரி 13ம் அதிகாரம் முழுவதையும் வாசிக்கும்போது அன்பின் முக்கியத்துவத்தையும், ஆழத்தையும் நாம் தெளிவாக அறிந்துகொள்ள முடியும். அம்பாக அல்ல, அன்பாக இருங்கள் என்பதே ஆண்டவனின் உபதேசம். அன்பு உலகை வெல்லும்!

ஜெ.ராம் விக்டர், லபுகலை.

## அண்ணல் நபியின் அறிவுரை

பெற்றோர்கள் தமது பிள்ளைகள் செய்யும் தவறுகளினால் சில சமயங்களில் கோபமடைந்து வாய்க்கு வந்தவாறு அவர்களை ஏசிவிடுகின்றார்கள்.

பின் தமது பிள்ளைகள் ஏதேனும் துன்பத்தினால் அல்லலுறும்போது அவர்கள் அழுது புலம்புகின்றனர். இந்தத் துன்பம் தமது வாய்ப்பேச்சினால் வந்தவையே என்ற சிந்தனையும் இவர்களுக்கு வருவதில்லை.

அல்லாஹ்விடம் அவன் அடியான் கேட்கின்றவை கிடைக்கின்ற சில குறிப்பான நேரங்கள் இருக்கின்றன. இந்த நேரத்தில் நாம் எதை முன்வைக்கின்றோமோ அது நிறைவேறிவிடும். எதைக் கூறுகிறோமோ அது கிடைத்துவிடும்.

இந்த வகையில்தான் உங்கள் பிள்ளைகள் மீது நீங்கள் கோபமடைந்து கூறும் வார்த்தைகள் அல்லாஹ்வால் ஏற்றுக்கொள்ளப்படக்கூடிய அந்த நேரத்தில் நிகழ்ந்துவிடுகின்றன. அதனால்தான் அவர்கள் அவதியுறுகின்றனர்.

இதனால்தான், இறைதூதர் அவர்கள், "உங்கள் பிள்ளைகள் அல்லது வேறு யாராக இருந்தாலும் சரி, ஒருவர் மற்றவர் மீது விரும்பத்தகாத வார்த்தைகளைப் பேசாதீர்கள்" என்று கூறினார்கள்.

ஆதாரம்: தர்கீப்.

எம்.சி.கலீல், கல்முனை–05.

# கவிதைப் போட்டி இல.457

பரிசுக்குரிய கவிதை

இடம் உள்ள வரை இடம் பிடித்துள்ள வியக்க வைத்த கவிதைகள்

### புதுக்கவிதை



[illegible] சொல்ல
[illegible]ந்தேன்
[illegible]தையில்லை
[illegible]
[illegible]சிதமாய்
அடக்கிவிட்டேன்
கமெராவுக்குள்
இராம.ஜெயபாலன்,
கொக்குவில்.

### குறும்பு

அண்டை வீடு சென்ற
அம்மா வருவதற்குள்
குறும்புக்காரக் குட்டி நான்
குஷியாய் ஒரு படமெடுக்க
நன்றியுள்ள நண்பன் நீ
நயமாய் கொடு ஒரு போஸ்!

ஆ.விஜிதா, கல்முனை-02

### பாதை தவறாதீர்!

படம் எடுப்பதில்
பாதை தவறாதீர்
பாதை தவறி
படம் எடுத்ததால்
அக்கரையில் பலர்
சுருக்குக் கயிற்றில்..!

அ.சந்தியாகோ,
கண்டி.

### வேறுபாடு

பச்சிளம் பாலகி என்றாலும்
பகுத்தறிவற்ற ஜீவன்- தன்
எஜமானிய விசுவாசத்துக்கு
இணங்கி நிற்கிறது
பகுத்தறிவுள்ளோர் தமக்குள்
பிணங்கி நிற்கின்றனரே
என்னே வேறுபாடு?

ஏ.எம்.அல் அக்தர், ஏறாவூர்-03.

### இவ்வுலகில்...

[illegible]றும் அறியா
பச்சிளம் குழந்தைகூட
நன்றியுள்ளவர்
யார் என்று அறிந்திருக்கும்
இவ்வுலகில்...

எஸ்.சுபன், வெள்ளவத்தை.

### ஏமாற்றாதே!

அழகாய் கமெரா முன்
போஸ் கொடுக்கும்
நன்றியுள்ள
செல்லப் பிராணியைப்
புகைப்படம்
எடுப்பதாக ஏமாற்றிடாதே
கண்மணியே...

அ.வனிதா, திருகோணமலை.

### ஆணை!

அழகிய ஆடை உடுத்தி
என்ன பயன் உண்டு?
என்னைப் போல இவ்வாறு
ஆடை அணியாமலே
போஸ் கொடுக்க முடியுமா?

கிருஷ்ணன் சிவா,
மஸ்கெலியா.

### பரிசு

[illegible]றி நவில - உன்
[illegible]வினில் வார்த்தையில்லை
[illegible]வேன் நானிதனை -
[illegible]
[illegible]டன் நீ வாலாட்டி
[illegible] நன்றிக்காய்
[illegible] தரும் பரிசிது!

க.யோகேஸ்வரன்,
கஹகல்லையூர்.

### உயிர்நாடி!

வளர்ப்பு நாய் -இங்கு
வாலாட்டிக்கொண்டு
எடு ஒரு போட்டோ என
இருப்பதைப் பார்த்தால் -
யாழில் விசேட அடையாள
அட்டை
இதனதும் உயிர்நாடிதானோ?

கே.ஸ்ரீகாந், யாழ்ப்பாணம்.

### மறைந்த பின்பும்...

குழி தோண்டுறார்...
புதைத்திடப் போறார்,
அதற்கு முன்னே
அடக்கிறேன்
கமெராவுக்குள்
மறைந்த பின்பும்... உன்
செய் நன்றியை நினைத்து
மகிழ்ந்திடுவேன்
மழலையான்!

சி.மதியழகன், திக்கம்.

### அவன் மனிதன்

நாய்களுக்குக் கூட
நாகரிகம் தெரிகின்றது
பிஞ்சான இக் குஞ்சு
வைத்திருக்கும் பிரியம் என்ன?
நாய்களுக்கு உள்ள மதிப்பு
நம் நாட்டு நடைப்பிணத்துக்கு
ஏன் இல்லை?
காரணம் அவன் மனிதன்!

எஸ்.அம்பிகா, யாழ்ப்பாணம்.

# கவிதைப் போட்டி இல.460



எண்ணத்தில் தோன்றும் கவிதைகளை வார்த்தைகளின் எண்ணிக்கை அதிகமில்லாமல், தபாலட்டையில் மட்டும் பதிவு செய்து அனுப்பி வையுங்கள். அனுப்பப்படவேண்டிய கடைசித் திகதி: 25.05.2002

கவிதைப் போட்டி இல.460
தினமுரசு வாரமலர், த.பெ. இல–1772, கொழும்பு.

### செய்நன்றி

எஜமான் சொல்லுக்கு
என்றென்றும் வாலாட்டும்
உந்தன் படமதை
அரசியல் தலைவர் சொல்லும்
அனைத்திற்கும் ஆமாம் போடும்
செம்மறி ஆடுகளுக்குச்
செய்தியாக அனுப்பவுள்ளேன்!

சீ.தங்கவடிவேல், மட்டக்களப்பு.

### வேண்டுகோள்

பாதை திறந்திங்கு
பயணம் தொடர்ந்தாச்சு!
செக்பொயின்ட் இல்லாதேசம்
திரும்பியும் வச்தாச்சு!
நாயாருக்கு அடையாள அட்டை
நாட்டிலே யார் கேட்டார்கள்?
வேண்டாமம்மா விஷப்பரீட்சை...
விட்டுவிடு அதை சுதந்திரமாய்..!

மனோ கோபாலன், ஹப்புத்தளை.

### அப்படியேயிரு...

கமரா தூக்கிய கரங்களை
கரையில் வையாதே
உனக்கு போஸ் கொடுப்பது
உன் செல்லப் பிராணியாகலாம்...
எனக்குப் பட்டது
நீயும் சேர்ந்துதான்!

லைலா அக்ஷியா அக்ரம், குருணாகல்.

# வாசக[ர்] சாலை




முக்கனி முரசே!

452 முரசில் சாதாரணன் எழுதிய "உதயன் தமிழ் தேசிய நாளிதழ்" பற்றிய தகவல்கள் சுவையாக இருந்தன. யாழ்ப்பாணத்தில் உள்ள எம் போன்றவர்களுக்கு இது அவசியம். முகத்தில் மட்டும் கை வைத்துப் பின் உடலினுள் செல்லும் வீரனே, தினமுரசே! மற்றும் 3ம் பக்கத்தில் எழுதப்படுகின்ற கடத்தல், கப்பம் போன்ற செய்திகளை மற்றைய பத்திரிகைகளில் பார்ப்பது அபூர்வம். மற்றவர்களுக்கு இதைப் புரியவைக்கின்ற முரசே! உன் சூடு, சுவை, சுவாரஸ்யம் குறையக்கூடாது. அது குறையவும் மாட்டாது. என்றென்றும் உன் வாழ்வு நிலைக்கட்டும்.

ஆயுததாரிகளால் பயந்தவர்,
யாழ்ப்பாணம்.

வாரமலர் தினமுரசு,

சூடு, சுவை, சுவாரஸ்யம் இவையனைத்தையும் கொண்டதுதான் முரசு. பத்திரிகையின் பெயர் அழியாமல் தொடர்ந்து வளர்வதுதான் உன் தனிச்சிறப்பு. அதனால்தான் தினமுரசு எனப் பெயர்பெற்றுள்ளீரோ? இல்லையேல் உன்னையும் தினம் அல்லது தினத்தந்தி என்று சொல்லிவிடலாம்தானே! எனக்கு உன்னைப் பிடித்திருக்கிறது. என்னை உன் வாசகராக ஏற்றுக்கொள்ளவும்.

ச.ரொபின்சன், நாவுல்யா.

வாராவாரம் வசந்தமாய் என் வாசல் வரும் முரசே!

உன் பெருமைகளை எழுத என் வார்த்தைகளுக்கு அத்தனை ஆழமில்லை. எழுதாமல் இருக்க என் பேனாவுக்குப் பொறுமையில்லை. உன்னைக் கண்டவுடனேயே எதைத் தொட்டுக் கொள்வது எனக் கண்களும், எதை ஒற்றிக் கொள்வது என இதயமும் தடுமாறுகிறது. அத்தனை சூடு, சுவை, சுவாரஸ்யம். தொடரட்டும் உன் சாம்ராஜ்யம்.

சுகுமாரன் ரஜனி, தலவாக்கலை.

அன்பின் முரசே!

பார்த்ததும் பரவசத்துடன் பார்க்கவைக்கும் குளிர்மையான நிறம். அத்துடன் குதூகலப்படுத்த வைப்பதன் இரகசியம் உள்ளே தேடிப்பார்க்காமலே தலைப்பிலேயே புரிகிறது. அதிலும் புதிதாகத் தரும் சிறப்புக் கவிதை, நெட்டிலிருந்து, பட்டென்று தட்டிவிடச் சட்டென்று தரும் தகவல்கள் எவ்வாறு உன்னைப் புகழ்வதென்றே புரியவில்லை. "சூடு, சுவை, சுவாரஸ்யம்- அதுதான் தினமுரசு" என்ற உண்மையை நீ ஒவ்வொரு முரசிலும் நிரூபித்துவிடுவாய். மேலும் புதிய புதிய தகவல்களோடு நீ வளர என் இனிய வாழ்த்துக்கள்.

ஜி.கே.றஞ்சினி, நெடுந்தீவு.

மதிப்பிற்குரிய ஆசிரியர் அவர்கட்கு,

கண்கவர் அழகிய முகப்புடன் தரமான சுவையான அம்சங்களைச் சுமந்து வரும் இனிய முரசே! உனது படைப்புக்கள் யாவுமே அற்புதம்."ஹென்றி போர்ட்டின் உறுதி", ஆக்கம் தந்த அறிவுரைகள் பயன்மிக்கதாக இருந்தன. சந்தோஷம் வேண்டுமா? குறிப்புக்களும் அருமை. தாய்மை, ஏக்கம் சிறுகதைகள் இரண்டும் சிறப்பாக இருந்தன. பாராட்டுக்கள். முரசின் பணி தொடர வாழ்த்துக்கள்.

மங்களா வாமதேவன், தங்களா வாமதேவன்,
மட்டக்களப்பு.

அன்புடன் ஆசிரியர் அவர்கட்கு!

நான் தினமுரசு வாசகன். பல அம்சங்கள் நன்றாகவே உள்ளன. எனக்கு நகைச்சுவை நன்கு பிடிக்கும். "சாதாரணன்" எழுதும் பகுதியை ரசித்துப் படிப்பேன். சொல்ல வேண்டியதை நகைச்சுவையுடனும், அதேவேளை இறுக்கமாகவும் சொல்லும் பாணி நன்றாகவே உள்ளது. ஜீரணித்துக் கொள்ள முடியாதவற்றை, இப்படியும் மக்களுக்குச் சொல்லலாம் என்பது ஒரு புது அனுபவம்.

எம்.சத்தியமூர்த்தி, லண்டன்.

### அறிவித்தல்

உங்கள் கரம் சேரும் முரசில் அச்சுப் பிழையோ, அல்லது ஏதாவது பக்கத்தில் அச்சாகத் தவறி இருந்தாலோ, உங்கள் முகவரிடம் திருப்பிக் கொடுத்து விட்டு, வேறு பிரதி வாங்கிக்கொள்ளுங்கள். 'முரசு' அச்சாகும் வேகத்தில் அரிதாகச் சில தாள்களில் தவறு நேர்ந்து விடுகிறது. மாற்றித்தர மறுக்கும் முகவர்கள் பற்றி எம்மிடம் புகார் தரலாம். புகாருடன் குறிப்பிட்ட தாளையும் அனுப்பவேண்டும். திருப்தியான சேவையே முரசின் மூச்சு.

# உங்கள் பக்கம்

## கல்விக்கு இடையூறாய் மதுபான வியாபாரம்

மலையகத்திலுள்ள தோட்டப்புற பாடசாலைகளில் கல்வி கற்றல் சற்று உயர்ந்து காணப்படுகின்ற அதேவேளையில் இதன் மற்றொரு புறத்தில் அதற்குச் சறுக்கல் ஏற்படுவது இயல்பாகிக்கொண்டே செல்கிறது.

மலையகப் பகுதியில் அதுவும் மஸ்கெலியாப் பகுதியில் அமைந்துள்ள ஒரு தோட்டப்புறப் பாடசாலையில் முதலாம் ஆண்டு தொடக்கம் ஒன்பதாம் ஆண்டுவரை கல்வி கற்பிக்கப்படுகின்றது. கல்வி விடயத்தில் இந்தப் பாடசாலை மிகப் பிரபல்யம் பெற்றதாகவே இருந்துவந்துள்ளது. இங்கிருந்து நகர்ப்புறப் பாடசாலைகளுக்கு ஏராளமான மாணவர்கள் கல்வியில் தேர்ச்சி பெற்றுச் சென்ற வண்ணம் உள்ளனர். ஆனால், அப்படிப்பட்ட பாடசாலையில் இப்பொழுது மாணவர்களின் கல்வியில் பாதிப்பு ஏற்படும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

அதாவது, இப்பாடசாலைக்கு அருகாமையில் மதுபானம் அதாவது கசிப்புக் காய்ச்சும் நிலையம் அமைந்துள்ளது. பகல்வேளைகளில் அங்கு வரும் குடிகாரப் பெருமக்கள் குடித்துவிட்டு அங்கேயே "பைலா" போட்டு நடனமாடுகிறார்கள். இது பாடசாலை நேரங்களில் நடைபெறுவதால் மாணவர்களின் கல்வியில் பாதிப்பு ஏற்படுகின்றது. அத்துடன் இங்கு கற்பிக்கும் ஆசிரியர்கள் பெரும்பாலும் பெண்களாக இருப்பதால் மாலைவேளைகளில் மேலதிக வகுப்புக்கள் நடாத்தவும் அச்சப்படுகின்றார்கள்.

மத்திய மாகாண கல்வி அமைச்சருக்கு இது விடயமாகத் தெரியப்படுத்தியும் இதுவரை எந்த ஒரு நடவடிக்கையும் எடுக்காதது வியப்பைத் தருகிறதெனப் பிள்ளைகளின் பெற்றோர்கள் அங்கலாய்க்கின்றனர். இது விடயத்தில் கல்வி அமைச்சர்கள் கவனம் எடுக்க வேண்டும் எனவும் அவர்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

நலன்விரும்பி, மஸ்கெலியா.

மடல்கள் மற்றும்
ஆக்கங்கள்- உட்பட சகல
தொடர்புகளுக்கும்:
தினமுரசு வாரமலர்,
த.பெ.இல:-1772, கொழும்பு.
தொலைபேசி: 074-514282
தொலை நகல் (Fax):-074-513266
ஈ-மெயில்: (E-mail):-
murasu@dialogsl.net
edmurasu@dialogsl.net

# தலை நகரில் பாதுகாப்பை பலப்படுத்துமாறு பிரதமர் உத்தரவு!

## புலிகளின் 'விடுமுறைகள்' தலைமைப்பீடத்தினால் ரத்து!

**கொ**ழும்பு நகரின் பாதுகாப்பைப் பலப்படுத்தத் தேவையான சகல நடவடிக்கைகளையும் உடனடியாக மேற்கொள்ளுமாறு பிரதமர் ரணில் விக்கிரமசிங்க கூட்டுப் படைகளின் தலைமை அதிகாரி ரொஹான் தளுவத்தைக்கு உத்தரவிட்டுள்ளார்.

தலைநகரின் பாதுகாப்பு திருப்திகரமான நிலையில் இல்லை என உணரப்பட்டுள்ளதால் பொலீஸாரையும், இராணுவத்தினரையும் ஒன்றிணைந்து உடனடிப் பாதுகாப்பு ஏற்பாடுகளை மேற்கொள்ளுமாறு பிரதமர் கேட்டிருப்பதாகப் பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

பொலீஸ் தலைமையகத்தில் திங்களன்று நடைபெற்ற விசேஷ கூட்டமொன்றில் தலைநகரின் பாதுகாப்பு ஏற்பாடுகளை ஜெனரல் தளுவத்தை மேற்பார்வை செய்வார் என பதில் பொலீஸ்மா அதிபர் ரி.ஈ.ஆனந்தராஜா மேல்மாகாணத்திற்குப் பொறுப்பான பிரதி பொலீஸ்மா அதிபர்களுக்குத் தெரிவித்திருக்கிறார்.

பிரதி பொலீஸ் மா அதிபர்களான சிறிசேனஹேரத், பத்மசிறி லியனகே, போதி லியனகே ஆகிய அதிகாரிகள் ஜெனரல் தளுவத்தையின் கண்காணிப்பின் கீழ் பாதுகாப்பைப் பலப்படுத்துவார்கள்.

அடுத்துவரும் நாட்களில் கொழும்பு நகரில் மேற்கொள்ள வேண்டிய பாதுகாப்பு ஏற்பாடுகள் குறித்து விரிவாக ஆராயப்படவுள்ளது.

புலிகளின் உளவுப் பிரிவையும், தாக்குதலணியையும் சேர்ந்த சுமார் 10 உறுப்பினர்கள் தினசரி கொழும்பிற்கு வருவதாகவும் அவர்கள் நகரின் பல்வேறு இடங்களில் நடமாடுவதாகவும் அரசாங்கப் புலனாய்வுப் பிரிவினர் அறிக்கை சமர்ப்பித்துள்ளனர்.

இதற்கிடையில், விடுமுறையில் சென்ற தமது உறுப்பினர்களை உடனடியாக முகாம்களுக்குத் திரும்புமாறு புலிகளின் தலைமை உத்தரவிட்டுள்ளது.

தற்போதைய சமாதான சூழ்நிலையில் தமது உறவினர்களைப் பார்த்துவர வீடுகளுக்குச் சென்றுள்ள புலி உறுப்பினர்களே இவ்வாறு மீண்டும் அழைக்கப்பட்டுள்ளார்கள். ■

## படையினர் வெளியேற்றம் தாமதம்!

### ஒப்பந்தம் மீறப்படுகிறது!

**அ**ரசு-புலிகள் புரிந்துணர்வு உடன்படிக்கையின்படி வணக்கஸ்தலங்கள், பாடசாலைகள் மற்றும் பொது இடங்களிலிருந்து படையினர் வெளியேறுவது மேலும் தாமதமாகும் எனத் தெரியவருகிறது.

வடக்கில் உயர்பாதுகாப்பு வலயங்களிலுள்ள பாடசாலைகளிலும், ஆலயங்களிலும் நிலைகொண்டுள்ள படையினர் தற்போதைக்கு அந்த இடங்களை விட்டு வெளியேறுவது சாத்திமில்லை எனப் படைத்தரப்பால் கூறப்பட்டுள்ளது.

திங்களன்று இது தொடர்பாக யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற கூட்டம் ஒன்றில் கருத்துத் தெரிவித்த பாதுகாப்பு உயரதிகாரி, அதியுயர் பாதுகாப்பு வலயங்களில் இருக்கும் படையினரை வெளியேற்றக்கூடிய சூழ்நிலை இன்னும் இல்லை எனக் குறிப்பிட்டுள்ளார். ●

## எம்.ரீ.வி நிறுவனத்திற்குப் புலிகள் தடை!

**எம்**.ரீ.வி தொலைக்காட்சிச் சேவையின் நிகழ்ச்சிகளை யாழ்ப்பாணத்தில் ஒளிபரப்புச் செய்ய எடுத்த நடவடிக்கைகள் புலிகளின் உத்தரவின் பேரில் நிறுத்தப்பட்டுள்ளன.

அரசுக்கும், புலிகளுக்கும் இடையிலான சமாதான சூழ்நிலை உருவாகியதிலிருந்து யாழ்ப்பாணத்தில் தொலைக்காட்சி ஒளிபரப்பு மையமொன்றை ஆரம்பிக்க எம்.ரீ.வி நிறுவனம் ஏற்பாடுகளைச் செய்திருந்தது என்பது தெரிந்ததே!

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க யாழ்நகருக்கு விஜயம் செய்திருந்த சமயம் அங்கு நடைபெற்ற வைபவம் ஒன்றில் எம்.ரீ.வி நிறுவனத்தின் சார்பில் உரையாற்றிய அதிகாரி ஒருவர் விரைவில் தங்களது தொலைக்காட்சிச் சேவை யாழ்ப்பாணத்தில் ஆரம்பிக்கப்படும் என பிரதமர் முன்னிலையில் அறிவிப்புச் செய்திருந்தார்.

தொலைக்காட்சிச் சேவையை ஆரம்பிக்கப் புலிகள் அனுமதி மறுத்திருப்பதனால் அந்த முயற்சி கைவிடப்பட்டதாக அறியக்கிடக்கின்றது.

## பிரபாகரனிடம் மட்டும் நிர்வாகத்தை ஒப்படைக்க முடியாது -பிரதமர்-

**வ**டக்கு கிழக்கின் இடைக்கால நிர்வாகத்தைப் புலிகளிடம் ஒப்படைக்கப் போவதாகப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அவ்வியக்கத்தினருக்கு வாக்குறுதியளித்துவிட்டார் என்ற குற்றச்சாட்டை பிரதமர் மறுத்துள்ளார்.

"பேச்சுவார்த்தைக்கான நிகழ்ச்சி நிரல் தயாரிக்கப்படும்போது இடைக்கால நிர்வாகம் பற்றிய ஓர் அம்சத்தையும் இணைத்துக்கொள்ளலாம் என்று கோரப்போகிறோமே தவிர, வேறு எத்தகைய வாக்குறுதிகளையும் அவர்களுக்கு நாங்கள் அளிக்கவில்லை எனப் பிரதமர் மாத்தறை நகரில் கடந்த வாரம் இடம்பெற்ற கூட்டத்தில் தெரிவித்திருந்தார்.

புலிகளின் தலைவர் பிரபாகரனுடன் கடந்த பெப்ரவரி மாதம் ஏற்படுத்திக்கொண்ட புரிந்துணர்வு உடன்படிக்கையில் பலவிதமான சலுகைகள் அளிப்பதாகப் பிரதமர் வாக்குறுதியளித்துவிட்டார் என்று பல குற்றச்சாட்டுக்களை எதிர்க்கட்சியினர் தெரிவித்துக்கொண்டிருக்கின்றனர். அத்தகையதொரு நிர்வாகத்தை புலிகள் தலைவரிடம் ஒப்படைக்க முடியாதெனப் பிரதமர் தெரிவித்திருந்தார்.

இடைக்கால நிர்வாகத்தை ஒப்படைப்பதானால், அதற்குப் பாராளுமன்றத்தின் அங்கீகாரம் தேவை என்றும், அதுமட்டுமல்லாமல் மக்கள் ஏற்றுக்கொள்ளக் கூடியதாகவும் இருக்கவேண்டும் என்றும் பிரதமர் குறிப்பிட்டார்.

தொடர்ந்து அவர் உரையாற்றுகையில், ஒரே நாட்டுக்குள் "தமிழர் தாயகம்" என்ற ஓர் அமைப்பைத் தான் மீண்டும் நிராகரிப்பதாகக் கூறினார். 25 ஆயிரம் சதுர மைல் கொண்ட இலங்கை, இங்கு வாழும் சகல இன மக்களுக்கும் தாயகம் என்பது மட்டும் தனக்குத் தெரிந்த ஓர் உண்மை எனவும் பிரதமர் தெரிவித்தார்.

## அகதிகள் விடயத்தில்

### அரசியல்வாதிகள் பாராமுகம்?

**இ**லங்கையில் தற்போது நிலவும் அமைதிச் சூழ்நிலையைக் காரணம் காட்டி ஐரோப்பிய நாடுகளில் குடியேறியுள்ள ஆயிரக்கணக்கான இலங்கையர்களைத் திருப்பி அனுப்ப அந் நாடுகள் தயாராகி வருகின்றன.

பிரித்தானியாவில் அண்மைக் காலத்தில் அகதி அந்தஸ்துக் கோரி விண்ணப்பித்த பெரும்பாலான இலங்கையர்களின் கோரிக்கைகள் நிராகரிக்கப்பட்டுள்ளன.

இத்தாலி, கனடா, அவுஸ்திரேலியா போன்ற நாடுகளும் தற்போது இலங்கையில் சமாதானம் ஏற்பட்டுவிட்டதாகக் கூறி அங்கிருக்கும் இலங்கையர்களை விரைவில் இலங்கைக்குத் திருப்பியனுப்ப முடிவுசெய்துள்ளன.

இந்நிலையில் வெளிநாடுகளில் குடியேறியுள்ள இலங்கையர்கள் இந்தத் தற்காலிக அமைதிச் சூழ்நிலையில் திருப்பியனுப்பப்படுவதைத் தடுக்கப் பல்வேறு சமூக நல அமைப்புக்கள் இலங்கை அரசியல்வாதிகளின் உதவியை நாடியுள்ளன.

கொழும்பில் உள்ள ஐரோப்பிய நாடுகளின் தூதரகங்களுடன் தொடர்புகொண்டு அகதிகளைத் திருப்பியனுப்ப வேண்டாம் எனக் கோருமாறு அந்நாடுகளில் உள்ள பல அமைப்புக்கள் இங்குள்ள தமிழ் அரசியல் கட்சித் தலைவர்களைக் கேட்டுக்கொண்டிருப்பதாகத் தெரியவருகிறது.

எனினும், இதுவரையில் தமிழ் கட்சித் தலைவர்கள் இந்த விவகாரத்தில் குறிப்பிடத்தக்க முயற்சிகள் எதனையும் மேற்கொண்டதாகத் தெரியவில்லை என்பது கவலைக்குரியது. ■

## ஜனாதிபதிக்கு அனுப்பிய கடிதம் புலிகளிடம்...

**ம**ட்டக்களப்பு மாவட்ட ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் அமைப்பாளர் இராஜன் மயில்வாகனம் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கவுக்கு அனுப்பிய கடிதம் புலிகளுக்குக் கிடைத்திருக்கிறது.

தற்போதைய யுத்த நிறுத்தச் சூழ்நிலையில் மாவட்டத்தில் பொதுவாகவுள்ள நிலைமையினையும், தனக்கும் தனது குடும்பத்தினருக்கும் ஏற்படும் நெருக்கடிகளையும் விளக்கி திரு. இராஜன் மயில்வாகனம் ஜனாதிபதிக்குக் கடிதம் எழுதியிருந்தார்.

அந்தக் கடிதத்தின் பிரதிகளைப் பொலீஸ்மா அதிபருக்கும், கிழக்கு மாகாணப் பொலீஸ் அத்தியட்சகருக்கும் ஜனாதிபதி அனுப்பியிருந்தார்.

ஆனால் அந்தக் கடிதத்தின் பிரதியை எவ்வாறோ பெற்றுக்கொண்ட புலிகள் அதை நேரடியாகவே இராஜன் மயில்வாகனத்திடம் காட்டி அவரைத் தாக்கியதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. அத்துடன் தனது பிள்ளைகளை இயக்கத்திற்குத் தரவேண்டும் என்று வற்புறுத்தியதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

பொலீஸ் மா அதிபருக்கும், கிழக்கு மாகாணப் பொலீஸ் அத்தியட்சகருக்கும் அனுப்பப்பட்ட கடிதத்தின் பிரதி எவ்வாறு புலிகளின் கைக்குக் கிட்டியது என்பது பற்றி விசாரணைகள் இடம்பெறுகின்றன. ■

## சி.ஐ.டி.யினரின் சங்கடம்!

**க**டந்த டிசம்பரில் இடம்பெற்ற பொதுத்தேர்தலுக்குச் சில தினங்கள் முன்னதாக அமைச்சர் ரவி கருணாநாயக்கவின் வீட்டுக்கு மனிதத் தலை பார்சலில் அனுப்பப்பட்ட சம்பவம் தொடர்பாக விசாரணை செய்துவரும் இரகசியப் பொலீஸார், பொதுஜன ஐக்கிய முன்னணியில் இருந்து கட்சிமாறித் தற்போது ஐக்கிய தேசிய முன்னணி அரசில் அங்கம் வகிக்கும் முக்கிய அமைச்சர் ஒருவரை விசாரணை செய்ய வேண்டி வந்தபோது தர்மசங்கடமான நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளார்கள்.

இரண்டு அரசாங்கங்களிலும் வறுமை நிவாரண திட்டத்திற்குப் பொறுப்பாக இருந்த இந்த அமைச்சரின் ஏற்பாட்டிலேயே ரவிகருணாநாயக்கவின் வீட்டுக்கு மனிதத் தலை பார்சலில் அனுப்பப்பட்டதாக விசாரணைகள் மூலம் தெரியவந்துள்ளது.

இது இவ்வாறிருக்க, பிரதமருக்கு மிகவும் நெருங்கிய அமைச்சராக இருந்த அந்த வங்கியாளர் தற்போது பிரதமருடன் முரண்பட்டு நிற்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. சமாதான முயற்சிகளில் ஆரம்ப நாட்களில் அமெரிக்க அரசின் ஆதரவைத் திரட்டும் பணியில் ஈடுபட்டிருந்த அவர் தற்போது முற்றாக ஒதுக்கி வைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. ■

## புலியைப் பூனையாக்கியவர்?!

**சு**மார் இருபது வருடகாலம் நாட்டுக்குப் பேரழிவை ஏற்படுத்திக்கொண்டு காட்டில் மறைந்திருந்த பிரபாகரனைப் பூனையைப்போல் தொலைக்காட்சி முன்னால் வந்து அமரச்செய்தவர் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவே எனத் தென்மாகாண முதலமைச்சர் எச்.ஜி. சிறிசேன தெரிவித்துள்ளார்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் தலைமையில் மாத்தறையில் நடைபெற்ற கூட்டம் ஒன்றிலேயே இவ்வாறு அவர் தெரிவித்திருந்தார்.

தேர்தல் காலங்களில் நாம் பிரிந்துநின்று செயற்பட்டாலும் நெருக்கடியான சந்தர்ப்பங்களில் ஒன்றிணைந்து செயற்பட்டு எமது இலங்கைத் தாய்நாட்டிற்குப் பணியாற்ற வேண்டும் எனவும் முதலமைச்சர் சிறிசேன தெரிவித்தார்.

## வடக்கு-கிழக்கில் பொதுச் சட்டத்தை அமுல்படுத்துமாறு பொலிஸாருக்கு உத்தரவு!

**வ**டக்கு-கிழக்கு மாகாணங்களில் நாட்டின் பொதுச் சட்டத்தையும், ஒழுங்கையும் முறைப்படி அமுல்படுத்துமாறு பொலிஸ்மா அதிபர் வடக்கு கிழக்கிலுள்ள சகல பொலீஸ் அதிகாரிகளுக்கும் உத்தரவு பிறப்பித்துள்ளார்.

கடந்த 13ம் திகதி கொழும்பில் பொலீஸ்மா அதிபர் தலைமையில் பொலீஸ் உயரதிகாரிகளுக்கான கூட்டம் இடம்பெற்றபோதே பொலீஸ்மா அதிபர் இந்த உத்தரவைப் பிறப்பித்துள்ளார்.

பொலீஸார் அமுல்படுத்த வேண்டிய சிவில் நிர்வாகச் செயற்பாடுகளில் புலிகள் ஈடுபடுகிறார்கள். அரசாங்கக் கட்டுப்பாட்டிலுள்ள பகுதிகளில் திறக்கப்பட்டுள்ள புலிகளின் அரசியல் அலுவலகங்களில் பொது மக்களின் பிரச்சனைகள் விசாரிக்கப்படுகின்றன. அரசியல் நடவடிக்கைகள் எனக் கூறி இயக்கத்தில் உறுப்பினர்களைச் சேர்ப்பதில் புலிகள் ஈடுபட்டு வருகின்றார்கள். தொடர்ந்தும் பொதுமக்களிடமிருந்து புலிகளால் வரியும், கப்பமும் அறவிடப்படுகின்றன. அத்துடன் நிலவரி, நீர்வரி, கனிப்பொருள் அகழ்வதற்கு வரி எனப் பல்வேறு தொழில்துறைகளுக்கும் புலிகள் வரி அறவிட்டு சிவில் நிர்வாகத்தில் தலையிடுகிறார்கள் என்று கடுமையாக விவாதிக்கப்பட்டது.

இதன் பின்னரே நாட்டின் பொதுச் சட்டத்தையும் ஒழுங்கையும் வடக்கு, கிழக்கில் கடுமையாக அமுல்படுத்துமாறும், சிவில் நிர்வாகத்தை நடைமுறைப்படுத்துவதில் வேறெவரின் தலையீட்டையும் தடுக்குமாறும் பொலீஸ்மா அதிபர் கடுமையான உத்தரவிட்டார்.

# முரசம்

## புரிந்துணர்வு உடன்படிக்கையைப் புறந்தள்ளும் நடவடிக்கைகள்

*அன்புள்ள உங்களுக்கு,*
**வணக்கம்.**

இலங்கையின் இனப்பிரச்சினைக்கு சமாதானத் தீர்வைத் தேடும் இன்னொரு முயற்சியாக தற்போதைய புரிந்துணர்வு உடன்படிக்கையும் பேச்சுவார்த்தைக்கான ஏற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டு வருவது தமிழ் மக்களுக்கு மட்டுமல்ல இலங்கையின் ஏனைய இனங்கள் சமூகங்களுக்கும் நிம்மதியான செய்தியாக அமைந்திருக்கிறது.

ஆனால் அந் நிம்மதி நிலைக்குமா என்ற சந்தேகக் குறிகள் தோன்ற ஆரம்பித்துள்ளன. மேற்கொள்ளப்பட்ட யுத்த நிறுத்தத்துக்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் மீறப்பட்டு வருவதாக இரு தரப்பிலிருந்தும் பெருமளவு முறைப்பாடுகள் வெளிவந்தவண்ணமிருக்கின்றன. அவற்றில் சில சர்வதேச கண்காணிப்புக் குழுவினரையே பெரும் சங்கடத்தில் ஆழ்த்தும் வகையில் பாரதூரமானவையாகவும் அமைந்துள்ளன.

புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் அடிப்படையில் பாடசாலைகள், ஆலயங்களிலிருந்து படையினர் வாபஸ் பெற மறுத்து வருகின்றனர். யாழ்ப்பாணத்தில் பல பாடசாலைகளிலிருந்து படையினர் வாபஸ் பெற முடியாதெனப் படைத்தரப்பு அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இப் பாடசாலைகள் உயர் பாதுகாப்பு வலயங்களுள் அமைந்திருப்பதாக அவர்கள் காரணம் கூறுகின்றனர். அண்மையில் புலிகள் தீவுப் பகுதிகளுக்கு தமது அரசியல் வேலைகளுக்கான உறுப்பினர்களை அனுப்ப அனுமதி கோரிய போதும், தீவுப் பகுதிகள் தமது உயர் பாதுகாப்பு வலயங்களென்று கூறி அனுமதி மறுத்திருந்தனர். உயர் பாதுகாப்பு வலயத்தின் விஸ்தீரணம்பற்றி இங்கு ஒரு வரையறை காணப்படவில்லை.

மறுபுறம் புலிகள் ஆட்திரட்டல், நிதி வசூலித்தல், ஆட் கடத்தல் போன்ற நடவடிக்கைகளில் மோசமாக ஈடுபட்டு வருவதாக குற்றச்சாட்டுகள் தெரிவிக்கப்படுகின்றன. பொலிஸ் மா அதிபரும் இத்தகைய நடவடிக்கைகளைத் தடுத்து சிவில் சட்டங்களின்படி நடவடிக்கையெடுக்கும்படி யாழ்ப்பாண பொலிஸ் அதிகாரிகளுக்கு உத்தரவு பிறப்பித்துள்ளார்.

இவை ஒருபுறமிருக்க அரசாங்கம் தற்போது அடுத்த பேச்சுவார்த்தைக்கான காலம் இன்னும் தாமதமாகுமெனத் தெரிவித்துள்ளது. அவ்வாறான பேச்சுவார்த்தைக்கு ஏதுவான வகையில் புலிகள் மீதான தடையை நீக்குவது குறித்து எதுவித நடவடிக்கைகளும் எடுக்கப் படவில்லை. மாறாக அரசாங்கம் கட்சி மாறல் சட்டமூலம், ஜனாதிபதியின் அதிகாரங்களைக் குறைக்கும் ஏற்பாடுகள் போன்றவற்றிலேயே தனது முக்கிய கவனத்தைச் செலுத்தி வருகிறது.

பேச்சுவார்த்தைகள் ஆரம்பிக்கு முன்னரே சர்ச்சைக்குரிய விடயங்கள் குறித்து புலிகள் தலைவர்களும் பிரதமரும் சங்கடங்களை ஏற்படுத்தக்கூடிய கருத்துக்களை வெளியிட ஆரம்பித்துள்ளார்கள். இவை மோசமான விளைவுகளுக்கு வழிவகுத்துவிடக் கூடும்.

அதனால் முதலில் புரிந்துணர்வு உடன்படிக்கையில் காணப்பட்ட இணக்கத்தையாவது பூரணமாக கடைப்பிடிக்க சம்பந்தப்பட்ட தரப்புகள் விசுவாசமாக முற்பட வேண்டும். ஆரம்பத்தில் வெற்றிகரமாகச் செயற்பட்ட இவ் உடன்படிக்கை வரவர அதிகரித்த பிணக்குகளுக்கும் முறைப்பாடுகளுக்கும் உள்ளாகி வருவதை, மிகுந்த பொறுப்புணர்வோடு அணுகி நிலைமையைச் சீராக்க வேண்டியதே இன்றைக்கு அதி முக்கியமான விடயமாகும்.

■ ■

*மீண்டும் மறுமடலில்*
*வந்து கலக்கும்வரை*

*என்றென்றும் அன்புடன்,*
*ஆசிரியர்.*

---

எக்ஸ்ரே ரிப்போர்ட்

# காலம் மெல்லக் கொல்லும்!

# தாமதங்கள் சமாதானத்தின் புதைகுழிகள்

நரன்

காலம் என்பதை பொதுவாகவே பின்தங்கிய நாடுகள் பெரிதும் பொருட்படுத்துவதில்லை.

ஆனால் காலமென்பது பெறுமதி மிக்கது மட்டுமல்ல சிலவேளைகளில் சில முக்கியமான விடயங்களில் தீர்க்கமான பங்கெடுத்துக் கொள்வதுமாகும்.

அதுவே வேறு சில சமயங்களில் விடயங்களை நாசமாக்கி விடுவதற்கும் மூலகாரணமாகி விடுகிறது.

இப்போது எமது சமாதான முயற்சிகளுக்கு மேலாகப் படர்ந்துவரும் ஆபத்தும் அதுவாகத்தான் இருக்கிறது.

காலத்தைக் கணக்கிலெடுக்காததால் முன்னைய சமாதான முயற்சிகள் குழம்பிப்போன அனுபங்கள் எமக்கு நிறையவே உண்டு.

எனினும் நாம் அக் குழப்பங்களுக்குப் பல்வேறு காரணங்களை எண்ணிக் கொள்கிறோமேயன்றி அதில் காலத்தின் பங்கை பெரிதாக எடுத்துப் பார்த்ததில்லை.

இலங்கையின் இனப்பிரச்சினைக்கு முதன் முறையாக ஒரு தீர்வென முன்வைக்கப்பட்ட விடயம் இந்திய இலங்கை ஒப்பந்தத்தின் 13ம் திருத்தச் சட்டமூலமான மாகாணசபைச் சட்டமூலமே.

அவ் ஒப்பந்தம் நிறைவேறிய விதம் ஒரு ஆச்சரியகரமான விறுவிறுப்பான படக்காட்சிபோலவே இருந்தது.

யாழ்ப்பாணத்தில் இலங்கை அரசாங்கம் ஒபரேஷன் லிபரேஷன் என்ற பாரிய இராணுவ நடவடிக்கையை முடுக்கிவிட, தமிழ் மக்கள் அகதிகளாக பெருமளவில் தென்னிந்தியாவுக்கு ஓட, தமிழ் மக்களைக் காப்பாற்றும்படி இந்தியாவிடம் தமிழ்த் தலைவர்கள் அவசரக் கோரிக்கைகளை விட, இந்தியா யாழ்ப்பாணத்திற்கு மனிதாபிமான உதவிகளை வழங்கப்போவதாக அறிவிக்க, அதை இலங்கை அரசாங்கம் மறுக்க, இந்தியா தனது முதலுதவிப் படகுகளை யாழ்ப்பாணத்துக்கு அனுப்ப, இலங்கைக் கடற்படை அதை இடைமறிக்க, யாரும் எதிர்பாராதபடி இந்திய விமானங்கள் இலங்கையின் இறைமையை மீறி யாழ்ப்பாணத்தில் உணவுப் பொட்டலங்களைப் போட்டுவிட்டுத் திரும்பின.

இதனால் அதிர்ச்சியடைந்த இலங்கை ஜனாதிபதி ஜே.ஆர், எந்த நாடுமே தனக்குக் கைகொடுக்க முன்வராத நிலையில் இலங்கைக்கு உலகில் எந்த நண்பர்களும் இல்லை என அங்கலாய்த்தார்.

இந் நிலையில் அடுத்தடுத்த கட்டங்கள் மிகத் துரிதமாக நிறைவேறின.

ராஜீவ் இலங்கைக்கு விஜயம் செய்து இந்திய இலங்கை ஒப்பந்தத்தில் ஜே.ஆருடன் கையொப்பமிட்டதும், பின்னர் அதனடிப்படையில் இந்திய சமாதானப் படைகள் இலங்கைக்குள் குபுகுபுவெனப் புகுந்ததும் இனி இப் பிரச்சினைக்கு இந்திய அரசாங்கத்தின் பலத்துடன் ஒரு நிரந்தரத் தீர்வை எட்டிவிடலாமென்ற நம்பிக்கையை தோற்றுவித்திருந்தன.

இங்குதான் காலம் தன் கைவரிசையைக் காட்டியது.

இவ்வளவும் நடைபெற்று முடிந்த துரித கதியை இதன் பிற்பட்ட விடயங்கள் தொடரவில்லை.

இலங்கை ஜனாதிபதி ஜே.ஆர். தனக்கு உலகில் எந்த நண்பர்களும் இல்லையென அங்கலாய்த்திருந்தாலும் ஒரு பிரதானமான நண்பனை மிக சாதுரியமாகக் கையாண்டு கொண்டார்.

அவர் நம்பிய நண்பன்தான் காலம்!

ஜே.ஆர். காலத்தைக் கடத்தி தனக்குச் சாதகமான சூழ்நிலையை ஏற்படுத்த விளைந்தார்.

அது அவர் எதிர்பார்த்தவாறே செயற்படவும் செய்தது.

இறுதியில், புலிகளுக்கும் இந்திய அமைதிகாக்கும் படையினருக்கும் யுத்தம் மூண்டபோது, ஜே. ஆர் ஒருவித பெருமிதத்தோடு கூறிக்கொண்டார், 'நான் செய்தது வேறொன்றுமில்லை, நான் விளையாடுவதற்குப் பதிலாக நடுவராக வந்தவரை எனக்காக விளையாட வைத்து விட்டேன்."

காலம் பிந்தப் பிந்த, புதிய புதிய பிரச்சினைகள் புதுப்புது உருவத்தில் கிளம்பி, புதிய சிக்கல்களை உருவாக்கி, இத்தனை தூரம் நிகழ்ந்தேறிவிட்டிருந்த ஒரு பெரும் அரசியல் நிகழ்வையே சிக்கவைத்துத் திணறவைத்து இறுதியில் அர்த்தமற்றதாக்கிவிட்டது.

பின்னர் பிரேமதாஸாவுக்கும் புலிகளுக்கும் இடையில் ஏற்பட்ட இணக்கப்பாடும்கூட அவ் இணக்கப்பாட்டின் சாதகமான நேரத்தில் ஒரு தீர்வை ஈட்டிக்கொள்வதில் பெருத்த அக்கறை காட்டப்படாததால் பிணக்கப்பாடாக மாறிவிட்டது.

இதைவிட அடுத்து ஏற்பட்ட ஒரு பெருநம்பிக்கை 1994ல் சந்திரிகா அரசாங்கம் பதவிக்கு வந்தபோது துளிர்த்திருந்தது.

முதன் முதலாக தமிழ் மக்களுக்கு பிரச்சினைகள் உண்டு, அவை அரசியல் பேச்சுவார்த்தைகளுக்கூடாகத் தீர்க்கப் படவேண்டுமென்று கூறிக்கொண்டு ஆட்சிக்கு வந்தவர் அவர்.

அவரும் பதவிக்கு வந்த உடனடியாக புலிகளுடன் சமாதானப் பேச்சுக்களை ஆரம்பித்தார்.

அதற்கு ஆதரவாக யாழ்ப்பாணத்துக்கு சமாதான யாத்திரைகளும் நடத்தப்பட்டன.

வெண்புறா இயக்கம் என்று தொடங்கி சமாதானப் பிரசாரங்கள் எங்கும் களைகட்டின.

ஆனால் என்ன நடந்தது?

இங்கும் காலம் இழுக்கத் தொடங்கிவிட்டது.

அது தொடங்கிய வேகத்தில் பிரச்சினைகளுக்கு ஒரு அரசியல் தீர்வை ஈட்டத் தவறி, அன்றாட விடயங்களிலேயே இறங்கி, அதில் பிணக்குப்பட்டு, நிபந்தனைகளுக்குள்ளும் நிர்ப்பந்தங்களுக்குள்ளும் மாட்டுப்பட்டு, இருதரப்புகளுக்கும் ஆரம்பத்திலிருந்த நம்பிக்கைகள் வரவர மங்கி, சந்தேகங்களுக்கு களம்கொடுத்து, இறுதியில் அரசியல் பேச்சென்று எதையும் பேசாமலே பேச்சுவார்த்தை முறிந்து மீண்டும் யுத்தத்துக்கே வழிவகுத்ததாயிற்று.

> **தாயகக் கோட்பாட்டை தாம் ஏற்க முடியாதெனவும் இலங்கையே இங்குள்ள சகல இன மக்களுக்குமான ஒரே தாயகமெனவும் பிரதமர் இப்போது மீண்டும் மீண்டும் பகிரங்கமாகவே வலியுறுத்தத் தொடங்கிவிட்டார்.**

பேச்சுவார்த்தைகள் முறிந்தாலும் அதன்பின் சந்திரிகா முதன் முதலாக 1995ல் வெளியிட்ட அரசியல் தீர்வுக்கான பிரேரணை தமிழர் விடுதலைக் கூட்டணி உட்பட புலிகள் தவிர்ந்த ஏனைய தமிழ்க் கட்சிகளால் தீர்வுக்கான ஓர் அடிப்படையாக ஏற்றுக் கொள்ளப்பட்டிருந்தது.

ஆனாலும் அதுவும் காலத்தால் சிதைக்கப்பட்டது.

ஐக்கிய தேசியக் கட்சியின் சம்மதத்தைப் பெற்றுக் கொள்வதென்ற பெயரில் அதை அப்போதைய பொது ஜன ஐக்கிய முன்னணியின் இனவிவகார அமைச்சர் பீரிஸ் எடுத்துவைத்து மிக நீண்டநாட்களாக இழுத்தடித்து பல்வேறு திருத்தங்களைச் செய்து இறுதியில் தமிழ்த் தரப்பினரால் ஏற்றுக்கொள்ள முடியாத அளவு ஐதாக்கி நிராகரிக்க வைத்தார்.

பொதுஜன ஐக்கிய முன்னணி பதவிக்கு வந்த வேளையில் அரசியல் தீர்வொன்றைக் காண்பதற்கு உகந்த சூழ்நிலை நிலவியது.

எதிர்ப்புகள் பலவீனமாக இருந்தன, மறுபுறம் மக்களின் மனோநிலை உற்சாகமாகவும் தீர்வுக்குப் பெரும் ஆதரவாகவும் இருந்தது.

ஆனால் பிற்பாடு காலம் தாழ்த்திச் செல்லச் செல்ல எதிர்ப்புகளும் முட்டுக்கட்டைகளும் தலைதூக்கத் தொடங்கிவிட்டன.

இப்படியான அனுபவங்கள் எமக்கு உணர்த்தும் உண்மை என்னவென்றால், காற்றுள்ள போதே தூற்றிக் கொள்ள வேண்டுமென்பதுபோல் நாம் காலம் வாய்க்கும்போதே காரியங்களையும் நிறைவேற்றிக் கொள்ள வேண்டும்.

தற்போது நிகழும் சமாதான முயற்சியிலும் அதுவே உண்மை.

இப்போதுள்ள சூழ்நிலையும் இருதரப்புக்கும் இருக்கும் நம்பிக்கைகளும் தொடர்ந்து நீடிக்கும் என்பதற்கு உத்தரவாதமில்லை.

இப்போது இரண்டாம் பட்ச நிலையில் பின்தள்ளப்பட்டிருக்கும் எதிர்ப்பு சக்திகள் காலப்போக்கில் முன்நிலைக்கு வரமாட்டார்கள் என்பதற்கும் உத்தரவாதமில்லை.

> **இறுதியில், புலிகளுக்கும் இந்திய அமைதிகாக்கும் படையினருக்கும் யுத்தம் மூண்டபோது, ஜே. ஆர் ஒருவித பெருமிதத்தோடு கூறிக்கொண்டார், "நான் செய்தது வேறொன்றுமில்லை, நான் விளையாடுவதற்குப் பதிலாக நடுவராக வந்தவரை எனக்காக விளையாட வைத்து விட்டேன்."**

இப்போது சமாதானத்துக்கு ஆதரவாக இருக்கும் தென்பகுதி மக்களின் மனோநிலை எதிர்ப்பு சக்திகளின் பிரசாரங்களாலும், வெவ்வேறு சம்பவங்களாலும் மனமாற்றமுற்றுவிடமாட்டாதென்பதற்கும் உத்தரவாதமில்லை.

சர்வதேச சூழ்நிலைகளிலும் குறிப்பாக இந்திய அரசியலிலும் மாற்றங்கள் வந்து அவையும் இச் சாமாதான வாய்ப்புகளைப் பாதிக்கக் கூடும்.

ஏற்கெனவே சிறு சிறு சம்பவங்களாகப் பல்வேறு விரும்பத் தகாத சம்பவங்கள் நிகழ்ந்துவிட்டன.

புரிந்துணர்வு உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்ட போது இருந்த உற்சாகமும் ஆர்வமும் இப்போது தொய்வுறத் தொடங்குகின்றன.

அதேவேளை இரு தரப்பிலிருந்தும் மறுதரப்பினரைப் பாதிக்கக் கூடிய கருத்துகள் வெளிவரத் தொடங்கிவிட்டன.

புலிகள் தலைவர் பிரபாகரன் நடத்திய பத்திரிகையாளர் மாநாட்டில் ரணிலை தாம் பிரதமராக ஏற்க முடியாதெனவும் பிரபாகரனே தமிழீழத்தில் பிரத மரும் ஜனாதிபதியுமென அன்ரன் பாலசிங்கம் தெரிவித்திருந்தார்.

அதேவேளை தாம் தமிழீழக் கோரிக்கையைக் கைவிடவில்லையெனவும், அதற்கு மாற்றாக அரசாங்கம் முன்வைக்கக் கூடிய தீர்வு தாயகக் கோட்பாடு, தேசிய இனத்துக்கான அங்கீகாரம், சுயநிர்ணய உரிமை ஆகியவற்றை நிறைவு செய்வதாக இருக்க வேண்டுமெனவும் திட்டவட்டமாக தெரிவித்திருந்தனர்.

ஆனால் அண்மையில் ரணில் வெளியிட்டுவரும் கருத்துகள் அதை நிராகரிக்கும் வகையில் அமைந்திருக்கின்றன.

தாயகக் கோட்பாட்டை தாம் ஏற்க முடியாதெனவும் இலங்கையே இங்குள்ள சகல இன மக்களுக்குமான ஒரே தாயகமெனவும் பிரதமர் இப்போது மீண்டும் மீண்டும் பகிரங்கமாகவே வலியுறுத்தத் தொடங்கிவிட்டார்.

ஆரம்பத்தில் முரண்பாடுகளை ஏற்படுத்தக் கூடிய கருத்துக்களை தவிர்த்து வந்த அவர் தற்போது இவ்வாறு தெரிவிக்க வேண்டிய காரணம் சிங்களத் தரப்பில் தலைதூக்கத் தொடங்கியிருக்கும் சந்தேகங்களுக்குப் பதிலளிக்க வேண்டுமென்ற கட்டாயங்களே.

மேலும் அடுத்த கட்டப் பேச்சுவார்த்தையின் பிரதான விடயமாக அமையவிருந்தது இடைக்கால நிர்வாக சபை பற்றியதே.

ஆனாலும், அவ்வாறான ஒரு இடைக்கால நிர்வாக சபை அல்லது ஒரு பிரதேச சபையைத் தன்னும் மக்களின் அங்கீகாரமில்லாமல் தன்னால் புலிகளுக்கு வழங்க முடியாதென இப்போது அவர் கூறுகிறார்.

முன்னரோ, இப்படியான விடயங்கள் பற்றி பேச்சுவார்த்தை மேசையிலேயே ஆராயப்படுமெனப் பதிலளித்து வந்தவர் இன்று பகிரங்கமாகப் பேச ஆரம்பித்துள்ளார்.

இப்படியான அசௌகரியம் தரக்கூடிய கருத்தொன்றை அவர் சொல்லாமலே தவிர்த்திருக்க முடியும். ஆனால் அவரைச் சொல்ல வைத்த சொல்லு நிர்ப்பந்தம் என்ன என்பதே சிந்திக்க வேண்டிய விடயமாகும்.

இதேவேளை எதிர்க் கட்சியான பொதுஜன ஐக்கிய முன்னணியும் தன்னைச் சுதாகரித்துக் கொண்டு இப்போது அரசாங்கத்தின் சமாதான நடவடிக்கைகளை நாட்டுக்கான அச்சுறுத்தலாகப் பிரசாரப்படுத்த தயாராகி வருகிறது.

ஜே.வி.பி. பெரும் ஆர்ப்பாட்டங்களை நடத்தப் போவதாக ஏற்கெனவே தெரிவித்துள்ளது.

சிங்கள, மற்றும் ஆங்கிலப் பத்திரிகைகள் புலிகள் யுத்த நிறுத்தத்தை மீறுவதாக தொடர்ந்து விமர்சித்து வருகின்றன.

படையினரும் ஒப்பந்தப்படியான கடப்பாடுகளை நிறைவேற்றப் பின்னடித்து வருகின்றனர்.

இந் நிலையில் இந்திய அரசியலிலும் மாற்றங்கள் தோன்றும் நிலைமைகள் ஏற்பட்டு வருகின்றன.

அடுத்த தேர்தலில் அல்லது அதற்கு முன்பாகவே அரசாங்கம் சோனியா தலைமையிலான காங்கிரஸ் கட்சியின் கைக்கு மாறிவிடவும், தமிழக முதல்வர் ஜெயலலிதா சோனியாவுடன் கூட்டுச் சேரவும் பெருமளவு வாய்ப்புகள் நிலவுகின்றன.

இம் மாற்றங்கள் இந்தியாவின் புலிகள் தொடர்பான நிலைப்பாட்டை கடுமையாக்கவும் பேச்சுவார்த்தைகளின் போக்கில் சில நெருக்கடிகளை தோற்றுவிக்கவும் வழிகோலக் கூடும்.

இலங்கை விவகாரத்தில் அமெரிக்கா கூடுதலான ஈடுபாட்டைக் காட்டத் தொடங்கியிருப்பதையடுத்து இந்தியா சற்று விழிப்படைந்துள்ளது.

திருகோணமலை எண்ணெய்க் குதங்களை இந்தியா குத்தகைக்கு கோரியிருப்பது இதற்கு ஓர் அறிகுறியாகப் புலப்படுகிறது.

இலங்கைப் பிரதமர் மீண்டும் அடுத்த மாத முற்பகுதியில் இந்தியா செல்லவுள்ளதும் இங்கே அவதானத்துக்குரியதாக உள்ளது.

புலிகள் அதிருப்தியுறுவதற்கு இவை வழிகோலக் கூடும்.

இதேவேளை காலம் தாழ்த்திச் செல்லும் போது பொருளாதாரப் பிரச்சினைகளும் அரசாங்கத்தின் மீது மக்களுக்கு அதிருப்தியை தோற்றுவிக்கக் கூடும்.

ஏற்கெனவே மின்சார நெருக்கடியை பாரிய பிரச்சினையாக முகம் கொடுத்த அரசாங்கம் இப்போது விலையேற்றங்களைப் படிப்படியாக மேற்கொள்ள ஆரம்பித்துள்ளது.

எனவே தற்போதைய நம்பிக்கைகள் கெடுவதற்கு முன்னரே அரசியல் தீர்வுக்கான பேச்சுவார்த்தைகளை நடத்தி தீர்வொன்றைக் காண்பதற்கு உடனடியாக முனைவதே உசிதமானது.

இடைக்கால நிர்வாக சபையொன்றையிட்டு மட்டும் பேசுவது அதிகம் பயனுள்ளதாக இருக்க மாட்டாது.

ஏனெனில் டிசம்பர் 5ம் திகதிக்குப் பின்னர் ஜனாதிபதி பாராளுமன்றத்தைக் கலைக்கும் அதிகாரத்தைப் பெற்றுக் கொள்வார்.

அதேவேளை வடக்கு-கிழக்கு மாகாண சபையைக் கட்டுப்படுத்தும் அதிகாரங்களும் ஜனாதிபதிக்கு கீழேயே குவிக்கப்பட்டுள்ளன.

ஒரு தீர்வைக் கண்டு அதற்கான அமுலாக்கல் படிமுறையாக இடைக்கால நிர்வாகத்தை அமுலாக்குவதே உசிதமானதாக அமையும்.

மாறாக இப் பயனுள்ள காலத்தை வெறும் இடைக்கால நிர்வாக சபையை கோருவதிலே வீரியமாக்கிக் கொண்டால் அச் சபை கிடைத்தாலும் அதற்கு அப்பால் நகர முடியாத பிணக்குகளால் முடக்கப்படக்கூடிய ஆபத்துகள் உண்டு.

இடைக்கால நிர்வாகம் கிடைக்கிறதோ இல்லையோ, அரசியல் தீர்வுக்கான பேச்சுவார்த்தைகளை இக் கால கட்டத்தில் ஒப்பேற்றிக் கொள்ள முனைவதே விவேகமானது.

காலத்தைத் தவறவிட்டால் காரியம் கைகூடாது போய்விடும் ■

அண்டை மண்டலத்திலிருந்து

# திராவிடக் கட்சிகளின் போட்டா போட்டி அரசியல்



**1967**ம் ஆண்டு தி.மு.க. முதன் முதலாக ஆட்சிக்கு வந்தபோது, அது தமிழக வரலாற்றில் ஒரு முக்கிய நிகழ்வாகக் கருதப்பட்டது.

உயர் சாதியினரதும், மேல்தட்டு வர்க்கத்தினரினதும் கட்சியாக மாறிவிட்ட காங்கிரஸ் நிராகரிக்கப்பட்டதும், விடுதலை பெற்று 25 ஆண்டுகளுக்கும் மேலாக முன்னேற்றம் எதையும் காணாத பிராமணரல்லாதோரின் பொற்காலம் தொடங்கிவிட்டது எனப் பலரும் நினைத்தனர். மேலும் 35 ஆண்டுகள் உருண்டோடிவிட்டன. மக்களின் பிரச்சனைகள் இன்னும் கூர்மையடைந்திருக்கின்றன. சாதிப் பிளவுகள் அதிகமாகியிருக்கின்றன. திராவிடக் கட்சிகள் பெருகிக்கொண்டிருக்கின்றன. ஆனால், அக்கட்சிகளின் தலைவர்களும், காங்கிரஸ் தலைவர்களைப் போன்றே மக்களிடமிருந்து அன்னியப்பட்டு, தங்கள் தங்கள் மேம்பாட்டிலேயே குறியாயிருக்கிறார்கள்.

1972ல் அ.இ.அ.தி.மு.க. தோன்றியும் நிலைமையில் மாற்றமில்லை. எம்.ஜி.ஆர். காலத்தில் தொடங்கிய போட்டாபோட்டி அரசியல் தற்போது இன்னும் அதிகமாயிருக்கிறது. நகைப்பிற்குரியதாகவும் ஆகிவிட்டது. கடந்த வாரம் நடந்து முடிந்த சட்ட மன்றக் கூட்டத் தொடர் முழுவதும் இந்த லாவணிக்கச்சேரிதான் மேலோங்கியிருந்தது.

தி.மு.க.வைக் குறிவைத்து சரியாகச் சொன்னால் கருணாநிதி குடும்பத்தினரைக் குறிவைத்து மூன்று வேறு சட்டங்கள் இயற்றப்பட்டன. தவிரவும் போக்குவரத்து உள்ளிட்ட சில அத்தியாவசியத் துறைகளில் வேலை நிறுத்தத்தினைத் தடை செய்யும் மசோதா ஒன்றும் நிறைவேற்றப்பட்டது. கருணாநிதி குடும்பம் மக்கள் பெயரைச் சொல்லிக் கொழிப்பது சரியானால், புரட்சித் தலைவி அவர்களைத் துரத்தித் துரத்தியடிப்பதிலும் தவறில்லை என்பது ஒரு சிலரின் வாதம். கருணாநிதியின் மகன் ஸ்டாலின் சென்னையில் உள்ள ஆயிரம் விளக்குத் தொகுதியின் சட்ட மன்ற உறுப்பினர். சென்னை மாநகர மேயரும் கூட. தி.மு.க. படுதோல்வியடைந்த கடந்த ஆண்டுத் தேர்தல்களின் பிறகு நடாத்தப்பட்ட உள்ளூராட்சித் தேர்தல்களில் தி.மு.க. தனது இழப்புக்களை ஓரளவு ஈடுசெய்ய முடிந்தது. சென்னை யிலேயே அதிக வன்முறைகள் கட்டவிழ்த்து விடப்பட்டும் கூட,ஸ்டாலின் மேயர் தேர்தலில் வெற்றி பெற முடிந்தது.

அன்றிலிருந்து இன்றுவரை ஒரு நாள் கூட அவரால் நிம்மதியாக நிர்வாகத்தினை நடாத்த முடியவில்லை. மேம்பால ஊழல் வழக்கில் சிறைசென்று திரும்பியிருக்கிறார். ஆனால், வழக்கு இப்போதுதான் தொடங்கவிருக்கிறது.

இன்னும் வரப்போகும் பிரச்சனைகள் ஏராளம். ஆயினும் அவர் விடுவதாக இல்லை. அ.இ.அ.தி.மு.க. அரசும், தனது தாக்குதல்களை நிறுத்துவதாக இல்லை. இனி சட்ட மன்ற, நாடாளுமன்ற உறுப்பினர்கள் உள்ளாட்சி மன்றங்களில் பதவி வகிக்க முடியாது என இப்போது சட்டம் கொண்டுவரப்பட்டிருக்கிறது.

இதுவே செல்லுபடியற்றது. சட்ட மன்ற உறுப்பினர்கள் எங்கெல்லாம் பதவி வகிக்கலாம், பதவி வகிக்கக் கூடாது எனக்கூற ஒரு மாநில அரசுக்கு அதிகாரம் கிடையாது என்கின்றனர் சிலர். ஆளுநர் கையெழுத்திட்டுவிடுவார். தொடர்ந்து மாநில கெசட்டில் சட்டம் அறிவிக்கப்பட்டுவிடும். அதன் பிறகு ஸ்டாலின் பதினைந்தே நாட்களில் ஏதாவதொரு பதவியினை ராஜினாமா செய்தே ஆகவேண்டும் என்கின்றனர் அ.இ.அ.தி.மு.க.வினர்.

பொறுத்திருந்து பார்ப்போம். ஆளுநரோ, குடியரசுத் தலைவரோ தலையிட்டு எங்களைப் பழிவாங்க முயற்சிக்கும் இம் மசோதாவை, சட்டமாகாமல் இருக்க ஆவன செய்வார்கள் என்று தாம் நம்புவதாக கலைஞர் கூறுகிறார். இரண்டு பதவிகளையும் எதற்காக ஒரே நபர் வகிக்க வேண்டும் என்று மட்டும் அவர் விளக்கமாட்டார். இன்னொரு மசோதா மேயர் போன்ற பதவியிலிருப்போர் வெளிநாடு செல்லுமுன் மாநில அரசின் அனுமதி பெறவேண்டும் என்கிறது. அப்படிப் பெறத் தவறினால் அவர்களுக்கு அபராதம் விதிக்கப்படும்.

தற்போது ஸ்டாலின் பிரேசில் நாட்டிற்குச் சென்றிருக்கிறார். அவர் புறப்படுவதற்கு முன்னரே சென்னையில் அ.இ.அ.தி.மு.க.வினர் பிரச்சனைப்படுத்தத் தொடங்கிவிட்டனர். அதெப்படி மேயர் இத்தருணத்தில் வெளிநாடு போகலாம், எத்தனை பிரச்சனைகள் இருக்கின்றன. நிர்வாகம் என்னவாகும்? இப்படியெல்லாம் துணை மேயர் கராத்தே தியாகராஜன் அறிக்கை விட்டுக்கொண்டிருந்தார்.

இந்தத் தியாகராஜன்தான் மாநகராட்சித் தேர்தல்களின்போது அடிதடிகளில் முன்னிலை வகித்தவர். அதற்காகவே துணை மேயர் பரிசு என்று கூடக் கூறப்பட்டது. எதிர்வரும் சைதாப்பேட்டை சட்ட மன்ற இடைத் தேர்தலிலும் அவருக்கு முக்கிய பொறுப்புக்களிருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

ஏறத்தாழ மாநகராட்சி நிர்வாகமே ஸ்தம்பித்துப் போயிருக்கிறது. மாநகராட்சியின் பல்வேறு பணிகளை ஒழுங்கு செய்யும் நிலைக்குழு உறுப்பினர் பதவிகளை அ.இ.அ.தி.மு.க.வும் தமிழ்மாநில காங்கிரஸும் தங்களுக்குள் பங்கு போட்டுக்கொண்டுவிட்டன. மாநில அரசியலில் த.மா.கா. தலைவர் ஆளுங்கட்சியுடன் ஒப்பந்தம் செய்துகொண்டு, அதிக தொகை கைமாறும் பணிகள் சிலவற்றை நிர்வகிக்கும் பொறுப்பினைப் பெற்றுவிட்டார். இரண்டாவது பெரிய கட்சியாயிருந்தும் ஒரு நிலைக்குழுவில் கூட தி.மு.க.விற்கு இடம் கிடைக்கவில்லை.

இவ்வளவு பிரச்சனைகள் இருந்தும் ஏன் ஸ்டாலின் மேயராக நீடிக்கப் போராட வேண்டும்? இரு சட்டங்களும் கையெழுத்தானவுடன் அவர் மேயர் பதவியை ராஜினாமாச் செய்துவிடுவார் என நம்பப்படுகிறது.

இன்னொரு சட்டம் கேபிள் ரீவி இணைப்புக் கொடுக்கும் நிறுவனங்களைக் கட்டுப்படுத்தக் கொண்டு வரப்படுகிறது. கடந்த அ.இ.அ.தி.மு.க. ஆட்சியில் கேபிள் ரீவிக்காரர்களைத் தங்கள் கட்டுப்பாட்டின் கீழ் கொணர அன்றைய ஜெ.ஜெ.ரீவி முயன்றது.

அன்னாள் வளர்ப்பு மகன் சுதாகரனின் சகோதரர் பாஸ்கரன் தலைமையில் இயங்கிய சூப்பர் டூப்பர் ரீவி நிறுவனத்தில் இணைந்துவிடுமாறு ஆப்பரேட்டர்கள் மிரட்டப்பட, பத்திரிகைகளில் பரபரப்பாகச் செய்திகள் வெளிவர, அம்முயற்சிகள் தற்காலிகமாகக் கைவிடப்படடன.

அதே வேலையினை தி.மு.க. ஆட்சியில் சன் ரீவியின் சகோதர நிறுவனமான சுமங்கலி கேபிள் ரீவி ஓசையின்றிச் செய்து முடித்துவிட்டது. மிரட்டி, ஆசைவார்த்தை கூறி, பொலீஸைக்கூட ஏவி, ஏறத்தாழ 70 சத கேபிள் ஆபரேட்டர்களைத் தங்களுடன் இணைத்துக்கொண்டுவிட்டனர் சுமங்கலி நிறுவனத்தினர்.

பம்பாயைச் சேர்ந்த ரஹேஜா குழுவினர் சென்னையில் ஒரு பகுதியில் கேபிள் ரீவி இணைப்புக் கொடுக்கத் தொடங்கினர். அவர்கள் சில மாதங்களிலேயே விரட்டியடிக்கப்பட்டனர். என்ன நடந்தது என்பது இன்றுவரை ஒரு இரகசியமாகவே இருக்கிறது. ரஹேஜாக்காரர்களைக் கேட்டால் எங்களுக்கு நியாயமான விலை கொடுக்கப்பட்டது என்கிறார்கள். அதற்குமேல் வாயைத் திறப்பதில்லை. இப்படியாகத் தமிழ்நாடு முழுவதும் சுமங்கலி ஏகபோக ஆதிக்கம், முழுவதையும் கபளீகரம் செய்யுமுன் தேர்தல் வந்துவிட்டது.

இப்போது மாறன் குடும்பத்தினர் மீது தொடுக்கப்பட்டிருக்கும் தாக்குதல்களின் ஒரு பகுதியாகக் கேபிள் ரீவி நிறுவனங்களைக் கட்டுப்படுத்தும் மசோதா மூலம் சுமங்கலியிலிருந்து சிறிய ஆபரேட்டர்களை எந்தளவில் பிரிக்க முடியுமென்பதைப் பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும். ஆனால், அதற்கு நெருக்கடி தொடங்கிவிட்டது என்பதை மறுக்க முடியாது.

சன் ரீவிதான் அசாத்திய செல்வாக்குப் பெற்று விளங்குகிறது. ஏறத்தாழ அசைக்க முடியாத உச்சத்திற்குச் சென்றுவிட்டது. சுமங்கலியையாவது இறுக்கிப் பிடிப்போமே என நினைக்கிறார் ஜெயலலிதா. இன்று சிறிய சிறிய வீடுகளில் கூட கேபிள் ரீவி இணைப்பு சர்வ சாதாரணமாகிவிட்ட வேளையில், அது நல்ல பிஸினஸ் ஆகிவிட்டது என்பதை இங்கே நினைவில் கொள்ள வேண்டும்.

இதைப் பற்றிக் கருணாநிதி என்ன கூறுகிறார்? "இது கருத்துச் சுதந்திரத்தைப் பறிக்கும் முயற்சியாகும். ஆட்சியாளர்களுக்கெதிரான கருத்துக்கள் தொலைக்காட்சியில் ஒளிபரப்பாவதைத் தடுக்கும் சட்டம்" என்கிறார். இதனைப் பொது மக்கள் நம்பப் போகிறார்களா என்ன? இத்தகையதொரு சூழ்நிலையில்தான் போக்குவரத்துத் தொழிலாளர்கள் மற்றும் சில அரசுத்துறை ஊழியர்கள் வேலை நிறுத்தம் செய்தால் அவர்களுக்கு மூன்றாண்டுகள் வரை சிறைத் தண்டனை, அவர்களை அவ்வாறு வேலை நிறுத்தம் செய்யத் தூண்டுவோருக்கும், நிதி உதவி செய்வோருக்கும் கூடத் தண்டனை எனக்கூறும் மசோதா ஒன்றும் கூட்டத் தொடரின் இறுதி நாளன்று நிறைவேற்றப்பட்டது.

மாநிலம் முழுதும் போக்குவரத்துத் தொழிலாளர்கள் சில மாதங்களுக்கு முன்பு வேலை நிறுத்தம் செய்தனர். அப்போது ஏப்ரல் மாதம் போனஸ் தருவதாகக் கூறி நிலைமையைச் சமாளித்தது, அ.இ.அ.தி.மு.க. அரசு. தொழிலாளர்களும் வாக்குறுதியை நம்பி வேலைக்குத் திரும்பினர். ஆனால், அரசின் நிதி நிலை சரியாகவில்லையே! ஊழியர்களின் அந்தந்த மாதச் சம்பளம் கொடுப்பதற்குள் விழி பிதுங்குகிறது. எங்கிருந்து கொடுப்பது போனஸ்? போக்குவரத்துக் கழகங்கள் எல்லாம் நட்டத்தில் அல்லவா இயங்குகின்றன?

அவற்றைச் சீராக்க எந்த அரசும் கவனமெடுப்பதில்லை. மாறாகத் தனியாருக்கு அவற்றைத் தாரைவார்க்கவே முயல்கின்றன. மெல்ல மெல்ல அவை தனியாருக்கு வழங்கப்படும் என ஜெயலலிதா ஏற்கெனவே அறிவித்திருக்கிறார்.

இந்நிலையிலேயே பல்வேறு தொழிற்சங்கங்கள் வேலை நிறுத்தம் செய்யப்போவதாய் அறிவித்திருக்கின்றன. அம்முயற்சியை முறியடிக்கும் வகையில் இப்படியொரு மசோதா. மூன்று முக்கிய இடைத் தேர்தல்கள் நடைபெறவிருக்கின்றன. மக்கள் என்ன நினைப்பார்கள்? ஏதாவது ஒரு திராவிடக்கட்சியை ஆதரிப்பதைத் தவிர மக்களுக்கு வேறு வழியில்லை. அதுவும் காசு வாங்கிக்கொண்டு வோட்டுப் போடும் பஞ்சை பாராரிகள் எத்தகைய சட்டங்களைப்பற்றியும் அலட்டிக்கொள்வதில்லை என்று ஜெயலலிதாவுக்கு நன்கு தெரியும் என்பதாலேயே இப்படிப்பட்ட சட்டங்கள். ■

காணகன்

# முஸ்லிம் எம்.பி.க்கள் குழுவுக்கு என்ன நடந்தது?

"இதோ நாங்கள் எல்லோரும் ஒன்று சேர்ந்துவிட்டோம். இனிமேல் இனநெருக்கடியுடன் தொடர்புடைய விடயங்களில் முஸ்லிம்கள் கிஞ்சித்தும் கவலை கொள்ளத்தேவையில்லை" என ஆரவாரமான பிரசாரங்களுடன் முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்களின் குழுவொன்று கடந்த மாதம் ஒன்றுகூடியது.

அரசாங்கத்திற்கும் புலிகளுக்கும் இடையிலான புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்ட பின்னர் கிழக்கு மாகாண முஸ்லிம்கள் எதிர்கொண்ட பிரச்சனைகளையடுத்து எழுந்த மக்கள் அழுத்தத்தினால் வேறு வழியின்றி முஸ்லிம் எம்.பிக்கள் ஒன்றுகூடித் தங்களுக்கென ஒரு அமைப்பை உருவாக்கினார்கள். அது ஆரம்பிக்கப்பட்ட தினத்திலும், அடுத்த ஓரிரு தினங்களிலும் பத்திரிகைகள், வானொலிகள் எனச் சகல ஊடகங்களிலும் அமைப்பின் உறுப்பினர்கள் பேட்டியளித்து, அறிக்கைகள் விட்டு மகிழ்ந்துகொண்டனர்.

அதன் பின்னர் அந்த அமைப்பிற்கு என்ன ஆனதென்றே தெரியவில்லை. முஸ்லிம்களின் பிரச்சனைகள் தொடர்பாகப் பல்வேறு தரப்புக்களுடன் பேச்சுவார்த்தை நடாத்தவெனக் கூறி ஆரம்பித்த அமைப்பு ஒருவார காலத்தினுள் பேச்சு மூச்சற்றுப்போனது.

இந்த அமைப்பின் தலைவராக மூத்த முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினரும், அமைச்சருமான எம்.எச். மொஹமட் நியமிக்கப்பட்டார். பதவிக்கான சண்டையில்லாமல் முஸ்லிம் எம்.பிக்கள் ஓரணியில் சேர்கிறார்கள் எனும்போதே, இது நீண்டகாலம் உயிர்வாழும் அமைப்பல்ல என்பதைப் புரிந்திருக்கமுடியும். இந்தக் கூட்டமைப்பால் உருப்படியாக ஏதும் செய்ய இயலுமாக இருந்தால் அதன் தலைமைப் பதவியை எம்.எச்.மொஹமட்டுக்கு வழங்குவதற்கு ரவூப் ஹகீம் சம்மதித்திருக்க மாட்டார்.

முஸ்லிம் எம்.பிக்கள் முஸ்லிம்களுக்காக ஒன்றுமே செய்கிறார்களில்லை என்று இலங்கைக் குடிமகன் எவனும் குற்றஞ்சாட்ட முடியாத வண்ணம் எல்லா எம்.பிக்களும் சேர்ந்து ஒட்டு மொத்த முஸ்லிம் சமூகத்திற்கும் "அல்வா" கொடுத்திருக்கிறார்கள்.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் இனப்பிரச்சனை விடயத்தில் கடைப்பிடித்துவரும் தன்னிச்சையான போக்குக் காரணமாகவே முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்களின் கூட்டமைப்பு "உயிரிழந்ததாக" அமைப்பின் செயலாளர் மயோன் முஸ்தபா கூறியிருந்தார். ஐ.தே.க அரசு பதவியில் இருக்கிறது. எம்.எச். மொஹமட் தலைவராக இருக்கிறார். அதே அரசில் அங்கம் வகிக்கும் செயலாளர், அமைப்புச் செத்துப்போனதற்கு ஹகீமைக் குறை கூறுகிறார்!? ஏன்? முஸ்லிம் காங்கிரஸைத் தவிர்த்து விட்டு ஒரு அமைப்பை உருவாக்கி வழிநடாத்தியிருக்கலாமே! அதுவும் முடியாது. பிறகேன் வீம்புக் கதைகள்...



> தேசிய முக்கியத்துவம் மிக்க இனநெருக்கடி சார்ந்த பிரச்சனையிலேயே தத்தமது கட்சி அரசியலை விட்டு வெளியில் வந்து ஒற்றுமையாகப் பணியாற்ற முடியாத முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்கள், வேறெதில் ஒன்று சேர்ந்துவிடப் போகிறார்கள்?

தேசிய முக்கியத்துவம் மிக்க இனநெருக்கடி சார்ந்த பிரச்சனையிலேயே தத்தமது கட்சி அரசியலை விட்டு வெளியில் வந்து ஒற்றுமையாகப் பணியாற்ற முடியாத முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்கள், வேறெதில் ஒன்று சேர்ந்துவிடப் போகிறார்கள்? முஸ்லிம்கள் குறித்த ஏதாவது ஒரு பிரச்சனை தீர்க்கப்பட்டால், அது தன்னால் நிகழ்ந்ததாக இருக்க வேண்டும் என்ற கொள்கையில் ரவூப் ஹகீம் உறுதியாக இருக்கிறார். குறைந்த பட்சம் முஸ்லிம்கள் எதிர்கொள்ளும் ஒரு தேசிய அனர்த்தத்தைத் தவிர்க்க எடுக்கப்படும் முயற்சிகளில் மாறுபட்ட அரசியல் கட்சிகளினது முஸ்லிம் உறுப்பினர்களின் பங்களிப்பைப் பெறுவதை முஸ்லிம் காங்கிரஸ் விரும்புவதாகத் தெரியவில்லை. இது வரவேற்கத் தக்கதல்ல. ஏனெனில், அரசாங்கம், புலிகள் என்ற இரண்டு மிகப் பெரிய சக்திகளுக்கு மத்தியில் சுழியோடித் தமது உரிமைகளைப் பெறவேண்டிய நிலையில் முஸ்லிம்கள் இருக்கிறார்கள்.

இத்தகைய சந்தர்ப்பம் ஒன்றில் நாங்கள் தேசிய தலைவர்கள் அதனால் வேறுயாரும் முஸ்லிம்களைப் பற்றி வாய்திறக்கக்கூடாது என்ற தொனியில் கருத்துரைப்பது புத்திசாலித்தனமானதல்ல. இன்று ஆட்சி அமைப்பதற்கு முஸ்லிம் காங்கிரஸின் ஆதரவு தேவை என்பதால் அரசாங்கத்தில் முஸ்லிம் காங்கிரஸ் முக்கிய பாத்திரம் வகிக்கின்றது. இந்நிலையில் ஏனைய சக்திகளையும் அரவணைத்துச் செல்லும் போக்கை ரவூப் ஹகீம் கடைப்பிடிப்பாரானால், அது அவரது தேசிய தலைமைத்துவத்தினை மேலும் மெருகூட்டுவதாக அமையும். முஸ்லிம்களின் பிரச்சனைகளைத் தீர்க்க உதவ முன்வரும் எவரையும் குறைத்து மதிப்பிடும் போக்கைக் கடைப்பிடிக்க வேண்டியதில்லை. பேரியல் அஷ்ர ..ப் போன்று "தனி வழி" செல்பவர்கள் தன்னந்தனியே போனாலும் கூட, முஸ்லிம் காங்கிரஸ் முயற்சித்தால் முஸ்லிம்களுக்கு ஆதரவான, பலம் வாய்ந்த பாராளுமன்ற சக்தியொன்றைக் கட்டியெழுப்ப முடியும்.

பர்ஸான்

## தினமுரசு சந்தா விபரம்

### சந்தாக் கட்டண அதிகரிப்பு விபரம்

இலங்கையில் தபால் கட்டண அதிகரிப்பு காரணமாக சந்தாக் கட்டணமும் உயர்த்தப்பட்டுள்ளது. அது சம்பந்தமான விபரம் பின்வருமாறு:

| நாடுகள் | ஒரு வருடம் | 6 மாதம் | 3 மாதம் |
|---|---|---|---|
| ஐரோப்பிய நாடுகள் | ரூ. 3000 | ரூ.1500 | ரூ.750 |
| அமெரிக்கா, கனடா | ரூ. 3650 | ரூ.1800 | ரூ.900 |
| மத்திய கிழக்கு நாடுகள் | ரூ. 2600 | ரூ.1300 | ரூ.650 |
| உள்ளூர் | ரூ. 850 | ரூ.450 | ரூ.250 |

சந்தா செலுத்தி தபாலில் தினமுரசு வாரமலரை பெறவிரும்புவோர் D.D. Enterprises எனும் பெயரில் எழுதப்பட்ட காசோலைகள் அல்லது வங்கிக் கட்டளைகளை முகாமையாளர் தினமுரசு 16A, Nelson Place, Wellawatta, Colombo-06. Srilanka என்ற முகவரிக்கு அனுப்பி பெற்றுக் கொள்ளலாம். இந்த முகவரிக்கு வந்து நேரில் பணம் செலுத்தவும் முடியும்.

உள்ளூரில் சந்தா பெற விரும்புவோர் சந்தாத் தொகையை காசுக் கட்டளையாக தினமுரசு வெள்ளவத்தை தபாற்கந்தோரில் மாற்றும் வண்ணம் 'Manager Thinamurasu' என்னும் பெயருக்கு கட்டளையிட்டு பதிவுத்தபாலில் Thinamurasu Varamalar 16A, Nelson Place, Wellawatta, Colombo-06. என்ற முகவரிக்கு அனுப்பிவைத்தல் வேண்டும்.


## மட்டக்களப்பு மாந்திரீகம்

உங்கள் பிரச்சினைகளுக்கு தீர்வுகண்டு எதிர்கால வாழ்வில் மகிழ்ச்சி பெறுவதற்கு, மட்டக்களப்பு மாந்திரீக வசியம் செய்து கொள்வதற்கு பரம்பரை வைத்திய மனோதத்துவ நிபுணர் டாக்டர் 'குட்டி' அவர்களுடன்

**DR. A.P.S. KUTTY** தொடர்பு கொண்டு வெற்றி பெறுங்கள். இரகசியம் வெளியாகாது.

50, THEATRE ROAD, NINTHAVUR-21, SRI LANKA. ☎ 067-50349

## ஹோமியோபதி சிகிச்சை

தமிழ்நாட்டின் பிரபல ஹோமியோபதி சிகிச்சை நிபுணரும் தமிழக அரசின் ஹோமியோபதி கவுன்சில் உறுப்பினருமான, Dr. R. தியாகராஜன் D.H.M.S,AMRSH (LON)

நீரிழிவு, ஆஸ்மா, மூட்டுவாதம், தோல் வியாதிகள், ஆண்மைக் குறைவு போன்ற நாட்பட்ட வியாதிகளுக்கும் சிறந்த முறையில் சிகிச்சை அளிக்கிறார்.

காலம் : 22.05.2002 முதல் 25.05.2002 வரை

இடம் : ஹோட்டல் கிறீன்லண்ட்ஸ், பம்பலப்பிட்டி.

தொலைபேசி : 585592, 581986.HOTLINE : 077-602513.

## அஸ்மா நோய்க்கு வைத்தியம்





- * தொய்வு
- * இளைப்பு
- * மூச்சுத்தட்டல்
- * நெஞ்சுச்சளி
- * இருமல்
- * மூக்கடைப்பு
- * தலைவலி
- * இழுப்பு
- * ஜாய்ச்சல்
- * மண்டைச்சளி
- * தடிமன்
- * கண் கடி
- * பீனிசம்
- * தும்மல்

போன்ற குணங்களுக்கு முழு சுகமடைய உடலுக்கு பாதுகாப்பான, பக்க விளைவுகள் அற்ற மருந்துகளைக் கொண்டு கிரந்தியான, குளிரான, சமிபாடு அடையாத உணவுகளை உண்ணுதல்,குளித்தல் போன்ற பல விளக்க முறைகளுடன் சிகிச்சை அளிக்கப்படுகிறது.

ஒருமுறை வைத்தியம் செய்து பாருங்கள் பலன் தெரியும்

டொக்டர் சுறாஜ்சோமசுந்தரம்

அஸ்மா சிகிச்சை நிபுணர்

Ph.DH(Ind); M.B.B.SCH (Cey)
Govt. Reg. No : A 1553 (1970)

25, சில்வெஸ்டர் வீதி, கல்கிசை மவுண்ட்லேவினியா - (கொழும்பு)
(பஸ்ஸால் இறங்க வேண்டிய இடம் ஓடியன் தியேட்டர்-காலிவீதி)

தொலைபேசி இல: 074-201582

இவ்விடத்தில் பழைய நோயாளர்களும் முன் அனுமதி பெற்ற புதிய நோயாளர்களும் தினமும் மாலையில் 4மணி முதல் 7மணி வரையும் செவ்வாய், வியாழன், சனி கிழமை நாட்களில் காலை 9மணி முதல் 12மணி வரையும் சிகிச்சை அளிக்கப்படுகிறது. புதிதாக வரும் நோயாளர்கள் மேற் கூறிய நாட்களிலும், நேரங்களிலும் தொலைபேசி மூலம்(074-201582) தொடர்பு கொண்டு உங்களுக்கு சிகிச்சை அளிக்கப்படும் நாளையும், நேரத்தையும் முன்அனுமதி பெற்றே (பதிவு செய்து) வரவேண்டும்.

## காண்டம்

உங்கள் வாழ்க்கையை சந்தோஷமாக்குங்கள். காண்டம் என்னும் நாடி ஜோதிடத்தில் உங்கள் பலாபலனை தெளிவாக அறிந்து எல்லாப் பிரச்சனைகளையும் தீர்ப்பதற்கு வழிகண்டு கடவுள் அருளால் நன்மை பெறுங்கள். நேரில் வரவும். வெளி நாட்டில் உள்ளவர்களும் தொலைபேசியில் தொடர்பு கொண்டு பார்க்கலாம்.

**S.Mani**

142-2/4, காலி வீதி, வெள்ளவத்தை, கொழும்பு-06.
சந்தைக்கு எதிர்ப்பக்கமாக

Tel: 074-519754

"உங்களது பெரிய பிரச்சனை, நடுத்தர பிரச்சனை, சின்னப் பிரச்சனை. நம்பிக்கையாக உங்களுக்கு செய்து தரப்படும் 100% உத்தரவாதம். உங்கள் பிரச்சனைகளுக்குரிய விடை உடனடியாக. உங்கள் பிரச்சனை எதுவாகினும் என்னுடன் தொடர்பு கொள்ளவும். துரிதகதியில் செய்து தரப்படும். பெண் பிரச்சனை, பாலியல் பிரச்சனை, வாழ்க்கையில் வெற்றி, பணக்காரனாக வேண்டுமா? தொடர்பு கொள்ளுங்கள்.

தொடர்புகொள்ளும் இடம்:

விலாசம் : PR. DANSOKHO ALI,
55. Rue des Poissonniers, 75018 Paris, France.
தொலைபேசி-0142552036

## சிங்கப்பூரில் இலங்கையர்களுக்கான திருமண வைபவங்களுக்கான சேவை

வெளிநாடுகளில் வாழும் இலங்கைத் தமிழர்களுக்கான திருமண சேவை சிறந்த முறையில் சமய முறைப்படி ஒழுங்கு செய்து கொடுக்கப்படும். மற்றும் பதிவுத் திருமணம் தங்குமிட வசதி, தங்கு மிடங்களில் சமைத்து சாப்பிடும் வசதி, போக்குவரத்து வசதிகள் அனைத்தும் சிறந்த முறையில் குறைந்த செலவில் ஒழுங்கு செய்து கொடுக்கப்படும்.

தொடர்பு: சிங்கப்பூர்
N.Thanga T.Prince,
No. 5, Starlight Road, Singapore- 217758,
Opposite Rangoon Road,
Tel : 2974924-2978619 H.P : 98501222

தொடர்பு: இலங்கை
P.Rajan
H.P: 072-840708, 348349.

## மனோதத்துவ வைத்தியம் (General Psycho Therapy)

### கண்டியிலும் சந்திக்கலாம்

அடிமனதில் பதிந்துள்ள தாழ்வு மனப்பான்மையை நீக்கி உங்களை நீங்களே வெற்றி கொள்ள நாடுங்கள் பிரபல மனோதத்துவ நிபுணர் DR.P.ஆறுமுகம். அவர்களை சந்தியுங்கள் இளம் சமுதாயத்தினரை வாட்டும் உடல் மெலிவு, கனவில் சக்தி இழத்தல், பயம், ஞாபக மறதி, நடுக்கம், வெட்கம், சந்தேகம், ஏமாற்றம், நித்திரையின்மை, போன்ற தன்னம்பிக்கை இழக்க காரணமான வியாதிகளை மனோதத்துவ சிகிச்சை மூலம் நீக்கி உங்களையே நீங்கள் வெல்லுங்கள்.

### SEXUAL DISORDERS (தாம்பத்திய கோளாறுகள்)

தாம்பத்திய பாலியல் குறைபாடுகளுக்கு நோயும் காரணமானாலும் 85% தாழ்வு மனப்பான்மையே காரணம். என்பதை 90 நிமிடத்தில் தான் குறைவற்ற ஆண் மகனாகிவிட்டேன். என்று அடி மனதில் பதியவைத்த பின்னரே பணம் பெறப்படும். வெளிநாட்டிலும், உள்நாட்டிலும், பல நூற்றுக்கணக்கான இளைஞர்களை சுகமாக்கிய ஆதாரங்கள் உண்டு.

### வெளிநாட்டில் உள்ளவர்களுக்கு விஷேட ஏற்பாடுகள்

உங்களின் தாம்பத்திய (பாலியல்) குறைபாடுகளை நீக்க வழியின்றி தவிக்க தேவையில்லை. முழு விபரத்தையும் கடித மூலம். விளக்கி எழுதவும். பின் எமது சில கேள்விகளுக்கு பதில் தெரிந்த பின் தன்னுடைய குறைகள் முற்றாக நீங்க ஏற்ற மனோதத்துவ வைத்தியம் பதிவு செய்யப்பட்ட ஒடியோ கெசட் மூலம் மனோநிலையில் குறையற்றவர் என்றும், உடல் நிலை பாதிப்புக்கு உயர்தர மூலிகை மருந்தும் பெற்று வெற்றி பெற்ற ஆண் மகனாகுங்கள். (அந்தரங்கம் உறுதியாக பேணப்படும்) கட்டாயம் முத்திரை செலவு அனுப்பவும்.

### மட்டக்களப்பு விலாசத்திற்கு மாத்திரம் கடிதத் தொடர்பு கொள்ளவும்

மனநிலை பாதிப்புக்கள், மன நோய்கள், "ஹிஸ்டிரியா" ஆச்சரியப்படும் வகையில் பலர் சுகமாகியுள்ளார்கள். நீரழிவு (கட்டுப்பாடான நடைமுறையுடனும் சில ஆசனப் பயிற்சியும் அத்துடன் எமது மருந்து பாவித்தும் பலர் நீரழிவு நோயில் இருந்து முற்றாக சுகமாகியுள்ளனர்) மற்றும் ஆஸ்மா, தலையிடி, வாதம், பயோரியா, வெள்ளை போதல், கிரந்தி நோய், குழந்தை பேறு இன்மை, இன்னும் தீர்க்க முடியாத வியாதிகளுக்கும், வைத்தியம் உண்டு. (கொழும்பில் விடுமுறை நாட்களிலும் சந்திக்கலாம்)

### கொழும்பில் மே 20-25 திகதி வரை

(செல்டெல் இலக்கம் மாற்றப்பட்டுள்ளது)

DR.P.ARUMUGAM S.A.M.P. REG. 9492
New Ahmed Tourist Inn, Bang Bang Building,
Entrance Bankshall Street,No. 10 Reclamation Road, Colombo 11.
T.P.074-722841,074-715546 செல்டெல்:072-910796(கண்டி,கொழும்பு நாட்களில்)

### கண்டியில் மே 26-27 திகதிகளில்

ஆசிரி மெடிக்கல் ஹோல் 45, பேராதெனிய ரோட், கண்டி T.P.074-474156

### கல்முனையில் ஜூன் 01, 02 திகதிகளில்

T.M.M. பாமஸி, கல்முனை. T.P. - 067- 29329

### வவுனியாவில் ஜூன் 08, 09 திகதிகளில்

(தயவு செய்து பதிவு செய்து கொள்ளவும்)
(Vanni Inn) 2ம் குறுக்கு தெரு, ஞான வைரவர் கோயில் ஒழுங்கை, வவுனியாவில் சந்திக்கலாம் T.P.024-22074, 21406.

கடிதத் தொடர்பு: RESIDENT T.P:- 065-24019
DR.P.ARUMUGAM S.A.M.P.,
NO.51/5. Koolavady Road, Batticaloa. SRI LANKA.


## உலக இஸ்லாமிய தமிழ் இலக்கிய மாநாடு-2002

### கட்டுரைப் போட்டி

எதிர்வரும் ஒக்டோபர் மாதம் இலங்கையில் நடைபெறவுள்ள உலக இஸ்லாமிய தமிழ் இல்கிய மாநாட்டையொட்டி இலங்கையின் பல்கலைக் கழகங்கள், கல்வியியற் கல்லூரிகள், ஆசிரிய பயிற்சிக் கலாசாலைகளுக்கிடையில் கட்டுரைப் போட்டியொன்றை நடத்த மாநாட்டுக் குழு தீர்மானித்துள்ளது.

'உயர் கல்விப் பாடத்திட்டத்தில் இஸ்லாமிய இலக்கியத்தின் தேவை' என்ற தலைப்பில் புல்ஸ்கப் தாளில் பத்துப் பக்கங்களுக்குள் அடங்கக் கூடியதாக கட்டுரை அமைதல் வேண்டும். போட்டியில் கலந்துகொள்ளும் பல்கலைக் கழக மாணவர்களின் ஆக்கங்கள் அவர்களது துறைத் தலைவர்களாலும், கல்வியியற் கல்லூரிகள் மற்றும் ஆசிரிய பயிற்சிக் கலாசாலைகளிலிருந்து போட்டியில் பங்கு கொள் வோர்களின் ஆக்கங்கள் அவர்களது கல்லூரி முதல்வர்களினாலும் அத்தாட்சிப்படுத்தப் பட்டிருத்தல் வேண்டும்.

போட்டியில் முதலாம் இரண்டாம் மூன்றாம் பரிசுகளைப் பெறுவோருக்கு முறையே ரூபா 7000/-, 5000/-, 3000/- பணப்பரிசுகளோடு சான்றிதழ்களும் மாநாட்டின்போது வழங்கப்படும்.

கட்டுரைகள் 2002ஆம் ஆண்டு ஜூலை மாதம் 15ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக பின்வரும் முகவரிக்கு அனுப்பி வைக்கும்படி மாநாட்டின் பொதுச் செயலாளர் அஷ்ரஃப் சிஹாப்தீன் தெரிவித்துள்ளார்.

General Secretary
World Islamic Tamil Literary Coference-2002
*Ministry of Port Development & Shipping*
*Ministry Of Eastern Development & Muslim Religious Affairs*
*45, Leyden Bastian Road,*
*Colombo.01*

இதேவேளை இம்மாநாட்டில் பேராளர்களாகக் கலந்துகொள்ள விரும்பும் இலக்கியத்தில் ஈடுபாடுள்ளவர்கள் முன் கூட்டியே தங்களைப் பதிவு செய்து கொள்ளும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

பங்குகொள்ளும் பேராளர்களுக்கு மாநாடு நடைபெறும் தினங்களில் பகலுணவும் காலை, மாலை தேனீரும் சிற்றுண்டியும் வழங்கப்படுவதோடு மாநாட்டில் வெளியிடப்படும் பிரசுரங்களுடன் மாநாட்டுச் சிறப்பு மலர், ஆய்வரங்குக் கோவை என்பனவும் வழங்கப் படும். தங்குமிட வசதிகள் செய்து தரப்படமாட்டா. பார்வையாளர்களாக எவரும் கலந்துகொள்ள முடியும். ஆனால் மேற்குறித்த வசதிகள் எதுவும் செய்து தரப்படமாட்டாது.

மட்டுப்படுத்தப்பட்ட அளவிலேயே பேராளர்கள் பதிவு செய்யப் படவுள்ளதால் மேலுள்ள முகவரிக்கு எழுதி பதிவுப் படிவம்-விபரத் திரட்டு ஆகியவற்றைப் பெற்றுக்கொள்ளுமாறு மாநாட்டுப் பொதுச் செயலாளர் கோரியுள்ளார்.

## இளஞ்செழியன் பாராட்டுக்குரியவர்தான்!

கடந்த முரசிலே, நீதிபதி இளஞ்செழியனின் சேவையைப் பாராட்டிய, கொழும்பு கம்பன் கழகம், மற்றும் தினமுரசு ஆகிய இரண்டின் செயலும் தவறு என்று ஒரு வாசகர் குறிப்பிட்டிருந்தார்.

அவர் எழுதிய முறையிலிருந்து அவர் அரைகுறை விளக்கத்தில் இருப்பது புரிகிறது. நீதிபதி இளஞ்செழியன் உண்மையிலேயே, நீதித் துறைக்கு குறிப்பாக, தமிழர்களுக்கு ஓர் வரப்பிரசாதமானவர்.

அவருடைய துணிச்சலான செயல்களையும், வழக்குகளின் விரைவான தீர்ப்புகளையும் இங்கே பட்டியலிட இடம்போதாது. அரசாங்கத்திற்கெதிரான தீர்ப்புகள் சொல்கிறார் என்பதற்காகவும் கம்பன் கழகம் அவரைப் பாராட்டி கௌரவம் அளித்திருப்பதாகவும் அது கம்பனுக்குச் செய்யும் துரோகம் எனவும் எழுதி இருந்தார். அது மிக தவறான கருத்தாகும். ஏன் நீதிபதி இளஞ்செழியன் அவர்கள், தனது நீதிவயவத்தில், நடந்த சமூக சீரழிவுகள், மோசடிகள், காலாசார அழிவுகளுக்கு எதிராக தீர்ப்பு வழங்கியதை அவர் மறந்து விட்டாரா அல்லது தெரியாதா? அடுத்தது நீதித்துறைக்கும் கம்பனுக்கும் நெருங்கிய தொடர்பு இருக்கிறது. அது இலக்கிய வாதிகளுக்குப் புரியும்.

கம்பன் கழகம், அவர் குறிப்பிட்டது போல, தனியே இலக்கியத் துறைக்கு மட்டும் விருது வழங்குவதில்லை. மருத்துவத்துறையிலும், வைத்தியர் சிவகுமாருக்கு விருது வழங்கியதை மறக்க முடியாது.

எங்கேயோ இருக்கும் வல்லரசான அமெரிக்காவே அவர் சேவையைக் கௌரவித்து அதியுயர் விருதாக ஒரு மாநிலத்திலேயே அவரை ஒருநாள் மேயராக இருத்திக் கௌரவித்தை அறிந்து கொள்க.

அதுபோலவே சிறந்த ஒருவர் பற்றி, ஏனையோருக்கு ஒரு எடுத்துக்காட்டாக இருப்பவரைப் பற்றி எழுதுவது ஒரு சிறந்த பத்திரிகையின் கடமை. அதைத்தான் தினமுரசு செய்தது.

ஏனைய மாவட்டத்திலுள்ளவர்கள் இவர்போல ஒரு நீதிபதி நமக்கு கிடைப்பாரா? என்று ஏங்கும்போது, வவுனியாவில் இருந்தே ஒரு வாசகர் இப்படி புரியாமல் எழுதி இருப்பது மனவேதனைக்குரியது. அது மட்டுமன்றி அவர் அவரை அறியாமலேயே நீதித்துறையை அவமதித்த குற்றத்திற்கும் ஆளாகி இருக்கிறார் என்பது குறிப்பிடத்தக்கது.

(வவுனியா, நாகேந்திரன் உங்கள் மனம் புண்பட்டால் என்னை மன்னிக்கவும் என தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன்.)

க. ஜெனார்த்தனன், கொழும்பு.


## மலையாள மாந்திரிக வசியம்




உங்கள் வாழ்க்கையில் தொடர்ந்தும் தோல்வியா? நிம்மதியில்லையா? உங்கள் ஆசைகள் நிறைவேறவில்லையா? இதோ உங்களுக்கு ரிஷிகள் கையாண்ட மாபெரும் மலையாள மாந்திரிக சக்தி கவசம் என் கையில் உண்டு. கணவன்,மனைவி பிணக்குத் தீர்ந்து சுகபோக வாழ்வு பெற, பிரிந்த காதல் ஒன்று சேர, காதல் கைகூட, தீரா நோய் தீர, குழந்தைப் பாக்கியம் கிட்ட, திருமணம் நடக்க, கல்வியில் பெருபேறு கிட்ட, குபேர வாழ்வு பெற, அருள் ஞானத்துடன் கூறப்படும் ஜாதகக் கணிப்பு என்றுமே பிழைத்ததில்லை. நடப்பது, நடக்கப்போவது, நடக்க இருப்பது, இன்றுஇந்த மாதம், இந்த வருடம் உங்களுக்கு எப்படி எனத் தெரிந்து அறிந்து செயல்பட ஜாதக ரீதியாகவும், கைரேகை ரீதியாகவும், காண்ட அடிப்படையிலும் அன்றன்றாட நிகழ்வுக்குத் தக்கவாறு அனுசரித்துச் செயற்பட மலையாள மாந்திரிக சித்தர் டாக்டர் P.K. சாமி (J.D.G.A.N) J.P அவர்களைச் சந்தியுங்கள். வெளிநாட்டவர்களுக்கு விஷேச சலுகை உண்டு. மாந்திரிக சக்திக்குப் பெருமிதம் எமது 39 வருட சேவையே! இவ்வரிசையில் நாம் ஒருவரே!

இனி என்னைப்பற்றி

அன்றன்றாடு அருள் சக்தி வழங்கிவரும் அம்மன் துர்க்கையின் அருள் அவ்வப்போது எனக்குக் கிடைக்கின்றது. இவைகளை ஒட்டியே இந்தச் சோதிட மலையாள மாந்திரிக நிறுவனம் ஒரு மாபெரும் P.K.SAMYASSOCIATE (PVT) LTD வரையறுக்கப்பட்ட நிறுவனமாகச் செயல்படுகின்றது. இதையொட்டியே வாங்கும் பணத்திற்கு ரசீது வழங்குகின்றோம்.

* அதி விசேஷமாக வெளிநாட்டவர்களுக்கு ஏனோதானோ என்றில்லாது அவர்களின் எண்ணங்களை எண்ணியவாறு செயல்திறனைக் காட்டியதனாலேயே அவர்களின் ஆயிரக்கணக்கான ஆசீர்வாதக் கடிதங்கள் என்னிடம் இருக்கின்றன.

* உன்னதச் சேவை என்பதால் என்னைப் பாராட்டி பேராசிரியர் பட்டம் தந்தார்கள். கலாநிதி பட்டம் கிடைத்தது. அகில இலங்கை சமாதான நீதவானாக நியமித்தார்கள். கருணாகர பூஷணம் பட்டம் கிடைத்தது. பங்களாதேசத்தில் சோதிட ஆராய்ச்சித்துறையில் என்னை அங்கத்தவராகச் சேர்த்துக்கொண்டார்கள். இன்னும் எத்தனை எத்தனையோ பட்டங்கள். இதற்குக் காரணம் எனது உண்மையான, மனச்சாட்சிக்கு விரோதமற்ற சேவையே! இனி உங்கள் குறை என்ன?



**இத்துறையில் விசா, மாஸ்டர் கார்ட் வசதி மற்றும் இன்ரநெட், வெப் சைட், ஈ மெயில், ஃபக்ஸ் வசதிகள் எம்மிடம் மாத்திரமே உண்டு.**

இங்கு தீய வேலைகளுக்கு இடமில்லை. நுவரெலியாவில் மாத்திரமே கிளைக் காரியாலயம் உண்டு.

### கொழும்பில்

162, கொட்டாஞ்சேனை வீதி,
மேபீல்ட் வீதி
(லிட்டில் ஃப்ளவர் பாலர் பாடசாலைக்கு முன்),
கொழும்பு-13.
தொலைபேசி: 466271, 466571, 342463, 466620, 431137, 466820
தொலை நகல்: 00941-344831

### நுவரெலியாவில்

33, டெய்லி ஃபெயார் கொம்பிளெக்ஸ்,
கண்டி வீதி, நுவரெலியா.
தொலைபேசி: 052-22508, 35097, 23093, 23336, 23570
தொலைநகல்: 00945-235097
ஈ.மெயில்: drpksamy@sltnet.lk
வெப் சைட்: www.imexpolanka.com/drsami

அலசுவது-இராஜதந்திரி

# 90 நாள் புரிந்துணர்வு ஒப்பந்தம்!

இனப்பிரச்சனைத் தீர்வு முயற்சிகளுக்கு அத்திபாரமிட்ட ரணில்-பிரபா புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்தாகி மூன்று மாதங்கள் அதாவது தொண்ணூறு நாட்கள் இம்மாதத்துடன் பூர்த்தியாகின்றன.

இத்தொண்ணூறு நாட்களில் ஆங்காங்கே இசகு பிசகாகச் சில பிரச்சனைகள் ஏற்பட்ட போதிலும் இனப்பிரச்சனைத் தீர்வு விடயத்தில் அரசியல் அணுகுமுறைகளுக்கே கூடுதல் முக்கியத்துவமளிப்பதில் அரச தரப்பிலும், புலிகள் தரப்பிலும் மிகுந்த ஆர்வம் காட்டப்பட்டு வருகின்றது.

ரணில்-பிரபா ஒப்பந்தம் கைச்சாத்தானதும் அந்த ஒப்பந்தம் எவ்வளவு தூரம் நீடித்து நிலைக்கும் என்ற கேள்வியே அனைவரிடத்திலும் தோன்றியிருந்தது.

ஏனெனில், இதுபோன்ற கடந்த கால ஒப்பந்தங்களின் ஆயுட்காலம் மிகக்குறுகியதாகவே இருந்தது. வந்த வேகத்திலேயே அந்த ஒப்பந்தங்கள் வலுவிழந்துமிருந்தன.

ஆயினும் ரணில்-பிரபா ஒப்பந்தம், நோர்வேயின் அனுசரணையோடு பேணிப் பாதுகாக்கப்பட்டுவருவதாகவே இருக்கின்றது.

தற்போது மூன்று மாதங்களைப் பூர்த்தி செய்த நிலையில் ரணில்-பிரபா ஒப்பந்தம் வெறுமனே எழுத்து வடிவில் இருக்காது முழுஅளவில் விரிவான அமுலாக்கத்தை வேண்டியதாகவும் இருக்கின்றது.

இதன் மூலமே இனப் பிரச்சனைத் தீர்வுக்கான ஏனைய நடவடிக்கைகளையும் செவ்வனே திட்டமிட்டுச் செயற்படுத்த முடியும்.

கடந்த பெப்ரவரி மாதம் 26ம் திகதி ரணில்-பிரபா ஒப்பந்தம், இருதுருவங்களை நெருங்கிவரச் செய்தது போன்று கைச்சாத்தாகியிருந்தது.

இந்த ஒப்பந்தத்தையடுத்து அரசியல் ரீதியாக முன்னேற்றகரமான நடவடிக்கைகள் பல ஏற்படலாயின. ஆயினும், ஓர் அத்திபாரத்தின் நிலையில் மட்டும் ரணில்-பிரபா ஒப்பந்தம் இருக்கிறதே தவிர, அதன் மீது கட்டியெழுப்பப்பட வேண்டியவை இன்னும் நிறையவே இருக்கின்றன.

ஒப்பந்தம் கைச்சாதானது முதல் அரசதரப்பு, புலிகள், எதிர்க்கட்சிகள், படைத்தரப்பு மற்றும் அனுசரணையாளர்களான நோர்வே ஆகியவற்றின் செயற்பாடுகளை வெவ்வேறாக ஆராயும் பட்சத்தில் தீர்வு முயற்சிகள் எத்தகைய வடிவில் இருக்கின்றன என்பதை நன்கறியமுடியும்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான ஐக்கிய தேசிய முன்னணி அரசு மிக அவதானமான முறையில் வடக்கு-கிழக்கு பிரச்சனை தொடர்பாக இருந்து வருவதையே அவதானிக்க முடிகிறது. சமரச முயற்சிகளில் இடைஞ்சல்கள் தோன்றி, மீளவும் ஒரு மோதல் வெடிக்கலாகாது என்பதில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க உறுதியாகவிருக்கின்றார்.

தமது அரசின் நிலைப்பாடாக மட்டுமல்லாது, நாட்டு மக்களிடையே கூட அரசியல் அணுகுமுறைகளின் அவசியத்தைப் பிரதமர் தொடர்ந்து வலியுறுத்தி வருகின்றார்.

கடந்த வாரம் தெற்கே மாத்தறையில் இடம்பெற்ற பொதுக்கூட்டமொன்றில் உரையாற்றியபோது கூடப் பிரதமர் ரணில் மீளவும் ஒரு யுத்தத்தை நாடு தாக்குப்பிடிக்காது என்பதை அழுத்தம் திருத்தமாகக் குறிப்பிட்டிருந்தார்.

உள்நாட்டில் சமரச சூழ்நிலைகளைக் கட்டியெழுப்பிவரும் அதே சமயம், சர்வதேச ரீதியிலான ஆதரவைப் பேணுவதிலும் பிரதமர் அக்கறை காட்டிவருகின்றார். இத்தடவை சமரச முயற்சிகளில் முன்பொருபோதுமில்லாதவாறு சர்வதேச சமூகத்தின் அக்கறை காணப்படுகிறது.

இருப்பினும் ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தம்வரை மட்டுமே முன்னேறி, அதன் அமுலாக்கத்தில் தொண்ணூறு நாட்களையும் கடந்துவிட்ட நிலையில், சமரச நடவடிக்கைகளுக்கு வேட்டு வைக்கும் சக்திகளும் மும்முரமாகவே இருக்கின்றன.

எதிர்த்தரப்பிலுள்ள அரசியல் கட்சிகளிடையே மட்டுமல்ல, படைத்தரப்பிலும் கூட குந்தகங்களை ஏற்படுத்தும் போக்குக் காணப்படுகிறது.

அண்மையில் கிழக்கில் வாகரையில் இடம்பெற்ற கடற்படையினர் சம்பந்தப்பட்ட சம்பவம் யுத்த நிறுத்தத்திற்குச் சவாலாக அமைந்திருந்தது. ஆனால், நோர்வே யுத்த நிறுத்தக் கண்காணிப்பாளர்கள் மேற்கொண்ட பக்கச் சார்பற்ற விசாரணைகளையடுத்து நிலைமை கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவரப்பட்டிருந்தது.

வாகரைச் சம்பவத்தில் யுத்த நிறுத்தக் கண்காணிப்பாளர்களது தலையீடுகள் இல்லாதிருக்கும் பட்சத்தில் நிலைமை மோசமடைந்திருக்கவும் கூடும்.

இதுதவிர, புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் பிரகாரம் வடக்கு-கிழக்கில் இருக்கும் கோயில்கள், தேவாலயங்கள், பாடசாலைகளிலிருந்து ஆயுதப்படையினர் வெளியேறியிருக்க வேண்டும். ஆனால், இது விடயத்தில் தொடர்ந்து தாமதம் நிலவுகின்றது. வடக்கு-கிழக்கின் பொது இடங்கள் பலவற்றில் படையினர் தொடர்ந்து நிலைகொண்டுள்ளனர்.

இதேவேளை வவுனியாவுக்கப்பால் யாழ்ப்பாணம் வரையிலான ஏ-9 கண்டிவீதி போக்குவரத்திற்காகத் திறந்து வைக்கப்பட்டுள்ளபோதிலும் வடக்கிற்கும், தெற்கிற்குமிடையே இவ்வீதியூடாகப் பயணம் செய்யும் மக்கள் தொடர்ந்து பல்வேறு சிரமங்களுக்கு முகங்கொடுத்தவர்களாக இருக்கின்றனர்.

சீரான தங்கு தடையற்ற பஸ் போக்குவரத்தை ஏ-9 வீதி வழியாக ஏற்படுத்துவதில் இழுபறி நிலை காணப்படுகிறது.

இடையிடையே தோன்றும் பிரச்சனைகள் சிறியவையாக இருப்பினும், இவற்றினால் சமரச நடவடிக்கைகள் குறுக்கீடுகளைச் சந்திக்காதிருப்பதையே உறுதி செய்ய வேண்டியதாக இருக்கின்றது.

தற்போதைய தீர்வு முயற்சிகளைப் பொறுத்தவரை அனுசரணையாளர்களாக இயங்கிவருகின்ற நோர்வேயின் பங்களிப்பு குறிப்பிடத்தக்கதாகவே இருக்கின்றது. ரணில்-பிரபா புரிந்துணர்வு ஒப்பந்தத்தைக் கைச்சாத்திட வைத்ததுமுதல் நோர்வே ஆற்றிவருகின்ற பங்களிப்புக்கள் அரச தரப்பையும், புலிகள் அமைப்பையும் முறுகல் நிலையிலிருந்து விலகி இருக்கச்செய்வதாகவே இருக்கின்றது.

இலங்கையில் சமரச நடவடிக்கைகளுக்கெதிரான கோஷங்கள் வெளிவந்த வண்ணமிருக்கின்றன. ஆயினும், நோர்வே தரப்பின் பிரதம அனுசரணையாளராகச் செயற்படும் அந்நாட்டின் பிரதி வெளிவிவகார அமைச்சர் விடார் ஹெல்கெசென், தமது நடவடிக்கைகளில் நம்பிக்கை தளராதவராகவே இருந்து வருகின்றார்.



அண்மையில் இலங்கை வந்திருந்த விடார் ஹெல்கெசன் முக்கிய சந்திப்புக்கள் பலவற்றை மேற்கொண்டிருந்தார். அதன் பின்னர் அவர் கருத்து வெளியிட்டபோது சமரச முயற்சிகள் திருப்திகரமான முறையில் முன்னேறிக்கண்டுவருவதாகக் கூறியிருந்தார்.

எது எப்படியிருப்பினும், புரிந்துணர்வு ஒப்பந்தத்துடன் ஓர் அத்திபார நிலையில் இருக்கின்ற சமரச நடவடிக்கைகளைக் காலந்தாழ்த்தாது விரைவாக மேலே கட்டியெழுப்பவேண்டியதே அவசியமானதாகின்றது.

கடந்த வாரம் மாத்தறையில் இடம்பெற்ற பொதுக்கூட்டத்தில் உரையாற்றிய பிரதமர், புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் மூன்றுமாத காலம் பூர்த்தியான பின்னரே பிரதான பேச்சுவார்த்தைகள் பற்றிய முடிவுகள் எடுக்கப்படும் எனத் தெரிவித்திருந்தார்.

அத்துடன் ஒரு நீண்ட காலப் பிரச்சனையாக இருக்கும் வடக்கு-கிழக்கு விவகாரத்தைத் தீர்ப்பதற்குப் போதியளவு கால அவகாசம் தேவை என்பதையும் பிரதமர் சுட்டிக்காட்டியிருந்தார்.

இதேவேளை இலங்கையில் சமரச நடவடிக்கைகளுக்கான எதிர்ப்புக் கோஷங்கள் எதிர்க்கட்சித் தரப்பிலிருந்து வெளிப்பட்டுள்ள அதேசமயம், இந்தியாவின் தமிழ்நாட்டிலிருந்தும் குட்டையைக் குழப்பும் அறிகுறிகள் தோன்றியுள்ளன.

இலங்கைக்கு வெளியே தமிழநாடு முதலமைச்சர் ஜெயலலிதா ஜெயராம் புலிகள் அமைப்பிற்கு எதிராகப் போர்க்கொடி உயர்த்த ஆரம்பித்துள்ளார்.

இந்தியாவில் இலங்கை விவகாரத்தைப் பொறுத்தவரை இரு வேறுபட்ட தன்மைகள் காணப்படுகின்றன.

தமிழகத்தில் முதலமைச்சர் ஜெயலலிதாவின் நிலைப்பாடு எத்தகையதாயினும் தமிழக மக்களிடையே இலங்கை இனப்பிரச்சனைக்குப் புலிகளுடன் பேச்சுக்கள் நடாத்தப்பட்டு தீர்வு காணப்படவேண்டுமென்ற நிலைப்பாடே வலுப்பெற்றதாக இருக்கின்றது.

ஆனால், இந்தியாவில் நிலவுகின்ற அரசியல் சூழ்நிலை வேறாகும். தமிழகத்தில் இருப்பது போன்று வட இந்தியாவில் எல்.ரீ.ரீ.ஈ மீதான ஆதரவோ அல்லது இலங்கைத் தமிழர்கள் மீதான அனுதாபமோ குறிப்பிடத்தக்கதாக இல்லை.

இந்நிலையில் இலங்கையில் மட்டுமல்ல. இந்தியாவில் கூட வடக்கு-கிழக்குப் பிரச்சனைத் தீர்வு குறித்த ஆதரவான மற்றும் எதிரான சக்திகள் செயற்பட்டுவருபவையாகவே இருக்கின்றன.

எனவே, தொடர்ந்தும் புரிந்துணர்வு என்ற வரையறைக்குள்ளேயே சுழன்று கொண்டிராது, அதற்கப்பால் ஆக்கபூர்வமான சமரச நடவடிக்கைகளைக் கட்டியெழுப்புவதே அடுத்த கட்ட நகர்வாக இருக்க வேண்டியதாகின்றது.

## அதிரடி அய்யாத்துரை



கூட்டமைப்பாருக்குப் புலிகளோட முதற் சந்திப்பை விட இரண்டாம் சந்திப்பு கொஞ்சம் ட்ரஃப்பாம். அரசாங்கத்தின்ர யுத்த நிறுத்த மீறல்களுக்கு கூட்டமைப்பார் உருப்படியான நடவடிக்கையேதும் செய்ததாக் காணேல்லையெண்ட அதிருப்தியோட சில ஹோம் வேர்க்குகளும் குடுத்து மாசாமாசம் சந்திக்க வரவேணுமெண்டு சொல்லி அனுப்பியிருக்கினமாம். அவையிற்ற இப்ப இந்தப் புதுப் பாட்டக் குடுத்தால் இப்பிடிப் பாடுவினமோ எண்டு ஒரு கற்பனை.

முதலாம் சந்திப்பில்... நாம் அறிமுகமானோமே,  
இரண்டாம் சந்திப்பில்... சில ஓடர்கள் தந்தீரே,  
மூன்றாம் சந்திப்பில் என்ன நடக்கும்?  
நான்காம் சந்திப்பில் பனிஷ்ட்மென் கிடைக்கும்?  
வயித்தக் கலக்குது வயித்தக் கலக்குது வயித்தக் கலக்குதடி.  
வேண்டாமிந்தப் பொலிட்டிக்ஸ் என்றே வாழ்க்கை வெறுக்குதடி....

முதலாம் சந்திப்பில கலந்துகொண்ட எங்கட புரட்சிகரக் கட்சித் தலைவர் இரண்டாம் சந்திப்பில மிஸ்ஸிங்காகி அவற்ற யூனியர்தான் புலிகளைச் சந்திக்கப் போனது ஏன் தெரியுமோ? தாய்லாந்துப் பேச்சுக்கு கூட்டமைப்பாரையும் அனுப்பலாந்தானேயெண்டு ஒரு நப்பாசையோட கேட்டுட்டாராம். அதாலதான் ரெண்டாம் சந்திப்புக்கு அவருக்கு அழைப்பு வரேல்லையாம். உயர்மட்டச் சந்திப்புகளுக்குத்தான் தான் தேவை, இரண்டாம் மட்டத் தலைமைகளோட நடக்கிற சந்திப்புகளுக்கு தான் அவசியமில்லையெண்ட கணக்கா காரணம் சொல்லிச் சமாதானப் பட்டுக் கொள்ளுறாராம் அவர். என்று தெளியும் இந்தப் 'பிரேமையோ!'

ஈ.பி.எப்., ஈ.ரி.எப். குடுக்க ஏலாத அளவுக்க திறைசேரி நிதி நிலைமை அடிக் கிணத்துக்கு வத்தி பட்டக் கிடங்குத் தண்ணியிலதான் காலம் போகுது. சீ.ரீ.பீ.இல சம்பளம் குடுக்கக் காசில்லையெண்டதுக்கு பஸ்சுகளை வித்துச் சம்பளத்தக் குடுங்கோவெண்டு அரசாங்கம் கைவிரிச்சிட்டுது. போன அரசாங்கத்தின்ரை கடைசிநேர கடன்களையும் வேற அடைக்கவேண்டிக் கிடக்குது. சீனாவில இருந்து வாங்கின ஆயுதங்களுக்குக் காசு குடுக்க ஏலாமல் போனதால வித்தவை வழக்குப் போடவும் வெளிக்கிட்டினம். கடைசி நம்பிக்கையா, ஜூனில நடக்க இருக்கிற கடன் வழங்கும் நாடுகளின்ரை கூட்டத்தைத்தான் நம்பியிருக்கினம். அதுவரைக்கும் சமாதானத்த ஓட்டிக்கொண்டு போகவிடாமல் புலிகளைச் சீண்டிற வேலைக்கு ஏன் போகினமெண்டு கடற்படைகளைச் சினக்கினமாம் உள்ளுக்குள்ள.

மே முதல் திகதியில புலிகள் தடை நீக்கப்படுமெண்டு எங்கட அமைச்சர் மகேஸ்வரன் அறிக்கை விட்டதைப் பிழையான தகவல்கள முந்தி விழுந்து கக்கிறாரெண்டு கடிந்த அமைச்சர் பீரிஸ், ஜூ ன் மாச நடுப்பகுதியில பேச்சுவார்த்தை தொடங்குமெண்டு தெரிவிச்சுப்போட்டு இப்ப அது இன்னும் பிந்தும்போல கிடக்கெண்டு இழுக்கிறார். மகேஸ்வரன் சொன்னதுக்கு எகிறினவர் தான் சொன்னது பிசகேக்க என்னவாம் சொல்லப்போறார்? பெரியாக்கள் பிழைவிட்டால் பிழையில்லையோ? பாவம் மகேஸ்வரன்!

ஆடி மாசம் இலங்கையில ஆபத்தான மாசமாத்தான் இருந்து வருகுது. ஆடிக் கலவரம் மட்டுமில்ல கன கெடுதிகள் அதிலதான் நடந்தது. எங்கட பேச்சுவார்த்தையும் ஆடியாடி மெல்ல ஆடி மாசத்துக்குப் பின்னேறிக்கொண்டு போகுது. அறிகுறிகள் நல்லதாக் காணேல்லை பாருங்கோ. கலியாணத்தில கூட பேச்செண்டு வந்தால் சட்டுப் புட்டெண்டு காரியத்தை முற்றாக்கிப் போடுறவை ஏனெண்டால் பிந்தவிட்டால் பிசகிப் போயிடுமெண்டுதான். எங்கட அரசியலிலயும் இழுபட்ட பேச்சுக்கள் இழுபறியில முடிஞ்சதுதான் அனுபவம். பிந்தப் போடுறது நல்லதில்லையெண்டத மட்டும் சொல்லிவைக்கிறன். புரிஞ்சால் சரி!


ஜனநாயகக் கட்சித் தலைவர் இந்த நேரத்தில இந்தியா போனது ஏனெண்டு எங்கட அரசியல் வட்டாரத்தில பெரும் சமுசியமாக் கிடக்குது. மாற்றுத் திட்டமேதும் பின்புலத்தில உருவாகுதோவெண்டும் சந்தேகமாக் கிடக்காம். அவையிட்டக் கேட்டால் வெறுமனே மருத்துவக் காரணங்களுக்காகப் போயிருக்கிறாரெண்டினம். யார் நம்புவான்?

# அந்தி மயங்கும் நேரத்தில்....

**வா**ழ்க்கையில் செக்ஸ் என்பது இனிமையானது. அது குறித்த ஆராய்ச்சிகளில் பலர் மண்டையைப் பிய்த்திருக்கிறார்கள். ஆனாலும், செக்ஸ் பற்றிப் புதிது புதிதாக ஏதாவது தகவல்கள் வெளிவந்து கொண்டேயிருக்கின்றன.

உடலுறவுச் சக்தியை லிபிடோ சக்தி எனக் கூறுகிறார்கள். இந்தச் சக்தி ஆண், பெண் இருவருக்கும் வித்தியாசமாக அமைகின்றது.

பெண்களுக்கும், ஆண்களுக்கும் ஒரே நேரத்தில் உடலுறவு ஆசை உண்டாவதில்லை. ஆண்களுக்கு அதிகாலை நேரத்திலும், பெண்களுக்கு அந்தி மயங்கும் நேரத்திலும் கலவி ஆசை ஏற்படுவதாக ஆராய்ச்சிகள் கூறுகின்றன. அபூர்வமாகச் சில நேரங்களில் மட்டுமே ஆண், பெண் இருவருக்கும் ஒரே நேரத்தில் கலவி ஆசை கிளர்ச்சி பெற்றெழுகிறது. கிளிரோறிஸ் என்ற உறுப்புத்தான் பெண்களுக்கு ஆசையைக் கிளர்ச்சியுறச் செய்கிறது.



உடலுறவு குறித்து ஆர்வம் இல்லாத நேரத்தில் ஆண் தனது இணையாகிய பெண்ணின் கிளிரோறிஸைத் தடவி, அவளுக்குக் காம இச்சையை ஊட்டுவதும் உண்டு. கிளிரோறிஸ் என்பது பெண்ணின் மர்ம ஸ்தானத்தில் அமைந்துள்ளது. இதில் விசேஷம் என்னவென்றால், ஆண்களைவிடப் பெண்களுக்குத்தான் எல்லாப் பருவத்திலும் காம உணர்வு அதிகம் என ஆராய்ச்சிகள் தெரிவித்திருக்கின்றன. இதுபோலவே உடலுறவின் போதும் ஆண்களுக்குத்தான் உடலில் எளிதாக தளர்வு ஏற்படுகிறது.

உடலுறவு குறித்துக் கற்பனை செய்யாத மனிதர்கள் மிகக் குறைவு எனக் கூறலாம். அதிகமான காம உணர்வுள்ள ஒரு ஆண் பல பெண்களுடனும், ஒரு பெண் பல ஆண்களுடனும் பல முறைகளில் இனச்சேர்க்கை செய்வதாகக் கற்பனை செய்வதும் உண்டு.

காம உணர்வானது மனிதர்களின் கற்பனையில் பல முறைகளில் கையாளப்பட்டு வருகிறது. "ஸாடிசம்" என்பது காமக் கேளிக்கையின் போது தனது துணையை வேதனைப் படவைத்து அந்த வேதனையைச் சுகமாகக் கருதி தனது காம உணர்ச்சியைத் தணித்துக்கொள்ளும் அரக்கத் தன்மையுடையதாகும்.

---

யார் இந்த மாடல் அழகிகள் என்று தெரிகிறதா? இந்திய கிரிக்கெட் அணியினர்தான்.

இப்படியொரு வித்தியாசமான போஸில் நிற்பதாக கிராபிக்ஸ் மூலம் வடிவமைக்கப் பட்டுள்ளது.

பட உதவி: செல்வி ஜெயவாணி குமாரதேவன்



---





பட உதவி: ஜோன் நிருபன்

---

## காதலன் பிரிவால்

# போதையை நாடும் பிரிட்னி!



**பொப்** உலகின் புகழ் பெற்ற பாடகியான பிரிட்னி ஸ்பியர்ஸ் தற்போது மிக மோசமான போதைப் பழக்கத்திற்கு ஆளாகியுள்ளார். சமீபத்தில் அவர் கலந்து கொண்ட அமெரிக்க, ஐரோப்பிய இசைப் பயணத்தின்போது ஒய்வின் பெரும்பகுதியை போதை மயக்கத்திலேயே கழித்ததாக "நஷனல் இன்குவரி" குறிப்பிட்டுள்ளது.

இரவு விடுதியொன்றில் அதிகமாகக் குடித்துவிட்டு மது மயக்கத்தில் மேலாடையைக் கழற்றி வீசிய பிரிட்னியை அவரது பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் காரில் ஹோட்டலுக்கு அழைத்துச் சென்றனர். வேகமாக ஓடிக் கொண்டிருந்த காரிலிருந்து பிரிட்னி குதிக்க முற்பட்டபோது அவர் தடுக்கப்பட்டுள்ளார்.

ஜஸ்டின் ரிம்பர்லேக் என்ற தனது காதலனை மறக்கவே பிரிட்னி இப்படிப் போதையை நாடுவதாக அவருக்கு நெருக்கமான வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

சில தினங்களில் இரவு இரண்டு மணிக்கும் பிரிட்னி மதுக்கடையில் தங்கியிருந்திருக்கிறார். அப்படித் தனிமையில் இருக்கும்போது போதைப் பொருள் பாவிக்க முற்படுகின்றார் என்கின்றனர் அவரது நண்பர்கள்.

அவரது காதலரான ஜஸ்டின் இரவு விடுதியொன்றில் வேறொரு பெண்ணுடன் நெருக்கமாக இருந்ததை பிரிட்னி நேரில் கண்ட பின்னர்தான் அவரது குடிப்பழக்கம் அதிகரித்ததாகக் கூறப்படுகின்றது. மியாமி கடற்கரையில் அரைகுறை ஆடையில் கையில் மதுவுடன் நடமாடுவதைப் பலர் கண்டிருக்கிறார்கள். குடிபோதையில் இருந்தால் மாத்திரமே தன்னால் ஜஸ்டினை மறக்க முடியும் என்று பிரிட்னி கூறுகிறார்.

பிரிட்னி ஸ்பியர்ஸ் வீடியோ அல்பங்களில் பாடும்போது அவரது கவர்ச்சி எல்லை தாண்டியிருந்ததைப் பொறுத்துக்கொள்ள முடியாத காரணத்தாலேயே அவரை விட்டு விலகியதாக காதலர் ஜஸ்டின் கூறினார்.

"ஆரம்பத்தில் மிகவும் நல்ல பண்புள்ளவராக இருந்த பிரிட்னி புகழின் உச்சிக்குப் போகையில் என்ன நடக்கிறது எனப் புரியாமல் ஆடை அவிழ்க்கத் தொடங்கினார். நான் மட்டும் ரசிக்க வேண்டிய பல விஷயங்களைக் கோடிக்கணக்கானோர் கண்டு மகிழ்சியடைவதை என்னால் பொறுத்துக்கொள்ள முடியாது. பிரிட்னியின் அந்தரங்கத்தில் நான் மட்டும் இருக்க வேண்டும்.அவரது தற்போதைய போக்கு எனக்குப் பிடிக்கவில்லை, அதனாலேயே நான் விலகிக்கொள் கின்றேன்" என்கின்றார் காதலர் ஜஸ்டின்.

---

# ஈரலைப் பகிர்ந்துகொண்ட காதலர்கள்

**சி**ங்கப்பூரைச் சேர்ந்த தொலைக் காட்சி அறிவிப்பாளர் பியரே பெஸ் என்பவர் அதே நிறுவனத்தில் செய்தி வாசிப்பாளராகப் பணிபுரியும் 27 வயதான ஆன்ட்ரியாவைக் காதலித்தார்.

ஆன்ட்ரியா, ரசிகர்களைச் சுண்டியிழுக்கும் அழகி. துருதுருப்பான பார்வையும், செக்கச்சிவந்த மேனியும், கணீர் என்ற குரலும், கிட்டத்தட்ட ஒரு சினிமா நட்சத்திரத்தின் அளவுக்கு சிங்கப்பூர், ஹொங்கொங் நாடுகளில் பிரபலமாகியிருந்தார். அவரது அழகும், அறிவிப்புத் திறனும் அவருக்கு ஆயிரக் கணக்கான ரசிகர்களைப் பெற்றுத்தந்ததிருந்தது. ஆனால், ஆன்ட்ரியாவை தொலைக்காட்சி அறிவிப்பாளர் பியரே பெஸ்தான் மிகவும் கவர்ந்தார். இருவரும் காதலித்தனர். இவர்களின் காதல் கணிசமான அளவு வளர்ந்துகொண்டிருந்த நிலையில் ஆன்ட்ரியாவின் ஈரலால் அவர்களது காதலுக்குச் சோதனை ஏற்பட்டது.

திருமணம் குறித்த வண்ணவண்ணக் கனவுகளில் இருவரும் மிதந்துகொண்டிருந்த வேளையில் அந்தப் பேரிடியை மருத்துவர்கள் அவர்கள் தலையில் தூக்கிப் போட்டார்கள்.



அவரது ஈரலில் பாதி பழுதடைந்திருந்தது. சத்திர சிகிச்சையின் மூலம் பழுதடைந்த ஈரலை மாற்றினால்தான் அவரால் உயிர்வாழ முடியும் என மருத்துவர்கள் கூறிவிட்டார்கள். ஆன்ட்ரியாவுக்கு பாதி ஈரலைத் தானம் செய்ய அவரது உயிர்க் காதலர் பியரே பெஸ் முன்வந்தார்.


சிங்கப்பூர் மருத்துவமனையில் இருவருக்கும் ஒரே நேரத்தில் சத்திர சிகிச்சை மேற்கொள்ளப்பட்டது. 12 மணி நேரமாக நடைபெற்ற ஜீவமரணப் போராட்டத்தின் முடிவில் காதலன் பியரேயின் ஈரலில் பாதி வெட்டியெடுக்கப்பட்டு காதலி ஆன்ட்ரியாவின் பழுதடைந்த பகுதிக்குப் பொருத்தப் பட்டது.

சத்திர சிகிச்சை முடிந்ததும், தீவிர சிகிச்சைப் பிரிவில் வைக்கப்பட்ட இருவரும் கண்விழித்ததும் ஒருவரை ஒருவர் பார்த்துக்கொள்ள வசதியாகக் கண்ணாடித் தடுப்புள்ள அறையில் அனுமதிக்கப்பட்டிருந்தனர்.

தற்போது இருவரும் விரைவாகக் குணமடைந்து வருகிறார்கள். ஆன்ட்ரியா மருத்துவ சாதனங்களின்றியே சுவாசிக்கும் நிலைக்குத் தேறிவிட்டார். இன்னும் சில தினங்களில் வீடு திரும்பியதும் இவர்களது திருமணம் கோலாகலமாக நடைபெறவிருக்கிறது.

காதலனிடமிருந்து ஈரலில் ஒரு பகுதியைப் பெற்று உயிர்வாழும் காதலியின் மனநிலை எப்படியிருக்கும்? "பியரேயின் உயர்வையும், என் உணர்வையும் வார்த்தைகளில் வெளிப்படுத்த முடியாது. என்னிடம் எதுவும் கேட்காதீர்கள்" என ஒதுங்கிக்கொள்கிறார் ஆன்ட்ரியா.

"இது நாடகமோ திரைப்படமோ அல்ல, உண்மையானது. ஈரலைப் பகிர்ந்து கொண்ட காதலர்களின் மெய் சிலிர்க்க வைக்கும் உணர்வுபூர்வமான விஷயமிது" இவ்வாறு சிங்கப்பூரின் செய்தித்தாள் ஒன்று செய்தி வெளியிட்டிருந்தது. ■



## இராட்சதப் பசி

மலைப்பாம்புகள் மனிதனைக் கூட விழுங்கிவிடும் எனக் கேள்விப்பட்டிருப்பீர்கள். இங்கே புடைத்துத் தெரியும் மலைப்பாம்பின் வயிற்றுக்குள் கன்றுக்குட்டி இருக்கிறது.

இந்தப் படம் இந்தியாவின் கர்நாடக மாநில கிராமம் ஒன்றில் "க்ளிக்" செய்யப்பட்டது. ஆற்றங்கரையில் புல் மேய்ந்துகொண்டிருந்த கன்றுக்குட்டியை உயிரோடு விழுங்கிவிட்டது. மிருகங்களை விழுங்கும் மலைப்பாம்புகள், இவை வயிற்றுக்குள் இறந்ததன் பின் மீண்டும் வெளியில் கக்கி உண்ணுமாம்!

# தகவல் பெட்டி

## தீவிரம்

பாலஸ்தீனர்களை எதிர்த்து இஸ்ரேல் எத்தகைய தாக்குதல்களை நடத்தினாலும் இஸ்ரேலுக்கு எதிரான நடவடிக்கைகளைக் கைவிட பாலஸ்தீன இளைஞர்கள் தயாராக இல்லை. இஸ்ரேல் இராணுவத்தின் அளவுக்கு இல்லாவிட்டாலும் பாலஸ்தீன போராளிகளும் தங்களால் முடிந்தவரையில் இஸ்ரேல மக்களைக் கொன்று வருகின்றனர். பாலஸ்தீனத்தில் ஏராளமான இஸ்லாமிய அமைப்புக்கள் போரிட்டு வருகின்றன.

ஹமாஸ், ஜிஹாத், மஸ்ஜிதுல் அக்ஸா மீட்புப்படை போன்றவை பெரிய அமைப்புக்கள். கணிசமான உறுப்பினர்களையும், நவீன ஆயுதங்களையும் கொண்டுள்ளன. இந்த இயக்கங்களுக்குள் நிலவும் ஒரே போட்டி, யார் கூடுதலாக இஸ்ரேலியர்களைக் கொலை செய்வது என்பதுதான்.

ஹமாஸ் இயக்கமே கூடுதலான அளவு தற்கொலைப் போராளிகளை உருவாக்கி வருகிறது. மேற்குக் கரையின் அடையாளம் காணப்படாத இடமொன்றில் ஹமாஸ் இயக்க கமாண்டோக்கள் பயிற்சியில் ஈடுபடுவதையே இங்கு காண்கிறீர்கள். ■



## பயணம்

அமெரிக்க நகைச்சுவை நடிகரான எட்வேர்ட் என்பவரின் நாடகக் காட்சிகளில் ஒன்றுதான் இது. அமெரிக்க மக்களால் பெரிதும் விரும்பப்படும் இவரது நாடகங்கள் "மிஸ்டர் பீன்"னின் ஹாஸ்யங்களுடன் ஒத்தது. காரியாலயத்திற்குச் செல்லும் முச்சகக் கரவண்டியிலேயே குளித்து, உடைமாற்றி, ஒப்பனை செய்துகொண்டு செல்வது போன்ற காட்சியைத்தான் இங்கு காண்கிறீர்கள். இவ்வாறான திறந்தவெளிக் காட்சிகளில் உருவான இவரது பல நாடகங்கள் வரவேற்பைப் பெற்றுள்ளன. அன்றாட மனித வாழ்வின் நிகழ்வுகளை நகைச்சுவையாகக் கூறி மக்களை மகிழ்விக்கின்றார். ■



சமீபத்தில் காலமான பிரித்தானியாவின் ராஜமாதா எலிசபெத் அந்நாட்டுப் பொதுமக்களால் பெரிதும் நேசிக்கப்பட்டவர். ஆரம்ப காலத்தில் அதிக பிரபல்யமில்லாதிருந்த அவர் இரண்டாம் உலகப் போரின் பின்னர்தான் மக்கள் மனதில் நிரந்தரமாக இடம் பிடித்தார். போர் நடைபெற்ற காலத்தில் அரச குடும்பத்தினர் பிரித்தானியாவை விட்டு வெளியேறிப் பாதுகாப்பான இடங்களில் குடியேற, ராஜமாதா மாத்திரம் பிரித்தானியாவிலேயே தங்கியிருந்து மக்களுக்கும், படையினருக்கும் ஆறுதலும், ஊக்கமும் வழங்கிவந்தார். 1941ம் ஆண்டு யுத்தம் நடைபெற்றுக்கொண்டிருந்த சமயம் பிரித்தானிய இராணுவத்தின் ஸ்கொடிஷ் படையணி தங்கியிருந்த போர் முனைக்கு நேரடி விஜயம் செய்து படையினரின் மரியாதை அணிவகுப்பைப் பார்வையிடும் காட்சிதான் இது.



தனது கணவர் இறந்ததன் பின் சுமார் 40 வருடகாலம் தனிமையிலேயே வாழ்ந்த எலிசபெத் அம்மையார் தனது 102வது வயதில் காலமானார். ■

தேசாபிமானம்



## "ஓ... போடு" திரைப்படமாகிறது!

லைட் விஷன்ஸ் பட நிறுவனம் சார்பில் வி.கே.ரியாஸ் அஹ்மத் தயாரிக்கும் படம் "ஓ... போடு!"

ஏ.வி.எம்மின் "ஜெமினி" படத்தின் சூப்பர் ஹிட் பாடலைப் படத்தின் தலைப்பாகச் சூட்டப்பட்டிருக்கும் இந்தப் படத்தில் சிம்ரன், "மின்னலே" அறிமுக நாயகி ரீமா சென் இருவரும் இணைந்து நடிக்கிறார்கள். காதல், செண்டிமெண்ட், ஆக்ஷன் என அனைத்துத் தரப்பினரையும் கவரும் வகையில் உருவாகும் "ஓ... போடு" படத்தின் படப்பிடிப்பு ஹைதராபாத், விசாகபட்டினம் மற்றும் அவுஸ்திரேலியாவில் சிட்னி, மெல்போர்ன், நியூசிலாந்து, மலேஷியா போன்ற இடங்களில் நடைபெறவிருக்கிறது.

இவர்களுடன் ஆனந்த்ராஜ், ரகுவரன், பி.வாசு, சுஜாதா, சரண்ராஜ், "வெண்ணிற ஆடை" நிர்மலா, சாய்குமார், மோகன்ராஜ், சத்யபிரகாஷ் என மிகப்பெரிய நட்சத்திரப் பட்டாளமே நடித்திருக்கும் இப்படம் தமிழுக்கு மொழி மாற்றம் செய்யப்பட்டிருக்கிறது.



விக்ரம்-ஸ்னேகா
படம்: கிங்

### கௌரவ வேடம்

"ஏப்ரல் மாதத்தில்" படத்தில் காயத்ரி ஜெயராம் கௌரவ வேடத்தில் நடிக்கிறார். ஆனால் வித்தியாசமான பாத்திரமாம். இதனால் அந்தப் பாத்திரம் அசத்தலாகப் பேசப்பட்டு பட வாய்ப்புகள் குவியும் என்று எதிர்பார்க்கிறார். ஹீரோயின் கனவோடு வந்து இப்படியாகிப்போச்சே என்று கேட்டால், வாலியில் ஜோதிகா கூட கௌரவ வேடம்தான் செய்தார் பிறகு நம்பர் ஒன் ரேஞ்சுக்கு வரலையா? அது மாதிரி நானும் வருவேன் என்கிறார். இந்தப் படத்தில் ஸ்ரீகாந்த், பூமிகா மீண்டும் ஜோடி சேர்கிறார்கள்.

### காதோடு சொல்லுகிறோம்

கடந்த ஆண்டில் கவர்ச்சிப் புயலாக இருந்த அந்த ஷாஜகானின் நாயகிக்கு இந்த ஆண்டு அபரிமிதமான வளர்ச்சி. தானொரு மேனியும், பொழுதொரு வண்ணமுமாய் குறுக்கு வாட்டில் வளர்ந்து வருகிறார். அம்மணி மவுசு மாறிவருகிறது.

அண்மையில் தற்கொலை செய்து கொண்ட நடிகையின் காதலரான இளைஞர் லேசுப்பட்ட ஆளில்லையாம். சின்னம்மா நடாத்தும் நடனப் பள்ளிக்கு வரும் இளம் நடிகைகள் பலரையும் தன் காதல் வலைக்குள் சிக்க வைத்து ஏமாற்றியவராம். அவரது சுயரூபம் புரியாமல் அவரிடம் மனதைப் பறிகொடுத்துவிட்டாராம் இறந்து போன நடிகை. காதலித்து ஏமாற்றுவதைத் தொழிலாக வைத்திருக்கும் அவரைச் சும்மா விட்டு விடக் கூடாது என்று ஆவேசப்படுகிறார் அவரால் பாதிக்கப்பட்ட நான்கெழுத்து நடிகை.

படமெடுக்கும் சங்கத்தில் முக்கிய பொறுப்பிலிருக்கும் பிரமுகர் "லவ் தேசம்" நடிகர் "நம்பர் வன்"னாக இருந்த போது அவருக்கு அட்வான்ஸ் கொடுத்தார். இந்திப்படம் எடுப்பதாகச் சொல்லி நடிகரின் கால்ஷீட்டையும் வீணடித்தார். இப்போது அட்வான்ஸைத் திருப்பித் தரச்சொல்லி நடிகரை நச்சரிப்பதோடு தன் எடுபிடிகளைவிட்டு மிரட்டவும் ஆரம்பித்திருக்கிறாராம். நடிகர் சங்கத்தில் புகார் கொடுத்திருக்கிறார் நடிகர்.



மும்தாஜ்

### மினி சினி

★ ஷங்கர் இயக்கும் "பாய்ஸ்" படத்தில் நடிக்கும் நான்கு ஹீரோக்களில் ஒருவர்... தேவயானியின் தம்பி! தயாரிப்பாளர் ஏ.எம்.ரத்னத்தைப் பிடித்து தம்பிக்குச் சிபார்சு செய்ய வைத்திருக்கிறார் தேவயானி.

★ கல்யாணம் செய்துகொண்டு செட்டில் ஆன நடிகை அல்போன்ஸா மீண்டும் நடிக்க வருகிறார். கொஞ்ச நாளாக டான்ஸ் ஏதும் ஆடாமல் வீட்டில் இருந்து பார்த்தார், முடியவில்லை. கேட்டால் கணவரின் வருமானம் போதவில்லை என்கிறார். ஆடிய காலும்... பாடிய வாயும் சும்மாயிருக்குமா?

★ வழக்கமாகத் தாங்கள் தயாரிக்கும் படங்கள் வெற்றிபெற வேண்டும் என்பதற்காகப் புதிது புதிதாகத் தெய்வங்களை இறக்குமதி செய்து படபூஜை செய்வார்கள். இவர்களில் திருவள்ளுவர் கலைக்கூடம் வித்தியாசமானது. வி.சேகர் தற்போது இயக்கும் படமான "நம்ம வீட்டுக் கல்யாணம்" திருவள்ளுவர் முன்னிலையில் நடைபெற்றது.

★ "இவன்" படத்தின் ஆடியோ உரிமைக்கு நாற்பது லட்சம் கேட்டார் பார்த்திபன். விலை அதிகம் என்று யாரும் வாங்க முன்வரவில்லை. எனவே தானே ஆடியோ வெளியிட இருக்கிறாராம் ஆர்.பார்த்திபன்.

★ "ஓ போடு..." பாடல் சூப்பர் ஹிட்டாக, அந்தப் பாட்டுக்கு நடனமாடிய ராணிக்கு செம கிராக்கி. நான்கு நாட்களில் பத்துப் படங்கள் புக்காகியுள்ளனவாம். ஓ போடு...

## சினி விசிட்

### மோனலின் ஆவி, தொடர் மாடியில் யாகம்!

தற்கொலை செய்துகொண்ட நடிகை மோனலின் ஆவி, அவர் வசித்த தொடர் மாடியில் சுற்றி வருவதாக வதந்தி கிளம்பியுள்ளது. இதையடுத்து அந்தத் தொடர்மாடியில் வசிப்பவர்கள் ஒரு பிரபல சாமியாரை வைத்து சிறப்பு யாகம் நடத்தியுள்ளனர்.

சென்னை வடபழனி ஆற்காடு டௌன் தொடர்மாடியில்தான் நடிகை மோனல் குடியிருந்தார். சமீபத்தில் அவர் தற்கொலை செய்துகொண்டார். இதையடுத்து அந்தக் குடியிருப்பைச் சேர்ந்தவர்கள் பயங்கர பீதியில் உள்ளனர்.

தற்கொலை செய்துகொண்டவர்களின் ஆத்மா சாந்தியடையாமல் ஆவியாகச் சுற்றிவரும் என்ற நம்பிக்கை இருப்பதால், மோனலின் ஆவியும் அவ்வாறே சுற்றி வருவதாக இந்தத் தொடர்மாடி வாசிகள் நம்புகின்றனர்.

இதனால், இரவில் வீட்டைவிட்டு வெளியே வர அஞ்சும் இவர்கள் சமீபத்தில் ஆவியைச் சாந்தி செய்வதற்காக ஒரு சாமியாரை வரவழைத்துப் பூஜையும் யாகமும் நடாத்தியுள்ளனர்.

## மோனலின் ரகசி...

நடிகை மோனலின் வீட்டிலிருந்த ... கலா வீட்டினர் எடுத்துச் சென்றுவிட்டதா... டைரி கலாவிடம் போய்ச் சேர்ந்திருக்க...

நடிகை மோனல் தனது வளர்ப்பு ... கொலை செய்துகொண்டிருப்பதாகப் ... வந்தது. ஆனால், அவரது காதலர் ... என்பது பின்னர் தெரியவந்தது.

இந்நிலையில் மோனலின் அக்கா ... சந்தித்துப் பல பகிரங்க புகார்களைக் கூறி... டான்ஸ் மாஸ்டர் கலாவின் தம்பியை மோன... அதைக் கலாவின் குடும்பத்தார் ஏற்றுக்கொள்ள... தொலைபேசியில் அழைத்து மிரட்டி வந்தனர். ... பனைத்தனமான காதலில் இருந்து பின்வாங்கினா... மோனல் தற்கொலை செய்துகொண்டார் என்று ...

மேலும், மோனல் வீட்டிற்குச் சென்ற நடிகை ... பணம், மோனலின் டைரி மற்றும் முக்கிய பொ... சென்று விட்டதாகவும் பகிரங்கமாகக் குற்றம் சா...

சிம்ரனின் இந்தப் பரபரப்பான புகார்களை ... ரும், மும்தாஜும் மறுத்துள்ளனர்.

### மும்தாஜ் பொலீஸி...

இந்நிலையில் மோனல் வீட்டிலிருந்த டைரி... யது யார்? என்று சிறப்புப் படையினர் விசாரணை ... வருகின்றனர். இது தொடர்பாக மும்தாஜிடமும் ... ஸார் விசாரணை நடாத்தியுள்ளனர்.

தனது காதல் விவகாரம் குறித்துத் தனது ... விரிவாக மோனல் எழுதியிருக்கலாம் என்று ந... கிறது. மோனல் தற்கொலை செய்துகொண்ட ... தன்று வீட்டுக்கு யார் யார் வந்திருந்தார்கள் ... பொலிஸார் விசாரித்து வருகின்றனர்.

### மம்முட்டியின் "வீரம்"

ஊர் முழுவதும் பரபரப்பு. ஒரே மக்கள் கூட்ட... "அநியாயத்தை எதிர்த்துப் புனிதப் போருக்குப் போ... றேன் என்னை வாழ்த்தி அனுப்புங்க" என்று சொ... விக்கொண்டு தனது தாயிடம் ஆசிபெற முயன்றா... மம்முட்டி. "நீ கொடூரனை எதிர்த்துச் சண்... போடப் போகிறாய். நீ எப்படித் திரும்பி வ... வாயோ தெரியாது. அதனால் எனக்கு இப்பவே ... வாய்க்கரிசி போட்டுட்டுப் போயிருப்பா..." என்று கதறி அழுதார் தாய். அதைப் பார்த்து மம்முட்டிக்கும் அழுகை வந்தது. இந்த உணர்ச்சிகரமான காட்சி எஸ்.எஸ்.ஆர் மூவீஸ்... துக்காகப் படமானது ... மனோரமா.

"ஓ... ...

முகப்பில்

## ...ய காதல் டைரி..

...அந்தரங்க டைரியை டான்ஸ் மாஸ்டர் ...கூறப்படுகிறது. மும்தாஜ் மூலமாக அந்த ...என்று கருதப்படுகிறது.
...கொடுமை காரணமாகவே தற் ...தரப்பில் முதலில் கூறப்பட்டு ...கைவிட்டதுதான் காரணம்
...சிம்ரன் செய்தியாளர்களைச்
...வந்தார். ஆனால், ...அவர்கள் மோனலைத் ...பிரசன்னா பொம் ...மனம் நொந்து ...கூறியுள்ளார். ...அங்கிருந்த ...எடுத்துச் ...ர். ...படுத்தின



சொர்ணா

...'லேசா' படத் ...வின் தாயாக நடித்தார்



## 'கவி' நடிகைக்குக் கிடைத்த வாய்ப்புக்கள்!

சூப்பர் ஸ்டாரின் புதிய படத்திலும், சகலகலா வல்லவனின் ஐந்து தந்திரம் படத்திலும் வீட்டோடு இருந்த நடிகையை அழைத்து வாய்ப்புக் கொடுத்திருக்கிறார்கள். தனது திறமையால் தமிழில் சில படங்களில் மாத்திரம் நடித்த இவர் தெலுங்கிலும் கன்னடத்திலும் ஓரளவு பிஸியாக இருந்தார். பின்னர் வாய்ப்புக்கள் ஏதுமின்றித் தமிழ் திரையுலக ரசிகர்களால் மறக்கப்படும் நிலையில் இருந்தவர் இரண்டு முக்கியஸ்தர்களின் படங்களில் வாய்ப்பைப் பெறுக்கொண்டதில் தனிக் கதையே இருக்கிறது...?

"ஐந்து தந்திரம்" படத்தில் இவருக்காக ஒரு பாத்திரத்தை ஒதுக்கி யூனிட்டில் உள்ள ஒரு முக்கியஸ்தர் கேட்ட கைக்கூலியாக ஒருவார கால உபசாரம் மட்டும்தான். "அந்தப் படத்தில் நான்தான் எல்லாம். என்னைக் கவனிச்சின்னா உன்னைத் தமிழில் திரும்பவும் உலாத்திவிடறேன்" என்று நேரடியாக பிஸினஸ் பேசினார் அந்த முக்கியஸ்தர். அந்த ஆளுடன் ஒரு வாரம் அல்ல ஒரு வருஷம் இருந்தாலும் அவரால் பெரிதாக எதுவும் செய்துவிட முடியாது என்பதைப் புரிந்து கொண்ட நடிகை, அந்த ஐடியாவுக்கு ஒப்புதல் அளித்தார். படப்பிடிப்பு ஆரம்பிக்க முன்னர் இருவரும் மொரீஷியஸ் தீவுக்குச் சென்று திரும்பினர்.

சூப்பர் ஸ்டாரின் படத்தின் நிலை வேறு. எந்த எதிர்பார்ப்பும் இல்லாமல் இந்த நடிகைக்கு வாய்ப்பளிக்கப்பட்டது. ஆனால், யூனிட்டில் உள்ள ஒரு "கோபி"யார் வாய்ப்பைப் பறித்துவிடுவேன் என்று கூறி இந்த "...கவி" நடிகையிடம் மொத்தமாகப் பயன்பெற்றிருக்கிறார். அந்த ரோலுக்குத் தெரிவு செய்யும்படி உன்னைச் சிபார்சு செய்தது நான்தான். என்னைச் சந்தோஷப்படுத்தினால் இன்னும் உதவுவேன் என்று கூறியிருக்கிறார். இந்த வாய்ப்பை எக்காரணம் கொண்டும் இழக்க விரும்பாத நடிகை தனது வீட்டுக்கே வரவழைத்து உபசரித்திருக்கிறார்.

இந்த நடிகை சென்னை புறநகர்ப் பகுதி தொடர்மாடியொன்றில்தான் குடியிருக்கிறார். வீட்டுக்கு நல்ல குடிபோதையில் வந்த "கோபி"யானவர் வந்த காரியத்தை மறந்து போதை மயக்கத்தில் நடிகையின் படுக்கையறைக் கட்டிலில் தூங்கிப்போனார். காலையில் மறக்காமல் இரவில் செய்யாததைப் பூர்த்தி செய்தாராம் அவர். இந்த விவகாரம் சூப்பர் ஸ்டாரின் காது வரை போய்விட்டதாகத் தகவல்!

## கலங்கடிக்கும் கஜாலா!

கஜாலா என்றால் அர்த்தம் என்னவென்று கேட்காதீர்கள். இந்த வார்த்தை தமிழ்கூறும் நல்லுலகிற்குச் சொந்தமானதல்ல என்பது மட்டும் உண்மை.

மும்பையிலிருந்து ஆந்திரா வழியாகக் கோடம்பாக்கத்தில் குதித்திருக்கும் லேட்டஸ்ட் லோட்டஸ்ஸின் பெயர்தான் இந்த கஜாலா. பெயர்தான் இப்படிக் குஜாலாவாக இருக்கிறது என்றால் ஆளும் குஜாலாகத்தான் இருக்கிறார்.

வாயைத் திறந்தால் பச்சை பச்சையான ஏ ஜோக்குகளை அள்ளி விடுகிறார். அவற்றில் பல ஜோக்குகள் சி கிளாஸ் தரத்தில் இருப்பதால் உடன் நடிப்பவர்கள் இவர் வாயைத் திறந்ததும் ஓடி ஒளிகிறார்கள்.

கஜாலாவுக்குக் கவர்ச்சி காட்டுவதென்றால் அல்வாவைப் பாதாம்கீரில் ஊறவைத்துச் சாப்பிடுவது போல அப்படி ஒரு ஸ்வீட்டான விஷயமாம். 20 வீதம் கவர்ச்சி போதும் என்றால் அவர் 120 வீதம் காட்டுகின்றாராம்.

இப்போது இரண்டு படங்களில் நடித்து வருகிறார். அர்ஜுன் இயக்கத்தில் "ஏழுமலை" (இதில் கவர்ச்சி இமயமலை மும்தாஜும் இருக்காருங்கோ) மற்றும் புதியவர்களின் கூட்டணியில் உருவாகும் "யுனிவர்சிட்டி" ஆகிய இரு படங்களில் நடித்துக்கொண்டிருக்கிறார் கஜாலா.

இதில் ஏழுமலையில் அவரைக் கவர்ச்சியில் புரட்டி எடுத்திருக்கிறார் அர்ஜுன். இதைக் கண்டு மும்தாஜுக்கே டென்ஷன் ஆகிவிட்டதாம். அவ்வளவு கவர்ச்சி காட்டியிருக்கிறாராம்.

## ...போடு" சர்ச்சையால் மனக்கசப்பு

...தமிழகத்தின் தேசிய கீதமாக ஒலித்துக்கொண்டிருக்கும் ஓ... போடு பாட ...உள்ளங்கள் சொந்தம் கொண்டாடி பந்தத்தை முறித்துக்கொண்டன. ஜெமினி, ...தமிழ் படத்திற்கு இசையமைத்த பரத்வாஜுக்கும் நடிகர் பிரசாந்திற்கும் இடையே ...டால் மோதல் ஏற்பட்டுள்ளது.

"ஓ... போடு" ஐடியாவை முதலில் பரத்வாஜுக்குச் சொன்னதே நான்தான் ...என பார்ப்பவர்களிடமெல்லாம் புலம்பி வருகிறார் பிரசாந்த்.

மதுரை தெருப் பாடகர்கள் குழுவிடமிருந்து "ஓ... போடு" வரிகளைத் தெரிந்துகொண்ட பிரசாந்த் "தமிழ்" படத்தில் இசையமைப்பாளர் பரத்வாஜ்ஜிடம் தெரிவித்திருக்கிறார். ஆனால், பரத்வாஜ் அதை ஜெமினி படத்தின் இயக்குநரிடம் வெளிப்படுத்திவிட்டார். ஓ... போடு வரிகள் நன்றாக இருந்ததும் அதைக் கெட்டியாகப் பிடித்துக்கொண்ட சரண் கவிஞர் வைரமுத்துவிடம் ஜெமினி படத்தின் ஒரு பாடலில் அவ் வரிகளைச் சேர்க்குமாறு கேட்டுக்கொண்டார்.

ஜெமினி படத்தின் ரீவி விளம்பரங்களைப் பார்த்த பின்னர்தான் "தமிழ்" படக்குழுவினருக்கு இவ் விஷயம் தெரிய வந்தது.

இதனால் கொதித்துப்போன படக்குழுவினர் "தமிழ்" படத்தில் "ஓ... போடு" வார்த்தைகளைச் சேர்த்துக்கொள்வதில்லை என முடிவு செய்தனர்.

விக்ரமும், பிரசாந்தும் நெருங்கிய உறவினர்களாக இருந்தும் "ஓ... போடு" பாடலால் மனக்கசப்பு ஏற்பட்டு நேரில் பார்த்தாலும் பேசிக்கொள்வதில்லை.



...ம்ரன்

## ...வாளைத் தூக்கிய ரவளி!

...பெண் கேட்டு வந்தவனை அரிவாளுடன் துரத்திக்கொண்டு வந்தாள் சின்னத் ...பார்த்த சிங்கமுத்துவுக்கு அதிர்ச்சி. "ஏன் அவனை வெட்டப்போற" என்று ...கேட்டான். "என்ன தைரியம் இருந்தா என்னைப் பெண் கேட்டு வருவான். ...போது கண்ட கண்டவனெல்லாம் எப்படிப் பெண் கேட்கலாம்" என்று அவள் ... இதைக் கேட்டதும் திருதிருவென முழித்தான் சிங்கமுத்து. அங்கிருந்து ...க முயன்றான்.

...பெண் கேட்டு வந்தவனை வெட்ட எப்படி அரிவாளைத் தூக்கினேனோ, ...நீ யாரையாவது பெண் கேட்டுப் போனா அவளையும் வெட்டத் தயங்கமாட்டேன். ...கழுத்தில தாலியக் கட்டு; இல்ல உனக்கும் இதே நிலைமைதான்" என்று ...கூற, அதிர்ச்சியுடன் நகர்ந்தான் சிங்கமுத்து.

...சுவாரஸ்யமான காட்சி ஸ்ரீதிருப்பதி பாலாஜி பிலிம்ஸ் தயாரிக்கும் ...லை" படத்திற்காகப் படமாக்கப்பட்டது.

...வாகப் பாண்டியராஜனும், சின்னத்தாயியாக ரவளியும் நடித்தனர்.



பிரபுதேவா-காயத்ரிஜெயராம்-கௌசல்யா

## சிம்ரன் ஜோதிகா மீண்டும் கவர்ச்சிப் புயல்களாக...

"பஞ்ச தந்திரம்" படத்தில் சிம்ரன் படு கவர்ச்சியாக நடித்துள்ளாராம். தொடர்ந்து கவர்ச்சியாக நடிக்கவும் முடிவு செய்துள்ளாராம். போட்டி அதிகமாகிவிட்டதால் வேறு வழியில்லாமல் இப்படி மீண்டும் தனது பழைய டிராக்கில் செல்ல முடிவு செய்துவிட்டாராம்.

"சார்லி சாப்ளினை" இயக்கிய சக்தி சிதம்பரம் எடுக்கவுள்ள அடுத்த படத்தில் ஜோதிகா நடிக்கவுள்ளார். இதில் முதல் முறையாகக் கவர்ச்சி கொப்பளிக்கும் வகையில் நடிக்கவுள்ளாராம் ஜோ. இவருக்கும் அதே மார்க்கெட் விவகாரம்தான். போட்டி ஓவராகிப் போய்விட்டதால் தனது மார்க்கெட்டை நிலைநிறுத்த இந்த முடிவாம்.

# தேன் கிண்ணம்

## ஒப்பந்தம் செய்வோம்

ஓடிவந்து ஒரு ஒப்பந்தம் செய்யுங்கள்!
புன்னகை உதிர்க்க உதடுகள் இல்லையா?
குலுக்கிக் கொள்ளக் கைகள் இல்லையா?
கையெழுத்துப் போடக் காகிதம் இல்லையா?
ஓடிவந்து ஒரு ஒப்பந்தம் செய்யுங்கள்!

வீட்டுப் பிரச்சனை - உன்
நாட்டுப் பிரச்சனை
எல்லைப் பிரச்சனை - பிற
தொல்லைப் பிரச்சனை
எந்தப் பிரச்சனை என்றால் என்ன?
ஒழித்துக் கட்டலாம்
ஓடிவந்து ஒரு ஒப்பந்தம் செய்யுங்கள்!

முந்தைய ஒப்பந்தம் முறிந்து போயிற்றா?
பரவாயில்லை- இந்த ஒப்பந்தத்தை
தற்போதைய நிலைக்கேற்ப தயாரிக்கலாம்
பின்னொரு காலம் பிரச்சனையைப் பார்த்து
பிழை திருத்தியும் கொள்ளலாம்
ஒருவேளை ஒப்பந்தம் செய்வதிலும்
பிரச்சனை வ்ரலாம் - அப்படியே வந்தாலும்
கவலையை விடுங்கள் அதற்குமொரு
ஒப்பந்தம் செய்தால் போச்சு
எனவே மீறுவதற்கு இனி ஒன்றுமில்லை என்று
கண்டால்
ஓடிவந்து ஒரு ஒப்பந்தம் செய்யுங்கள்!

ந. நகுலேஸ்வரன், செங்கலடி.

## தேசத் தாய்க்கு ஒரு மடல்



தேசத் தாயே!
உன் மேனியைப் புண்ணாக்கி
உதிரமோட்டியவர்கள் நாங்கள்.
கோரக் குண்டுகளால்
அழியா வடுக்களை
ஆக்கியவர்களும் நாங்கள்.

உன் குழந்தைகளை ஊனமாக்கி
உலாவ விட்டதும் நாங்கள்.
பசுமையைப் போக்கி
யௌவன மேனியை
சிதைத்ததும் நாங்கள்.

உன் நிம்மதியைப் பிடுங்கி
பயத்தைப் பதித்ததும் நாங்கள்.
பச்சிளம் பாலகரை
பசியால் பரிதவிக்க
கொன்று குவித்ததும் நாங்கள்.

உன் உறவுகளைப் பிரித்து
கண்ணீரை இரசித்ததும் நாங்கள்.
பட்டினியால் மக்களைக்
கதறியழ வைத்து
கைகொட்டிச் சிரித்ததும் நாங்கள்.

தேசத் தாயே!
இனியும் வேண்டாம்
இத்தனை கொடுமை.
இத்தனையும் செய்தோம்
இனப் பசியின் தீனிக்காய்.

ஆயுதக் கலாசாரத்தால்
கண்டபலன் ஒன்றுமில்லை
அன்று
கண்டவரும் இன்று இல்லை

உள்ளுணர்வால் உணர்ந்துவிட்டோம்
உள்ளவரை இனியும்
இழந்துவிட எண்ணமாட்டோம்

தேசத் தாயே...
சமாதான நிழலில்
எங்களுக்கும் இடங்கொடு
உறவுப் பாதையில்
ஊடறுக்க வழிவிடு
பேதமற்ற சமூகமாய்
நாளை பெருமிதங்கொள்ள
மலர்ச்சி கண்ட மக்களாய்
மண்ணில் தலைநிமிர்ந்து வாழ...

நாஸீர் எம். இர்ஷாத், தோப்பூர்-03.

## காதல் யுத்தம்

காதல் யுத்தம்
என்னவளே!
அமெரிக்காவின்
வர்த்தக மையக் கட்டடமாய்
வீற்றிருந்தது என் இதயம்.
நீதான்!
விமான விழிகளால்
தகர்த்தெறிந்தாய்...

பென்டகனின்
பகுதியொன்றை
நாசம் பண்ணியதுபோல்
என் இதய. ஓரத்தை
மோசம் செய்தாய்
காதல் விதைத்தாய்
உனக்குள் விழுந்தேன்...

சூத்திரதாரி;
நீ எனத்தெரிந்தும்
கற்பனை குண்டு வீச்சுக்களையும்
ஆசை ஏவுகணைகளையும்-நிராகரித்த
உனைப்பின் தொடர்ந்தேன்.

நீயோ!
அகதியாய் இடம் பெயர்ந்தாய்
புஷ்ஷாக எனை நினைத்து..
மறைந்து வாழ்வதிலேயே
இன்பம் கண்டாய்...

நீ ஆப்கானிஸ்தான்
நான் உனக்குள் ஒளிந்து கொண்ட
பின்லேடன்...

நான் அனுப்பும் மடல்களை
எரிக்காதே-பிரித்துப்படி
உள்ளிருப்பது
அந்திராக்ஸ் அல்ல
என் காதல் வார்த்தைகள்....

இ. லெ. சப்ஹான், அக்கரைப்பற்று-01.

## மழை வரும் நாட்கள்

ஒதுங்க இடமில்லா
ஒத்தையடிப் பாதையிலே
கையில் குடையில்லா
மறதி நாட்களிலும்...

வாராந்த உடையனைத்தையும்
உடல் வருத்தித் துவைத்து
உலரப் போட்டுவிட்டு
வெளியில் போய்வரும்
ஞாயிற்றுக்கிழமைகளிலும்...

நாளை
சீரான வானிலை
நிலவுமென்று வானொலி
தொலைக்காட்சி
சொல்கின்ற நாட்களிலும்...

சோடைபோகா இரு
கிரிக்கெட் அணிகள்
கோடை காலத்தில்
மோதுவதைப் பார்க்க
மோகத்தோடு
போயிருக்கும் நாட்களிலும்...

வாரி இறைத்த நீரை
வடிகட்டிப் பாத்தியிட்டு
வானத்தை நம்பி
உப்பெடுக்கும் நாட்களிலும்...

மின்வெட்டைத் துண்டிக்க
அனல்மின்
நிலையமொன்றை நிறுவி
திறப்புவிழா நடாத்தத்
திட்டமிடும் நாட்களிலும்...

அங்கும் இங்கும் ஆயுதத்தை
விட்டுவிட்டு அன்போடு
கைகோர்த்து நாமெல்லாம்
ஓர் தேச சகோதரர்கள்
என ஒற்றுமையாய்
இணையும் நாட்களிலும்...

சமாதானத்திற்காய்
பறந்துபோன
வெள்ளைப் புறாக்கள்
நிஜ சமாதானத்தோடு
திரும்பிவரும் நாளினிலும்,
இங்கே நிச்சயம் மழை வரும்!

மெய்யன் நட்ராஜ்,
டோஹா, கட்டார்.

## தேக்கு மரம்

என் பழைய பள்ளிக்கூடம்
கல்வி தந்த வகுப்பறைகள்
எனது மனது தொட்ட "அவள்"
அடிக்காதவர் ஆனால் சொற்களால்
கடிப்பார் - என் கட்டை வாத்தியார்
சிலகாலம் நான் தமிழ் கற்பித்த
என் மாணவர்கள்
நான், கல்லூரிக் கீதம் வளர்த்த
"பாண்ட்" இசைக் குழுவினர்
இப்போது எதுவுமில்லை!
கட்டை வாத்தியார் எங்கே?
தெரியவில்லை!


என் மாணவர்கள்...?
தெரியவில்லை!
மனது தொட்டவள் கனடாவிலாம்!
பழையதில் எதுவுமில்லை
எல்லாம் புதிது புதிதாய்...
கல்லூரி கீதம் கூட மாறிவிட்டது
புதிய அதிபர் - விஞ்ஞான
வெளிச்சத்தில் வகுப்பறைகள்
என் முகம் முழுதும்
கண்களாகத் தேடுகிறேன்...

ஆஹா... அங்கே நிற்கிறது
என் தேக்குமரம்!
களைத்த என் இதயப்பறவை
இளைப்பாறவும் - கரைந்து கரைந்து
நான் கவிதை வரையவும்
நிழல் தந்த மரம் அது!
புதிய அதிபர் புயல் நடையில்
பணியாளர்களோடு வந்தார்
மின்தொட்டி கட்டத் தடையாம்
"ஐயையோ வேண்டாம்!
தமிழ் வளர்த்த மரம் அது"
சொல்லித் தடுக்கிறேன்
அதிபர் சொன்னார்,
"அது போதிமரமல்ல"


"தேக்குமரம் தறிச்சாச்சு"
எப்போது விளங்கிக்கொள்வது?
மரத்தைத் தறித்த பின்தான்
சிலருக்கு ஞானமே வருகிறது
எனக்கு எப்போதோ வந்துவிட்டது
"மனிதன் என்பவன்
மரத்திலும் இழிந்தவன்" என்று!

என். தனுசுஜன், சண்டிலிப்பாய்.


## பேனா நண்பர்கள்



பெயர்:
ஆர். கருணாகரன்
வயது: --
முகவரி: இல. 19,
அப்துல் ஹமீத் வீதி,
கொழும்பு-12.
பொழுது போக்கு:
பேனா நட்பு, வானொலி.



பெயர்:
கா. சண்முகநாதன்
முகவரி:
யாழ். பல்கலைக்கழகம்,
வவுனியா வளாகம்,
புகையிரத நிலைய வீதி,
வவுனியா
பொழுது போக்கு:
வழமையானவை.



பெயர்: எம்.ஜி.எம். சுக்ரி
வயது: 22
முகவரி:
P.O.BOX - 9493
DOHA, QATAR.
பொழுது போக்கு:
பேனா நட்பு,
பத்திரிகை.

## கவனி முன்னேறு நில்

## நல்ல பழக்க வழக்கம்

**வா**ழ்க்கைக்கு வழிகாட்டும் ஒளி விளக்காக இருப்பது நல்ல பழக்க வழக்கங்கள்தான். முதலில் இது சற்றுக் கடினமாக இருந்தாலும் கடைப்பிடித்து நடக்க ஆரம்பித்து விட்டால் நாமே அதை விட்டுவிட நினைத்தாலும் அவை நம்மை விட்டுப் போகாது.

"பழக்கங்கள் முதலில் சிலந்தி வலை போன்றுதான் இருக்கும். அப்பொழுதே அதனை அறுத்தெறியா விட்டால் பிறகு அதுவே இரும்புச் சங்கிலிபோல் மாறிவிடும்" என்று எட்வேர்ஸ் கூறுகிறார்.

சிறு வலையாக இருக்கும் பொழுது எது நல்ல பழக்கம், எது கெட்ட பழக்கம் என்று பகுத்துணர்ந்து தேர்ந்தெடுக்க வேண்டும். வலை சிறியதுதானே என அலட்சியப் படுத்திவிடக் கூடாது.

மற்றவர்களுடைய நல்ல பழக்க வழக்கங்களோடு நம்முடைய பழக்க வழக்கங்களை ஒப்பிட்டுப் பார்த்து, கெட்ட பழக்கங்களை விட்டுவிட்டு, நல்ல பழக்கங்களை மேற்கொள்ள வேண்டும்.

தவறுகள் எனத் தெரிகின்ற பழக்கவழக்கங்களை எல்லாம் நாளுக்கு நாள் மாற்றிக்கொண்டே வந்தால், பிறகு நல்ல பண்பாளர்களாகிவிட முடியும்.

இளமையிலே நல்ல பழக்கங்களைப் பின்பற்ற வேண்டும். எவ்வளவு கரடுமுரடாயினும் எப்பொழுதும் சிறந்ததையே தேர்ந்தெடுத்துக்கொள்ள வேண்டும். பழக்கம் அதை எளிதாக்கிவிடும். இதயத்தோடு இணைத்துவிடும்.

"கெட்ட பழக்கம் முதலில் யாத்திரிகனைப்போல் வரும். பிறகு விருந்தாளியாகி, அப்புறம் முதலாளியாகி விடும்" என்று அமெரிக்கப் பழமொழி கூறுகின்றது. கெட்ட பழக்கங்களுக்கு அடிமையாகிவிட்டால் அதனை எளிதில் விட்டுவிட முடியாது.

கெட்ட பழக்கம் என்ற அங்கியை நாம் சாகும்வரை அணிந்தேதான் தீரவேண்டும். இதற்கு ஆட்படுவது எளிதானது. பெரிய முயற்சி எதையும் செய்ய வேண்டியதில்லை. தானாகவே வந்து ஒட்டிக்கொள்ளும் தன்மையுடையது. அதனால் மிகவும் ஜாக்கிரதையாக இருக்கவேண்டும்.

நல்ல பழக்கங்களை மேற்கொள்வதற்குத்தான் பெருமுயற்சியும், கட்டுப்பாட்டு உணர்வும் தேவை. இதனைப் பின்பற்றிக்கொண்டால் இறுதிவரை நிலைத்து நிற்கும்.

இளமையிலேயே நெப்போலியன் விடியற்காலை ஐந்து மணிக்கு எழுந்திருக்கும் பழக்கத்தை மேற்கொண்டார். தளபதியாக இருந்தபோதும், நாட்டின் தலைவராக உயர்ந்த நிலையிலும், இறுதியில் கைதியாகி தீவில் அடைக்கப்பட்டபோதும் விடியற்காலையில் எழுந்திருக்கும் பழக்கம் அவரைவிட்டுப் போய்விடவில்லை.

ரயில் என்ஜின் உள்ளே ஏராளமான நீராவி சக்தி மறைந்திருப்பது போல், நம்முள் மாபெரும் சக்தி இருப்பதை உணர்ந்துகொண்டு, நல்ல பழக்கத்திற்கு அதனைப் பயன்படுத்தினால் நிச்சயம் நாம் நன்றாக வாழ முடியும். ■

**கவிதை நெஞ்சங்களுக்கு!**
**இவ்வாரச் சிறப்புக் கவிதைகளாக இளைய தலைமுறைப் பெண் கவிஞர்களுள் பேசப்படும் ஒருவராகத் தன்னை அடையாளப்படுத்திக் கொண்ட கனிமொழியின் மூன்று கவிதைகள் இங்கே தரப்படுகின்றன.**

## கருவறை வாசனை

அது சந்தனம் இல்லை
ஜவ்வாதோ, இப்போது
அழகான புட்டிகளில் விற்கும்
வாசனைத் திரவியமோ, எதைப்
போலும் இல்லாத புதுமணம்.
சின்ன வயதில் அவளைக்
கட்டிக்கொண்டு தூங்கியபோது
மெல்லியதாய் வந்து மூக்கைத் தழுவும்
அவள் அவிழ்த்துப் போட்ட சேலையைச்
சுற்றிக்கொண்டு திரிந்தபோது,
அவளின் வாசனையை,
பூசிக்கொண்டதாய் தோன்றும்.
முதல் மழையின் மண்வாடை போல்,
மூச்சு முட்ட நிரப்பி வைத்துக்கொள்ள
தூண்டும் அம்மாவின் வாசனை
எங்கெங்கோ பட்ட காயங்களுக்கு
மருந்தாய்,
அவள் மடியில் தலைவைத்துத்
தூங்கியபோதெல்லாம் பாதுகாப்பாய்,
என்னைத் தாங்கிய மணம்...
அவள் என்பதே அதுவும் சேர்ந்துதான்.
வளர்ந்துவிட்ட மனதின் சுவர்கள்
அவளைக் கட்டிக்கொள்ள விடாத
போதும்
மெத்தென்ற இதழாய் வருடிப் போகும்...
தேவைகளின் தடம் பிடித்து,
தூர வந்துவிட்ட போதும்,
எனக்கு மட்டுமே புரியும்
அவளின் கருவறை மணத்தை
அள்ளி அள்ளி என்
வீடெங்கும் தெளித்து,
சுருண்டு படுத்துத்
தூங்கிப்போகவேண்டும்.

## என் வீடு

நினைவு தெரிந்த நாளாய்
என் வீடு மாறவில்லை.

ஆங்காங்கே அழுக்குச் சுவர்களும்,
வாசலில் வெற்றிலைச் சுண்ணாம்பு
தடவிய தூண்களும்,
பாசி படர்ந்த கிணற்றடியும்,
சிவப்புப் பூப் பூக்கும் அரளியும்,

"அப்பனே முருகா" என
வாழ்க்கையை அவனுக்குத் தாரை
வார்த்துக் கொடுத்துவிட்ட அம்மாவும்,
மண்ணில் இருந்து இரண்டடி மேலே
கனவுகளோடு வாழ்ந்த அப்பாவும்
யாருமே மாறவில்லை.

வேலை கிடைத்து மாற்றல் வந்து
வேற்று மாநிலத்தில் சோற்றுக்குத்
திண்டாடி, கல்யாணமாகி
குழந்தை பிறந்து, தொப்பை விழுந்து
காசு சேர்த்து, வீட்டிற்கு
சிமெண்டு பூசி, வெள்ளையடித்து
குரோட்டன்ஸ் வைத்து, பார்த்த போதும்
அதே காரைபோன சுவரும்
தூண்களும் என் முதாதையரின்
தாம்பூலப் பதிவுகளும் அழியாமலே
இருந்தன.

ஊரோடு உறவுகள் நீர்த்துப்போய்,
என் ஊர் வாசனையே தெரியாத
ஒரு தூர தேசத்தின், தீப்பெட்டிச்
சொர்க்கத்தில்
சொருகிக்கொண்டபோதும்,

தன் இளம் இருட்டுச் சுவர்களுக்குள்
என்னைப் பத்திரமாய்ச் சீராட்டிய வீடு,
அம்மாவின் பழைய சேலையைப் போல
மெத்தென்று மனதைத் தழுவும்.

## சிறப்புக் கவிதை

## சொல்லுக்குள் சிக்காத கவிதை

மனதைத் திறந்து கொட்டிய
பின்பும் காலில் ஒட்டும்.
வார்த்தைக்குள் சிக்காத
தூளாய் மிச்சம்

சுழற்றி சுழற்றி அலைக்கழித்து
விரல்களின் நுனிகூட
தீண்ட முடியாத ஆழத்தில்
துளிர்விடும் உணர்வுகள்

கண்ணுக்குள் நிற்காத
மின்னல் கீற்றாய்த் தோன்றிச் சரியும்
இறைத்து இறைத்துத் தீர்த்ததாய்
நினைக்கையில் புதிய ஊற்று
உடைந்து வெளிப்படும்

காகித கத்தையுள் பிரசவிக்க
கருக்கொண்டு காத்திருக்கையில்
குறைப்பிரசவங்களாய்க் கவிதை

ஒரு தூரத்து இரவில் அடைக்கலமாகும்
சலனங்கள், என் பேனா
இடுக்கின் வழியே வழுக்கி
காலச் சேற்றில் புதைந்துபோகும்

ஒழிந்தது என்று
ஓய்ந்து சாய்கையில்
நெஞ்சுக் கூட்டில்
நெருப்பாய்த் தகிக்கும்.
அணைத்த பின்பும்
மண்டைக்குள் புகுந்து
தீய்க்கும் கங்கு.
சொல்லாததன் முன்
சொன்னது சரிய
தோற்றத் தளர்வில் தோய்ந்தபோது
மௌன தீரத்தில் உண்மையைத் தேடும்.
எழுத்துள் சிதையாத
அந்தச் சுதந்திரக் கவிதை -
வானம் தாண்டியும் வியாபிக்கும்
என்னை மறுபடி வம்புக்கிழுக்கும்.

# லேடீஸ் ஸ்பெஷல்

லேடீஸ் ஸ்பெஷல் லேடீஸ் ஸ்பெஷல் லேடீஸ் ஸ்பெஷல் லேடீஸ் ஸ்பெஷல் லேடீஸ் ஸ்பெஷல் லேடீஸ் ஸ்பெஷல்

## உங்கள் கணவர் அம்மா பிள்ளையா?

இளம் பெண்களிடம் உங்களுக்கு வரப்போகும் கணவன் எப்படி இருக்க வேண்டும்? எனக் கேட்டால் வரும் பதில்களில் அவர் அம்மா பிள்ளையாக இருக்கவே கூடாது என்பதும் ஒன்றாக இருக்கும். அம்மா பிள்ளைகளைப் பெண்களுக்குப் பிடிப்பதில்லை.

அம்மா பிள்ளைகள் பலவிதம். அதில் உங்கள் கணவர் எவ்விதம் என்றும், எப்படிக் கையாள்வது என்றும் தெரிந்து கொள்ளுங்கள்.

தன் கணவருடன் சரியில்லாமல் போகும்போது, அந்த ஆற்றாமையைத் தீர்த்துக்கொள்ள மகனையும் ஆயுதமாகப் பயன்படுத்திக்கொள்ளும் அம்மாக்கள் அதிகம். கணவன் மேல் செலுத்த வேண்டிய பாசத்தையும் சேர்த்து, மகன் மீது வைத்து வளர்ப்பார்கள். சந்தையில் காய்கறி விலையில் ஆரம்பித்து பக்கத்து வீட்டுப்பெண் சொன்ன சுவாரஸ்யமான கதைகள் சகலத்தையும் தன் மகனிடம் பகிர்ந்து கொள்வார்கள். எல்லா விஷயங்களுக்கும் மகன் எடுக்கும் முடிவே சிறந்தது என்று நம்புவார்கள். இதே மனப் பான்மையில் வளரும் மகன்,தனக்குத் திருமணமானதும், தன் மனைவியும் அம்மா போல் நடந்துகொள்வதையே விரும்புவான். மனைவி சுயமாக முடிவெடுப்பதை அவனால் சகித்துக்கொள்ள முடியாது.

நீங்கள் இந்த ரகமா? மாமியாரின் வழி உங்களுக்கு வேண்டாம். உங்கள் வழிக்கு மாமியாரைக் கொண்டு வரப் பாருங்கள். அதற்கு முன் மாமியாரைக் "காக்கா" பிடியுங்கள்.

மகனுக்கு காலைத் தேனீர் கொடுப்பதிலிருந்து, சப்பாத்துக் கழற்றி விடுவது வரைக்கும் எல்லாம் செய்து கொடுத்துப் பழக்கப்படுத்தியிருப்பார் அம்மா. அதாவது அந்த அம்மாவின் பார்வையில் தன் மகன் இன்னும் குழந்தையே! இந்தச் சொகுசு வாழ்க்கை அந்தச் செல்ல மகனுக்கும் பிடித்திருக்கும். கல்யாணமானதும் மனைவியிடமும் அதையே எதிர்பார்க்கிறான். அங்கேதான் பிரச்சனை ஆரம்பம்.

உங்கள் கணவர் இன்னும் குழந்தையாகவே நடத்தப்பட விரும்புகிறாரா? எப்படி வளர்த்து வச்சிருக்காங்க உங்கம்மா என்று அவரது அம்மாவைக் குறை சொல்லாதீர்கள். அவரது வேலைகளையாவது அவரே செய்துகொள்ளப் பழக்குங்கள். வீட்டு வேலைகளில், உங்களுக்கு உதவ வேண்டும் என எதிர்பார்ப்பது வீண். ஐந்திலே வளைந்திருக்க வேண்டும். அதை நினைவில் வைத்துக் கொண்டு உங்கள் மகனையாவது நல்ல படியாக வளருங்கள்.

அம்மா நில் என்றால் நின்று, உட்காரச் சொன்னால் உட்கார்ந்து பழகிய வரா உங்கள் கணவர்? தன் அம்மாவை வேளாவேளைக்குச் சாப்பிட்டியா, தூங்கினியா என்று நீங்கள் கேட்க வேண்டும் என எதிர்பார்ப்பார். படுத்த படுக்கையாய் கிடக்கும் உங்கள் உறவினர் ஒருவரை எப்படியிருக்கிறார் என்றுகூட விசாரிக்கத் தோன்றாது அவருக்கு. கோபம் வந்தால் மூன்றாம் நபர் இருப்பது கூடத் தெரியாமல் கண்முடித்தனமாகக் காட்டுக்கூச்சல் போடுவார். ஏன் லேட் என்று என்றாவது ஒருநாள் நீங்கள் கேட்டாலும் பொறுக்காமல் ஆகாயத்துக்கும், பூமிக்குமாகக் குதிப்பார். பாவம், அவரைச் சொல்லிக் குற்றமில்லை. அம்மாவின் ஆதிக்கம் அவரை அப்படி ஆட்டிப்படைக்கிறது. அம்மாவை எதிர்க்க முடியாத வெறி, உங்களிடம் திரும்புகிறது. மற்றப்படி உங்கள் கணவர் நல்லவர். அன்பானவர். இவரைத் திருத்துவதென்பது ஒரே இரவில் நடக்கிற விஷயமில்லை. பொறுமையான அணுகுமுறை ஒன்றே அவரை மாற்றும்.

அம்மா இல்லாமல் ஒரு அணுவும் அசையாதா உங்களவருக்கு? ஆசையாய் ஒரு முழம் பூ கேட்டால்கூட அம்மா அனுமதியோடுதான் வாங்கித் தருவாரா? இந்த மாதிரி ஆட்களிடம் நீங்கள் எச்சரிக்கையாக இருக்க வேண்டும். நாளைக்கே அம்மாவின் பேச்சைக் கேட்டு உங்களைவிட்டு அவர் விலகினாலும் ஆச்சரியமில்லை. இந்த மாதிரிக் கணவனைத் தலையணை மந்திரம் போட்டாலும் திருத்தமுடியாது. மாமியார் மெச்சும் மருமகளாவது ஒன்றே இதற்கு வழி. பிடிக்கிறதோ, இல்லையோ மாமியாருக்கு விருப்பமான முறையில் கொஞ்ச நாளைக்கு நடந்துகொள்ளுங்கள். கணவரிடம் பெறமுடியாத விஷயங்களை மாமியாரின் உதவியோடு சாத்தியப்படுத்திக்கொள்ளுங்கள்.

நல்ல விஷயங்களுக்காக அம்மாவைப் புகழும் கணவருக்கு அனாவசியமாக அம்மாபிள்ளை பட்டம் கொடுக்காதீர்கள். உங்களுக்கும் உங்கள் கணவருக்கும் இடையேயான விஷயங்களில் மாமியார் தலையிடாதவரை, கணவர் அம்மா புராணம் பாடுவதில் எந்தத் தவறுமில்லை. மாமியாரிடம் உள்ள நல்ல விஷயங்களை, குணங்களை நீங்களும் பின்பற்றலாம்.


செல்வாஸின் 7

சல்வார் பரிசுப் போட்டி

நவநாகரீக மங்கையர்
தரமான சல்வார்களுக்கு
தலைநகரில் நாடும் ஒரே இடம்

SELVAS

No. 4, Nelson Place (Near H.N.B)
Wellawatta, Colombo-06. Tel: 552328

மகளிர் மட்டும் : மகளிர் மட்டும்



★ ஒவ்வொரு வாரமும் ஒரு அதிஷ்டசாலி தேர்ந்தெடுக்கப்படுவார். வாரத்தில் ஒருவருக்கு மட்டுமே சல்வார் பரிசு வழங்கப்படும்.

★ கீழேயுள்ள கூப்பனை நிரப்பி தபால் அட்டையில் ஒட்டி அனுப்பினால் போதுமானது.
(பதிவுத் தபால்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா)

★ ஒருவர் ஒன்றுக்கு மேற்பட்ட கூப்பன்களையும் அனுப்பலாம்.

**செல்வாஸின் வாரம் ஒரு சல்வார்** S

பெயர்:.........................

முகவரி:.........................

.........................

தொழில்:.........................

**உண்மை – நேர்மை – வெளிப்படைத் தன்மை**

பி.கு:
அதிஷ்டசாலியாக தெரிவு செய்யப்படுகிறவர்கள் தமது புகைப்படங்களை அனுப்பினால் பிரசுரிக்க உதவும்.

கூப்பனை அனுப்பிவைக்க வேண்டிய இறுதித் திகதி 25-05-2002

அனுப்பவேண்டிய முகவரி:- 'செல்வாஸின் வாரம் ஒரு சல்வார்', தினமுரசு வாரமலர், த.பெ.இல-1772, கொழும்பு.


### இந்த வாரம் யாருக்கு சல்வார்?
### மஸ்கெலியா வாசகிக்கு அதிஷ்டம்!

**இவ்வாரம் சல்வார் பரிசுபெறும் வாசகி இவர்தான்**

கே. மகாலெட்சுமி,
கெலனிய எஸ்டேட், மஸ்கெலியா.

பரிசுபெற்ற வாசகியை முரசின் பல்லாயிரம் வாசக, வாசகியர் சார்பில் வாழ்த்துவோம்
அடுத்தவாரம் யாருக்கு? ஒருவாரம் பொறுமையாக இருக்கக் கூடாதா?!
இவ்வாரம் பரிசுக்குரியவர் பரிசு பெறும் திகதி பற்றி தபால் மூலம் அறிவிக்கப்படும். தபால் மூலம் அறிவிக்கப்படும் விபரங்களைப் பெற்றபின் எம்முடன் தொடர்பு கொண்டு பரிசினைப் பெறலாம்.

# அனிதாவின் காதல்கள் 45

"அதனால் தீர்மானம் உங்களுடையது"

மல்லிகா, "என்ன பேசியாச்சா...?" என்றபடி, விஸ்வநாதனை நோக்கி வந்தாள்.

அனிதா எழுந்து பில்லுக்குப் பணம் கொடுக்க முயன்றபோது அவளைத் தடுத்து விஸ்வநாதன் கொடுத்தான்.

"உங்களுக்குக் கார் வந்திருக்கா?" அனிதாவிடம் கேட்டாள் மல்லிகா.

"கார் எல்லாம் சி.பி.ஐ காரங்க சீல் பண்ணிட்டாங்க" என்றாள் அனிதா.

"கஷ்டகாலம்... நான் உங்களை ஆட்டோவில கொண்டுவிடவா?"

பஸ் இருக்குமா?"

"என்ன முரண்பாடு பாத்தியா மல்லிகா! தமிழ்நாட்டிலேயே ஏன் இந்தியாவிலேயே பெரிய பணக்காரனான வைரவனின் மனைவி பல்லவன் பஸ்ல போறதாவது!" -விஸ்வநாதன்.

"சில பேருக்கு அவ்வளவு தான் அதிர்ஷ்டம்!" என்றாள் அனிதா.

"ஸாரி, நான் ஏதாவது தப்பா சொல்லிட்டேனா?"

"இல்லை... மல்லிகா... எங்கூட வீட்டுக்கு வரீங்களா?" - அனிதா கேட்டாள்.

"தாராளமா"

மல்லிகாவுடன் வீட்டிற்கு வந்தபோது அதிகாரிகள் காத்திருந்தார்கள். பெண் போலீஸும் இருந்தார்கள். அனைவரும் கவலையுடன் காத்திருக்க,

"அனிதா... பாரு... உனக்காகத் தான் அவங்கள்லாம் வந்திருக்கா" என்றார் மகாதேவன்.

"எதுக்கு?" என்றாள் அனிதா.

அந்தப் பெண் போலீஸ் அதிகாரி அனிதாவிடம் பரிவுடன் வந்து, "ஸாரி, உங்களையும் அரஸ்ட் பண்ண வேண்டியிருக்கு" என்றாள்.

"எதுக்கு?"

"கொஞ்சம் கேள்வி கேக்கறதுக்கு. பயப்படாதீங்க..."

"இந்த வைரவன் தானும் ஆப்ட்டுண்டு எல்லோரையும் மாட்டி வெச்சுருவான் போல... ஐயோ... என்ன சோதனை வெங்கட்ரமணா" என்றாள் கமலம்.

"அனிதா... மாத்து புடைவையை எடுத்துண்டு போ. ரொம்ப நாளாகுமோ போலீஸ்காரம்மா?" - கமலம் கேட்டாள்.

"சொல்ல முடியாதும்மா"

"நானும் வரலாமா?" என்றார் மகாதேவன்.

"வாணாங்க...ராப்பூரா அங்க பெஞ்சுல உட்கார வேண்டியிருக்கும்" என்றாள், பெண் போலீஸ்.

"மேடம்... எம் பொண்ணு அவ..."

"அதில எங்களுக்கு அபிப்பிராய பேதம் இல்லைங்க... அவங்க வைரவன் மனைவியுங் கூட! அதான் ப்ராப்ளம்."

அனிதாவை அசோக் நகரில் ஒரு போலீஸ் நிலையத்திற்கு அழைத்துச் சென்றார்கள். காபி கொடுத்து, நாற்காலியில் சௌகரியமாக உட்கார வைத்து, ..பேனைப் போட்டார்கள்.

"முக்கியமான டாகுமெண்ட்ஸ் எல்லாம் உங்க கிட்ட தானே இருக்கு? அனிதா... இப்பவாவது உண்மையைச் சொல் லிடுங்க..."

"......"

"அந்த டாக்குமேண்ட்ஸ் எதுவும் உங்களுக்குத் தெரியாதுன்னு சொன்னீங்க! உங்க ஹஸ்பண்ட் பிஸினஸ் பற்றி உங்களுக்கு எவ்வளவு தெரியும்...? அவர் ஸ்விஸ் பாங்க் அக்கௌண்ட் விவரமெல்லாம் உங்ககிட்ட சொல்லியிருக்கார் தானே?"

"எனக்கு எதும் தெரியாதுங்க" - அனிதா சொன்னாள்.

"பாருங்க... இந்த ஸ்டேஜில எதையும் மறைச்சு வைக்கிறதில அர்த்தமேயில்லை. உங்க கணவரைக் கடவுளே வந்தாலும் காப்பாத்த முடியாது. நீங்க சரியான விவரம் கொடுத்தா இழுத்தடிக்காம-வன்முறைகளைப் பிரயோகிக்காம..."

"நான் சொன்னதுதாங்க சரி!"

"நீங்க லை-டிடெக்டர் டெஸ்ட் எடுப்பீங்களா?"

"எப்ப?"

"நாளைக்கு!"

யாராரோ வந்து என்னென்னவோ கூடிப் பேசினார்கள்.

"க்ளீனா எல்லாத்தையும் சொல்லிட்டீங்கன்னா, அந்த டாக்குமெண்ட்ஸ் எல்லாத்தையும் கொடுத்துட்டீங்கன்னா உங்களுக்கு அதிகம் தொந்தரவு கொடுக்காம வுட்டுர்றோம்."

"எங்கிட்ட ஏதும் இல்லைங்க... எனக்கு ஏதும் தெரியாது..."

"இப்படிப் பிடிவாதமா இருக்காதீங்கம்மா..." என்றார் அந்தப் போலீஸ் சூப்பரிண்டெண்ட்டெண்ட் நெற்றியைச் சுருக்கிக் கொண்டு, "யாரைக் காப்பாத்த விரும்பிறீங்க? உங்களுக்குக் கல்யாணமாகி ஒரு மாசம் தான் ஆகுதுன்னு கேளவிப்படடேன். உங்க கிடட அவர் பிஸினஸ் பற்றி ஏதும் விவரம் சொல்லலைன்னா அவர் பொய் சொல்லி உங்களைக் கல்யாணம் பண்ணிக்கிட்டிருக்கார்னு ஆவது! அந்தப் பொய்யனை - மோசடிக்காரனை... நீங்கள் காப்பாத்த விரும்புறீங்களா? உங்க லை..பை பாழ் பண்ணின ஆசாமிக்கு - அந்த ஒரு மாசக் கணவனுக்கு - அனுதாபமே காட்ட வேண்டியதில்லைங்க. சொல்லிடுங்க...


நவீன எழுத்துலக வேந்தன் சுஜாதா


எங்கே அந்த டாகுமெண்ட்ஸ் எல்லாம்?"

அனிதா, "எனக்குத் தெரியாது" என்றாள்.

அந்தப் போலீஸ் அதிகாரி பெருமூச்சு விட்டு, "நல்ல தனமா சொன்னா கேக்க மாட்டீங்க... இல்லை? சரி... பொம்பளையாச்சேன்னு பார்க்கறேன்... இல்லை, செவுட்டில நாலு சவுட்டு சவுட்டிருப்பேன் தெரியுமில்லை... அடிக்கமாட்டோம்னு நெனச்சீங்களா... வரதராஜன்... இவங்களை நாளைக்கு இடம் மாத்திருங்க... நம்ம ஆ..பீஸுக்குக் கூட்டியாங்க. அது வரைக்கும் இங்கேயே இருக்கட்டும்" என்றார்.

அப்போது வாசலில் சீதாராமனும், விஸ்வநாதனும் வக்கீலுடன் வந்திருந்தார்கள். அவர்கள் இன்ஸ்பெக்டர் வரதராஜனைப் பார்க்க விரும்புவதாகச் சொன்னார்கள்.

"நீங்க எங்க கிளையண்ட்டை- அதும் பெண் பிள்ளையை - என்ன ஆதாரத்தின் பேர்ல வெச்சிருக்கீங்க சொல்லுங்க...?" வக்கீல் கேட்டார்.

"பாருங்க... பொறுப்புள்ள பெண் போலீஸ் அதிகாரியை இவங்க வீட்டிற்கு அனுப்பி இங்க கூட்டிக்கிட்டு வந்து அரஸ்ட் பண்ணியிருக்கோம். பெண்களை அரஸ்ட் பண்ணினா உடனே சூப்ரண்டுக்குத் தெரிவிக்கணும்... நாங்க அதுவும் செய்தாச்சு... நீங்க யாரு?"

"என் பெயர் சீதாராமன்- இவளுடைய மாமா..."

"சீதாராமன்... அவங்க கிட்ட சொல்லுங்க. டாகுமெண்ட்டுகளைக் காணலை... அதை எங்க வெச்சிருக்காங்கன்னு சொல்லச் சொல்லுங்க. அந்தக் கணத்திலேயே வுட்டுர்றோம்" என்றார் இன்ஸ்பெக்டர். இதைக் கேட்டுக் கொண்டிருந்த சீதாராமன் முகம் இறுகியது.

"எதுக்காகவோ இந் பிடிவாதம் புடிக்கிறாங்க. அதுவும் அத்தனை ஏமாற்று வேலை ஆசாமிக்கு! ஒண்ணாம் நம்பர் ரோக் சார் அவன்! எத்தனை பேர் பணத்தைக் கொள்ளையடிச்சிருக்கான் தெரியுமா...? இந்தம்மா பாவம். அறியாம புருஷனைக் காப்பத்தறதா எண்ணிக்கிட்டு விஷயத்தை ரொம்பச் சிக்கலாக்கறாங்க..."



"அனிதா எதுவும் சொல்லலைன்னா என்ன பண்ணுவீங்க இன்ஸ்பெக்டர்?"

"நாளைக்கு லை-டிடெக்டர் டெஸ்ட் வெச்சுப் பொய் சொல்றாங்களான்னு கண்டுபிடிப்போம்... அப்புறம் இருக்கவே இருக்கு..."

"என்ன?" என்றான் சீதாராமன் நடுக்கத்துடன்.....

"பல முறைகள்! பொம்பளைங்களை விசாரிக்கிறதுக்குப் பலமுறைகள் இருக்கு"

சீதா ஜன்னல் வழியாகப் பார்த்துக் கொண்டேயிருந்தான். அனிதாவை அந்தப் பெண் போலீஸ் "எந்திரிம்மா... போகலாம்" என்றாள். "எந்திரின்னா!" என்று அனிதாவை லட்டியால் தள்ளினாள்.

அனிதா நிலையத்தின் பின்புறத்திற்கு அழைத்துச் செல்லப்படுவதைக் கவனித்த சீதா கண்களில் நீர் ததும்ப,

"இன்ஸ்பெக்டர் டாகுமெண்ட்ஸ் எங்க இருக்குன்னு சொன்னா அவங்களை விட்டுருவீங்களா?" என்றான்.

"தாராளமா! அதை விசாரிக்கத் தான் அவங்களை இங்க வச்சிருக்கோம்"

சீதாராமனைச் சற்றுத் தள்ளி அழைத்துச் சென்ற விஸ்வநாதன், "உனக்கு ஏதாவது அதைப் பத்தித் தெரியுமா சீதாராமன்?" என்று கேட்டான் மெல்லிய குரலில்.

"தெரியும்... எல்லாம் எங்கிட்ட தான் இருக்கு"

[அனிதா வருவாள்...]



தேனிருந்த சோலை சூழ்
-தென்னிளசை நன்னகரின்
மானிருந்த பையன் மலரடியே - வானிற்
சுரர்தமனியன்மால் தொழுங்காற் கிரீடத்
தரதனங்கள் சிந்து மகம்.
-சுப்பிரமணிய பாரதியார்-



## பாப்பா முரசு சிறுகதை

# சுந்தரி

மதுகூர் என்ற நாட்டைச் சித்து என்ற அரசன் ஆண்டான். இவனுக்கு முன்னா என்றொரு மகன் இருந்தான். இளவரசன் முன்னா ஆணழகன். வீரத்தில் சிறந்தவன், அறிவாளி. இதனால் முன்னாவை மணக்க இளவரசிகள் போட்டிபோட்டனர். ஆனால், முன்னா, "தன்னை மணக்கும் மணப்பெண் அழகியாக மட்டும் இருக்கக்கூடாது. சிறந்த அறிவாளியாக புத்திசாதுரியம் உடையவளாக இருக்க வேண்டும். வெறும் அரண்மனையை அலங்கரிக்க உதவும் அழகுப் பதுமை எனக்குத் தேவையில்லை. அரசு நடப்புக்களிலும், நாட்டை ஆட்சி செய்வதில் எனக்கிணையாக எல்லாக் காரியத்திலும் பங்கு பெறுபவளாகவும் இருக்க வேண்டும். அப்போதுதான் எங்களுக்குப் பிறக்கும் குழந்தையும் மிகுந்த அறிவாளியாக இருக்கும் என்றான்.

"எனவே என்னை மணக்க விரும்பும் பெண் அழகியாகவும், யாருடைய துணையுமின்றித் தனியாக அரண்மனைக்கு வரவேண்டும். அவள் எந்த அலங்காரமும் செய்திருக்கக் கூடாது. தன்னை அழகுபடுத்த ஆடை, ஆபரணங்கள் எதுவுமே அணிந்திருக்கக்கூடாது. ஆனாலும், தன்னுடலை மூடியிருக்க வேண்டும். குதிரை மீதோ, தேரிலோ வரக் கூடாது. அதே சமயம் அவள் நடந்தும் வரக்கூடாது. அவளது கால் தரையைத் தொட்டும் தொடாமலும் இருக்க வேண்டும். அவள் என்னைத் தேடி இரவிலோ, பகலிலோ வரக்கூடாது. அப்படிப்பட்ட பெண்ணைத்தான் நான் மணப்பேன்" என்றான்.

இந்தச் செய்தி நாடு முழுவதும் தெரிவிக்கப்பட்டது. இருந்தும் ஒரு இளவரசியும் வரவில்லை. மன்னரும், அரசியாரும் கவலைப்பட்டனர்.

"இது என்னடா விபரீத ஆசை. நீ சொல்லும் நிபந்தனைப்படி ஒரு இளவரசியும் வரப்போவதில்லை. பேசாமல் நாங்கள் பார்க்கும் இளவரசியை மணந்துகொள்" என்றனர்.

"அம்மா... ஒரு சின்னப் பரீட்சை இது. புத்திசாதுரியமுள்ள பெண், நிச்சயமாக என்னோட கோரிக்கையை நிவர்த்தி செய்ய முடியும். நீ பொறுத்திருந்து பார். நான் ஆசைப்பட்டபடியே அழகும், அறிவுமுள்ள பெண் வருவாள்" என்றான்.

அந்நாட்டின் எல்லைப் பகுதியில் காடொன்று இருந்தது. அங்கு முனிவர் ஒருவர் வாழ்ந்து வந்தார். காட்டில் அநாதையாகிக் கிடந்த பெண் குழந்தை ஒன்றைத் தூக்கி எடுத்து வளர்த்து வந்தார். அவள் பெயர் சுந்தரி. மிகவும் பேரழகியாக வளர்ந்தாள் சுந்தரி.

ஒரு நாட்டின் வாரிசாக வந்த அவளைக் கொல்வதற்குக் கொண்டு வந்த கூலிப்படையினர், குழந்தையின் அழகில் மயங்கி, அவளைக் கொல்ல மனமில்லாமல் காட்டில் போட்டுவிட்டுச் சென்றனர்.

முனிவரிடம் வளர்ந்ததால் அறிவு, பண்பு, அடக்கம் இவற்றுடன் ராஜ பரம்பரைக்கேயுரிய அழகுடன் மிளிர்ந்தாள் சுந்தரி.

ஒரு நாள் காட்டில் மிருகம் ஒன்று தாக்கியதால் அடிபட்டுக் கிடந்த மனிதன் ஒருவனை முனிவரும், சுந்தரியும் காப்பாற்றினர். அவன் மூலம்தான் இளவரசனின் ஆசையைப் பற்றித் தெரிந்துகொண்டனர். ஏற்கனவே இளவரசனின் அறிவு, வீரத்தைக் குறித்து முனிவரது சீடர்கள் சொல்லக் கேள்விப்பட்டிருந்தாள் சுந்தரி. சுந்தரியின் மனம் தன்னையறியாமல் இளவரசன் மீது விருப்பம் கொள்வதை உணர்ந்து எத்தனையோ முறை தன் மனதைக் கட்டுப்படுத்தி இருக்கிறாள். இதுவரை இளவரசனின் கோரிக்கைப்படி ஒரு பெண்ணும் வரவில்லை என்பதை அறிந்ததும், தான் ஏன் முயற்சிக்கக் கூடாது என்று எண்ணினாள். முனிவருக்குத் தெரியாமல் இளவரசனின் நிபந்தனைக்குத் தேவையான பொருட்களைச் சேகரித்துக்கொண்டாள்.

**மறுநாள்-**

விடியற்காலை வேளையில் மீன் பிடிக்கும் வலையை எடுத்து ஆடை போல் அணிந்துகொண்டாள். இப்போது சுந்தரி நிர்வாணமாக இல்லை; ஆனாலும் ஆடையேதும் அணியவில்லை. பிறகு கொழுத்த செம்மறியாட்டின் மீது ஏறி அமர்ந்தாள். அவளது பாதம் பூமியைத் தொட்டும் தொடாமலும் இருந்தது. நேராகப் புறப்பட்டு அரண்மனையை அடைந்தாள். அது இரவு வேளையும் அல்ல; பகல் வேளையும் அல்ல. விடியற்காலைப் பொழுதாக இருந்தது.


இந்தக் கோலத்தில் ஒரு பெண் வருவதைக் கண்ட அரண்மனைக் காவலர்கள் அவளை உள்ளே விட மறுத்தனர். பின்னர், "இளவரசனின் நிபந்தனைப்படி வந்திருக்கிறேன்" என்று சொன்னதும் அனுமதித்தனர். விஷயமறிந்த இளவரசன் சுந்தரியை உள்ளே அழைத்துச் சென்றான். அவளது அழகும் புத்திக்கூர்மையும் அவனைக் கவர்ந்தது. பிறகு, தன் தந்தையான முனிவரிடம் தான் சொல்லாமல் வந்த விஷயத்தைக் கூறினாள். ஆட்கள் அனுப்பப்பட்டனர். மகளைக் காணாது தவித்த முனிவர் அரண்மனை வந்தார்.

"அப்பா... என்னை மன்னித்து விடுங்கள். உங்களிடம் சொல்லிவிட்டு வந்தால், நீங்கள்தான் எனக்கு இவைகளைச் சொல்லிக் கொடுத்ததாகத் தவறாக நினைப்பார்கள். என்னோட அறிவைச் சந்தேகப்படுவார்கள். அதனால்தான் உங்களிடம் சொல்லாமல் வந்தேன்" என்றாள்.

அடுத்து வந்த சுபதினத்தில் இளவரசன் முன்னா, இளவரசி சுந்தரி இருவருக்கும் கோலாகலமாகத் திருமணம் நடந்தது. தன் மகளைச் சிறந்த இடத்தில் சேர்த்துவிட்ட மகிழ்ச்சியில் நிம்மதியுடன் காட்டைநோக்கிச் சென்றார் முனிவர்.

முனிவரிடம் கற்ற அறிவுத்திறனால் இளவரசனுக்குத் தேவையான ஆலோசனைகளை அவ்வப்போது வழங்கி, சீரும் சிறப்புமாக நாட்டை ஆண்டனர் முன்னா, சுந்தரி தம்பதியினர்.

## சிறந்த வர்ணத்திற்கு பரிசு தரும் எண்ணம்!



மேலே உள்ள படத்திற்கு வர்ணம் தீட்டி தபாலட்டையில் ஒட்டி அனுப்புங்கள். சிறந்த வர்ணம் ஒன்றுக்கு பரிசு ரூபா 25/= காத்திருக்கிறது. அனுப்பவேண்டிய கடைசித் திகதி **25.05.2002.**

வர்ணம் தீட்டும் போட்டி இல: **446**
தினமுரசு வாரமலர்
த.பெ.இல.1772
கொழும்பு.

### வர்ணம் தீட்டும் போட்டி இல: 444

**பரிசுக்குரியவர்:**
**எஸ். செல்வராஜி**
அரவத்தை தோட்டம், சாமிமலை போஸ்ட்

**பாராட்டுக்குரியவர்கள்:**

| | |
|---|---|
| **எம். துஷ்யந்தன்**<br>அலெக்ஸாண்ட்ரா வீதி, வெள்ளவத்தை, கொழும்பு-06. | **டெபொறா அன்ரனி**<br>பொரலம் வீதி, பம்பரகல, நுவரெலியா. |
| **ச. றாமேஸ்வர்**<br>சிவன் பண்ணை வீதி, யாழ்ப்பாணம். | **என். தஜேந்தன்**<br>நீர்ப்பாசன விடுதி, குடியிருப்பு, வவுனியா. |
| **எஸ். கவிஷாலினி**<br>இந்து தேசிய கல்லூரி, புஸ்ஸல்லாவ. | **எம். பிரசாந்த்**<br>கொனன் டிவிசன், லிந்துல போஸ்ட். |
| **ஜெனிபர் மகேஷிகா**<br>கிங்ஸ்டன் சர்வதேசக் கல்லூரி, முகத்துவாரம்,கொழு.-15. | **லோசனி சரலிங்கம்**<br>ஒமுட் தோட்டம், அக்கரப்பத்தனை. |
| **எல். பாராத்**<br>பலாங்கொடை த.ம.வி., பலாங்கொடை. | **எ.ஃப். றிப்னா,**<br>மஹ்மூத் மகளிர் கல்லூரி, கல்முனை. |

## விடுகதைகளும் விடைகளும்


01. நேற்றுக் கருப்பு, இன்று வெள்ளை, நான் யார்?
02. காலையில் ஒருவன், இரவில் இன்னொருவன், அவன் யார்?
03. ஓடிக்கொண்டிருப்பது இவர்கள் நேரம்; ஆனாலும் நேரத்துக்காக இவர்கள் ஓடிக்கொண்டிருப்பார்கள், அவர்கள் யார்?
04. வானில் இருந்து பூமிக்கு வந்த வெள்ளிக் கம்பி; தரையில் பட்டதும் தாவி ஓடுது, அது என்ன?
05. முடிவைத்திருந்த முத்துக்கோர்வையைத் திறந்து வைத்திருந்தாலும் கவலையில்லை, அது என்ன?
06. கிணற்றைச் சுற்றி நூல்வேலி, அது என்ன?
07. தும்மலுக்கு வெடிக்கும் துப்பாக்கி; யாரையும் சேதப்படுத்தாத சின்னத் துப்பாக்கி, அது என்ன?
08. வளைந்து நெளிந்து செல்வான்; வழியெங்கும் தாகம் தீர்ப்பான், அவன் யார்?
09. வீட்டைத் தூக்கியபடி வீதி வீதியாகப் பயணம் போவான் அவன் யார்?
10. "தட்...தட்..." தட்டினால் தகவல் பறக்கும், அது என்ன?

**விடைகள்**

01. தலைமுடி
02. சூரியன்-சந்திரன்
03. கடிகாரமுட்கள்
04. மழைத்துளி
05. பற்கள்
06. கண்-இமை
07. மூக்கு
08. நதி
09. ஆமை
10. தந்தி

# லாமா

ஒட்டகம் போலவே காட்சியளிக்கும் இந்த விலங்கின் பெயர் லாமா. தென்னமெரிக்கா நாட்டின் உயரமான மலைப்பகுதிகளில் அதிகம் காணப்படுகிறது.



இதன் தடித்த தோல் கடுங்குளிரையும் தாங்கும் வகையில் இருக்கிறது. 10-16 ஆயிரம் அடி உயர பெரு நாட்டின் மலைகளில் லாமாக்கள் அதிகம் இருக்கின்றன. அங்கு மலைப்பகுதிகளில் வாழும் மக்கள் பொருட்களைச் சுமந்து செல்வதற்கு லாமாக்களைப் பயன்படுத்துகின்றனர்.


ஒட்டகம் பாலைவனக் கப்பல் என அழைக்கப்படுவதைப் போல் லாமாவை மலைக்கப்பல் என்று அழைக்கலாம். 200, 300 கிலோ எடையைக் கூட இவை எளிதாகச் சுமந்து செல்கின்றன.

லாமாவின் உரோமத்திலிருந்து கம்பளி ஆடைகள் தயாரிக்கப்படுகின்றன. இதற்குச் சர்வதேச அளவில் நல்ல வரவேற்பு இருக்கிறது. இந்தக் கம்பளி ஆடைகள் இரண்டாயிரம் ரூபா முதல் பத்தாயிரம் ரூபாவரை விலை போகின்றன.

லாமாக்களில் இரண்டு வகை உண்டு. அவை விகுனா, அல்பாகா. பெரு நாடு முழுவதும் இந்த லாமாக்கள் காணப்படுகின்றன.


## இந்த வாரப் புதிர்

இங்கு 16 கொண்டை ஊசிகளைக் கொண்டு 8 முக்கோணங்கள் உருவாக்கப் பட்டுள்ளன. இவற்றில் 4 கொண்டை ஊசிகளை மட்டும் அகற்றி 4 முக்கோணங்கள் வரும்படி செய்ய வேண்டும். முயன்று பாருங்கள்.



முடியாதவரகள முயன்று பாருங்கள் அடுத்த வாரம்வரை.

## அறிவுத்தேடல்




சென்றவாரப் புதிருக்கான விடை
படத்தில் புள்ளிக் கோடிட்ட வழியாக நடக்க வேண்டும். அதாவது கடக்கவேண்டிய எண் பாதை
18-34-15-13-20

# இறுதி இதழ்



நாட்குறிப்பேடு 1915ம் ஆண்டு.
திகதி 30 பெப்ரவரி
இறந்துபோன என் சுவாசக் காற்றுக்கு
வர்ணம் தீட்டிப் பார்க்கின்றேன்.
முடிந்து போன அந்த வசந்தத்தில்
விழ்ந்து கிடக்கும்
முடிச்சுக்களை அவிழ்த்துப் பார்க்கின்றேன்
என் மூர்க்கமான அன்புக்கு அவள் வைத்த
முற்றுப் புள்ளியைத் தடவிப் பார்க்கின்றேன்
கருகிவிட்ட எந்தன் கண்ணீரின்
வாசனையை இப்போதுதான் நுகர்கின்றேன்
என் ஞாபகப் பிரதியின் பகுதிகளை
நான் பின்னோக்கி இழுத்துச்செல்கின்றேன்

படர்ந்து கிடந்த பாடசாலைக்
கட்டடங்களிலும்
பூவிதழ்கொண்டு நிரப்பிய அதன்
சாலைகளிலும்
நான் பதித்துச் செல்லும் தடங்களை
இப்போது
யாரோ திருடுவதாய் உணர்ந்தேன்
முகமறியாது, எந்தன் முகவரியறியாது
முதன்முதலில் என்னை ஒரு சித்திரம்
வர்ணிப்பதை ரசித்திருந்தேன்
நாட்களும் வயதாக எந்தன் நலனிலும்
நாட்டங்கொள்வதை நான்
அறிந்துகொண்டேன்
ஒருகணம் சிரித்து மறுகணம் மறையும்
மின்னலாய்
அன்றுதான் அவள் பூமுகம் கண்ணுற்றேன்.
அப்போது அவளின் காதலை அச்சுப்
பிரதி செய்தது
எந்தன் வகுப்பறைக் கரும்பலகைதான்.

வியந்தேன், மறுத்தேன், முறைத்தேன்;
அழுதாள்
அவள் கண்களில்கூட இத்தனை
கார்மேகங்கள்
இருக்குமென நான் அறிந்திருக்கவில்லை.
நான் ஏற்கா காதலை அவள் சுவாசித்து
மூச்சுத் திணறுவதைக் கேள்வியுற்றேன்
முக்கியத்துவம் கொடுக்காத எந்தன்
காதலுக்கு
முதன் முறையாகத் திருமுகம் வரைந்தேன்.
அனுப்பி வைத்தேன், அவள் அதற்கும்
அழுதுவிட்டாள் ஆனந்தத்தில்
நாழிகைகள் இறந்துகொண்டிருக்க;
நியாயமாகப் பட்ட எந்தன் காதலை
அவளை விதைத்தவர்கள்
மறுத்துவிட்டார்கள்
வேதனையாய் அவள் இதனை எந்தன்
இருப்பிட மேசைமீது வெளியிட்டிருந்தாள்.
இருந்தும் அவள் என்னை மறக்காததால்
என்னுள்ளே அவளை
வளர்த்துக்கொண்டேயிருந்தேன்.
இதற்கிடையில்;
நாம் பேசிக்கொண்டது மௌனங்களாலும்
மரியாதைக்குரிய மடல்களாலும்தான்.

அன்றொருநாள்-
அவள் திருத்தி எழுதிய எந்தன்
காவியத்துக்கு
முடிவுரையும் செதுக்கி, முத்தமும்
கொடுத்து அனுப்பியிருந்தாள்.
சென்ற இரவோடு அனுப்பி வைத்த
அந்தச் சிறுமடல்தான்
நான் உயிருடன் இருக்கும்போதே பெற்ற
முதல் இறப்புச் சான்றிதழ் பத்திரமாகும்.
அவளுக்காய் சுவாசிப்பதால் - என்
மூச்சுக் காற்றைக் கூட முடித்துக்கொள்ள
முடியவில்லை

"ஏங்க நேரத்தோடு வேலைக்குப் போகாமல்
அப்படி என்ன அந்தப் பழைய
கந்தல்களில் கண்டுபிடிக்கிறீங்க?"
விழிகளைத் தாண்டும் ஈரத்தை மறைத்து
எந்தன் மனைவியின் கேள்விகளால்
நினைவுக்கு வருகின்றேன்.
ஆமாம்... குழந்தைத்தனமான இவளின்
அரவணைப்பினால்தான்
நான் இன்னும் உருக்குலையாமல்
இருக்கின்றேன். - இனி
இது எனக்கும் பழைய கந்தல்களாகவே
இருக்கட்டும் என
என் தெருவோரக் குப்பைத் தொட்டிக்குப்
பதிவுத் தபாலில் அனுப்பிவைத்தேன்.

**எஸ்.எம். முபீன், புதியகாத்தான்குடி-02**

# இழப்பு

மின்சார ஒளிவிளக்குகள் வழக்கம் போல இரவு கண்களை முடிவிட்டன. மின்வெட்டின் பின் நரக வாசல்படியில் கால் வைக்கிறேன். அந்த இருளிலும் நுளம்புகள் வேகங்கொண்டு என்னையே நோக்கி வருவதுபோல் இருக்கிறது. காலுக்கடியில் நுளம்புச் சுருள் குருட்டுப் புகையை ஊதிவிட்டுக்கொண்டிருந்தாலும், அதையும் மீறி பழக்கப்பட்டுப்போன நுளம்புகள் காதோரமாகப் பறந்துகொண்டு கிண்ணாரம் இசைக்கின்றன.

முழங்கையில் ஒரு நுளம்பு கடித்ததும் வேதனையால் துடித்துவிட்டேன். மறுகையினால் அதற்கு நல்ல சாத்து விட்டேன். உடல் நோ அடிவிழவும் குறைந்தது. ஆனால், நுளம்பு... செத்திட்டுதோ? தப்பிப் பறந்து போயிற்றோ? அந்த இருட்டுக்குள் ஒன்றுமே சரியாகத் தெரியவில்லை. சிமினி விளக்கு விறாந்தையில் மினுக் மினுக் என்று எரிந்தபடியிருக்கிறது. அதையும் எடுத்து வந்து காலுக்கருகில் வைத்துக்கொண்டேன்.

ஓரிரண்டு மின்மினிப் பூச்சிகள் வெளிச்சம் போட்டுக் காட்டிக்கொண்டு என் பக்கமாகப் பறந்து வருகின்றன. கையிலுள்ள மட்டையால் அடித்தேன், வாசல் பக்கமாகப் போய் விழுந்தன. பின்பு நிலத்தோடு ஒட்டிய இடைவெளியால் வெளியே பறந்துபோயின. எனக்குக் காற்றுப் படும்படியாக விசிறுகின்றேன். ஏதோ உடம்பில் கொஞ்சம் காற்றுப் படுகிறது. ஆனால், புழுக்கம் உடலை விட்டுப் போகவில்லை. காற்றை எனக்கு விசிறுவதோடு, இந்த நுளம்புகளையும் என்னிடம் வரவிடாமல் விலத்த இந்தக் காகித மட்டை ஒன்றுதான் பெரிய அஸ்திரமாக இப்போதைக்கு என்னிடம் இருக்கிறது.

இப்படியே எத்தனை வருடங்கள் இருட்டுக்குள் கடத்தினேன் எனக் கணக்கிட்டுப் பார்க்கின்றேன். யாழ்ப்பாணம், வன்னி என்று இடம்பெயர்ந்து இருந்து இப்போது கொழும்பிலும் வந்து இப்படியா? என்று எழுந்த கேள்வியுடன் மனம் சோர்ந்துபோகிறது. இந்த வெறுப்புக்குள் சடுதியாய் எங்கிருந்தோ நறுமணம் ஒன்று காற்றுடன் கலந்து என் பக்கமாக வீசியது.

அது என் வீட்டுப் பவளமல்லிகை மரத்துப் பூக்களிலிருந்துதான் அந்த நறுமணம் என்று என் ஞாபகத்திற்கு வருகிறது. அந்த இரவுப் பூக்களுக்குள் இருந்துதான் எவ்வளவு வாசம். நான் படுக்கின்ற அறைக்குப் பக்கத்தில் மதிலோடு அந்த மரம் நிற்கிறது. பகலிலே அந்த மரம் பூப்பூத்தால் பார்ப்பதற்கு எவ்வளவு அழகாக இருக்கும் எனக் காலையில் கீழே பரவிக் கிடக்கும் உதிரிப் பூக்களைப் பார்த்துச் சிந்தித்திருக்கிறேன்.

தலைக்கு மேலாக மீண்டும் ஒரு மின்மினிப் பூச்சி பறக்கிறது. காதுக்குள் புகுந்துவிடுமோ என்று எனக்குள் பயம். உடனே விசிறி மட்டையில் அடிபட்டுப்போய் அது வெளியே நிலத்தில் விழுந்துவிட்டது. நான் வளர்க்கும் மூன்று மாதக் குட்டிநாய் வந்து அதை முகரவும், "அடீக்..அடீக்" என கலைத்துவிட்டேன். சுற்றி வந்த அந்த நாய்க்குட்டி என் கதிரைக்குக் கீழ் குழப்படி செய்யாமல் படுத்துவிட்டது.

நானும், நாயும் தனியனாய் இந்த வீட்டில்... இதை ஏன் அடிக்கடி நினைத்து வருந்தவேண்டும். விரும்பினால் போய் பிள்ளை குட்டிகளோடு வெளிநாட்டில குசாலாக இருக்கலாம் தானே!

"அங்க எல்லாம் போய் இனிமேலே எனக்கு என்னதான் வரப் போகுது இங்க ஒரு பக்கத்தில தனியக் கிடந்து சமைச்சுச் சாப்பிட்டாலும் இதுதான் நல்லம்..." என்கிறதாக மனதில் ஒரு பிடிவாதம்.



இதை நினைத்தவுடன் பரிமளம்தான் ஞாபகத்தில் வருகின்றாள். அவளை நினைத்து நினைத்து ஒவ்வொரு பொழுதும் வேதனைப் படவேண்டியிருக்கிறதே... கணவனும் மனைவியும் ஒன்றாகச் செத்துப்போக முடியுமென்றால், அது எவ்வளவு அருங்கொடை! அது கிடைக்கிறதா இந்த உலக வாழ்க்கையில், இல்லையே? என் மனைவி இறந்ததற்குப் பிறகுதான் தனிமை இவ்வளவு கொடியது என்பதைக் கண்டறிந்தேன்.

அது ஒரு புறமிருக்கட்டும். இப்போது எனக்கு வேண்டிய வசதி எல்லாமே வந்துவிட்டது. பின்னும் ஏன் அந்த வறுமையில் பதிந்துவிட்ட வடுக்கள் மீண்டும் மீண்டும் ஞாபகத்தில் வந்து நிம்மதியைக் கெடுக்கின்றன? துள்ளித் திரிகின்ற பருவத்தில் மனதில் பதிந்துவிட்டதால் வந்த வினையோ?

யாழ்ப்பாணத்திலிருந்து இடம்பெயர்ந்து வந்து வன்னியில் இருந்தபொழுது அந்தச் சிறுவனைக் கண்டேன். அன்று பள்ளிக்கூட நாள் என்பது எனக்கு நல்ல ஞாபகம். அவனைக் கண்டதும் இதையெல்லாம் கேட்க வேண்டும் என்று வாய் துருதுருத்தது. "நீ ஏன் பள்ளிக்கூடம் போகேல்லைத் தம்பி" அவன் நான் கேட்டதை அசட்டை பண்ணிப் பேசாதிருந்தான். சின்னச்சாக்கை நிலத்தில் விரித்து வைத்துக்கொண்டு தேக்கு மரத்து விதைகளைப் பொறுக்கி அதற்குள் போட்டுக் கொண்டிருந்தான்.

"அதுதான் நான் கேக்கிறேனெல்லே சொல்லுமன்..."

"அது...ம்..." முனகுவதுபோல் ஆரம்பித்துப் பின்பு நிறுத்திக்கொண்டான். தன் வேலையை விட்டுப்போட்டு நிலத்தை வெறித்தபடி பார்த்துக்கொண்டிருந்தான். எனக்கோ பார்க்கவேண்டிய அலுவல்களுக்குப் போக இயலாமல் நேரம் கசிவதாகத் தெரிந்தது.

"என்ன தேவைக்கென்று உதைப் பொறுக்கி எடுக்கிறீர்?" நானும் விடவில்லை. மறுபடியும் கேட்டேன்.

"இது விக்க... விக்கத்தான் பொறுக்கிறன்"

"என்ன விலைக்கு எடுப்பினம்?"

"கொத்து பத்து ரூவா" சொல்லிவிட்டு இப்போதுதான் என்னை நிமிர்ந்து பார்க்கிறான். அவன் கண்களிலே கவலை தெரிகிறது. வறுமை அந்தப் பிஞ்சு உடலை நன்றாகவே வறுத்தெடுத்திருக்கிறது.

"அப்பா என்ன வேலை செய்கிறார்?"

"அப்பா இல்லை செத்திட்டார்!" வெறுமை படச் சொல்லிவிட்டு மீண்டும் அவன் விதைகளைப் பொறுக்கிச் சேர்க்கத் தொடங்கினான்.

அதன் பின் எனக்கும் அங்கு நின்று அவனுடன் கதைக்கத் தைரியம் வரவில்லை. என் மனதுக்குள்ளும் புயல் வீசுகின்ற மாதிரி சரியான போராட்டம். அந்த மனவருத்தத்தோடு சைக்கில் பெடலில் காலை வைத்து அழுத்தினேன். போள்ஸ் சத்தத்தோடு சைக்கிள் உருளத்தொடங்கியது. போகும்போது நான் போவதை அவன் பார்க்கின்றானா? என்பதை ஓரக் கண்ணால் கவனித்தேன். நான் இங்கிருப்பதை அவன் விரும்பமாட்டான் என்பதை நன்றாக உணர்ந்துகொண்டேன்.

இவ்வளவுக்கும் எனக்கென்ன நடந்தது என்கிறீர்கள்? சிறுவயதில் அவன் நிலைதான் எனதும். என் அப்பா இறந்துபோகவும், வருத்தக்கார அம்மாவுக்கும் எனக்குமாய் சாப்பாட்டுக்காகவென்று மீன்வாடியில் போய் நான் வேலை செய்யத் தொடங்கினேன். பாணும், மீன்சினைக் கறியும் அங்கே எனக்குச் சாப்பிடத் தருவார்கள். உள்ளங்கையில் ஐஸ்கட்டிகளை வைத்து தடியால் அடித்து நொருக்கி மீன் உள்ள பெட்டியளுக்குள் போடும்போது கொஞ்ச நேரத்தில் கை முழுதும் விறைத்துவிட, சம்மாட்டியார் அவசரப்படுத்துவார்,

"கெதிகெதியாய் உடைச்சுப் போடுங் கோப்பா! லொறியெல்லே வரப்போகுது. நேரத்துக்கு லொறியை அனுப்பினாத்தான் விடிய கொழும்பு மார்க்கட் பிடிக்கலாம்."

அவர் அப்படிச் சொல்லிக் கத்திக் கொண்டு நிற்க, குளிரேறிக் கையிரண்டும் கல்லாய்ப் போகுமட்டும் நான் அங்கே வேலை செய்வேன். அந்த நேரம் என் கண்களிலே கண்ணீர்வரும். பின் வேலை முடிந்ததும்தான் கைகளுக்கு உணர்ச்சியே வரும். அந்த நேரம் இரண்டு ரூபாய் சம்பளத்துக்காகத் தான் அந்தப் பாடெல்லாம் பட்டேன்.

வறுமையைப் பற்றி எந்தளவுக்கும் எனக்குக் கவலை வரவில்லை. எனது படிப்பு. அது தொலைந்ததாய் விட்டது. அதுதான் என் ஏக்கம். படிக்க வேண்டுமென்று அந்த வயதில் எவ்வளவோ நான் ஆசைப்பட்டேன்.

எங்கள் வீட்டுக் குடும்ப பாரத்தில் என் ஆசைகளும் கருகிவிட்டன, என்றாலும் நான் வலுவாகக் கஷ்டப்பட்டதன் பலன் பணம் கைக்கு வரத் தொடங்கியது. இதை வைத்துக் கொண்டு மாத்திரம் என்னால் வாழ்வில் மனநிறைவடைய முடியவில்லை. படிக்காதது ஒரு பெரும் இழப்பு. அதுவே வயது சென்றும் இன்னும் எனக்குக் கவலையாய் இருக்கிறது.

கேற்றடியில் நின்றுகொண்டு இப்போதெல்லாம் காலையும் மாலையும் அந்த வீதியால் பள்ளிக்கூடம் போய் வரும் பிள்ளைகளைப் பார்க்கிறேன். இந்த வயதிலும் பள்ளிக்கூடம் போக வேண்டும், படிக்க வேண்டும் என்பதே மானசீகமாய் எனக்கிருக்கும் ஆசை.

அந்த ஆசையை நான் ஒவ்வொரு நாளும் புதுப்பித்துக்கொண்டே அவ்விடத்தில் நிற்கிறேன். என் வாழ்வில் கடந்துபோன பள்ளிப் பருவம் திரும்பி வரப்போவதில்லை என்பது எனக்கு நன்றாகவே தெரியும். ஆனாலும், நான் வாழ்வில் இழந்த பெருஞ் செல்வத்தை நினைத்து இப்போதும் ஒவ்வொரு கணமும் வருந்திக்கொண்டேயிருக்கிறேன். ■

**பி.அருளானந்தம், கல்கிசை**

# ஒரு கைதியின் கதை

## 02

"**ப**ரமேஸ்... என் மகனைத் தெரியுமில்லையா?"

"அஸ்வின்தானே? அமெரிக்காவிலிருந்து திரும்பிவிட்டானா?" என்றார் பரமேஸ்வர் பீடாவை மென்றபடி.

"வந்துவிட்டான்... வந்ததும் என்னைச் சிக்கலில் மாட்டிவிட்டான். ஆபீஸில் ஒரு ஸ்டெனோவிடம் வழிந்திருக்கிறான். அது முற்றிப் போய் படுக்கையறைவரை போய்விட்டது."

"பரமேஸ்வர் மென்று விழுங்கினார். நானும் கூட இப்போதுதான் காதம்பரியின் வீட்டிலிருந்து வந்து கொண்டிருக்கிறேன் என்று சொல்ல முடியுமா?

"அவள் வீடியோ எடுத்து விட்டாள். மிரட்டுகிறாள்." என்று கிருஷ்ணதாஸ் சொன்னதும்-

பரமேஸ்வர் முகத்தில் மெல்லிய கோபம் வந்தது.

"பெண்களுடன் தொடர்பு தப்பில்லை ஆனால், நம் கட்டுப்பாட்டில் அவர்களை வைத்திருக்க வேண்டும். வீடியோ எடுக்கும்வரை அனுமதிக்கலாமா?"

"நடந்ததை மாற்ற முடியாது. அந்தப் பெண்ணின் முகவரி இது... அவளைப் பேசிக் கழற்றிவிடுங்கள். ஆனால், அஸ்வினைப் பற்றி எந்த ஆதாரமும் அவளிடம் மிச்சமிருக்கக் கூடாது"



கிருஸ்ணதாஸ் ஊஞ்சலில் இருந்து இறங்கினார். சந்திப்பு முடிந்தது என்று அர்த்தம். பரமேஸ்வர் எழுந்தார்.

★★★★

**ப**ரமேஸ்வரின் கார் அவர் வீட்டுக் காம்பௌண்டுக்குள் நுழைந்தது. போர்டிக்கோவில் நிறுத்தத்திற்கு வந்தது. காரிலிருந்து இறங்கினார். நிமிர்ந்து சிற்றவுட்டைப் பார்த்தார்.

மாடியில் கைப்பிடிச் சுவரைப் பற்றியபடி அபிதா நின்றிருந்தாள். பரமேஸ்வரின் ஒரே மகள். கல்லூரிப் படிப்பின் இறுதி செமஸ்டரில் இருந்தாள். பரமேஸ்வரின் கார் ஒலி கேட்டதும் பால்கனிக்கு ஓடி வந்துவிடுவாள்.

"ஹாய் டாட்" என்று சிரித்துக்கொண்டே கையசைத்தவளின் சிரிப்பு சட்டென்று உறைந்தது.

"டாடி என்ன அது...?" என்று காரைக் காட்டினாள்.

காரின் பின் கண்ணாடியில் அவள் பார்வை பதிந்திருந்த இடத்தைப் பரமேஸ்வர் பார்த்தார். அதிர்ந்தார்.

"ஐ ஹாட் செக்ஸ் வித் காதம்பரி" என்ற வெள்ளிநிற எழுத்துக்கள் பின் கண்ணாடியில் மினுங்கின.

பரமேஸ்வர் மின்சாரச் சாட்டையால் தீண்டப்பட்டவர் போல் திடுக்கிட்டார். நடுக்கத்தில் பற்கள் கிடுகிடுத்தன.

எழுத்துக்கள் அழகாகக் கோர்த்து ஒட்டப்பட்டிருந்தன. அப்படி ஒட்டுவதற்குக் குறைந்த பட்சம் ஒரு மணி நேரமாவது ஆகியிருக்கும்.

யார்... யார் செய்தது இப்படி? காரைக் கெஸ்ட்ஹவுஸில் நிறுத்தியிருந்தபோதுதான் ஒட்டப்பட்டிருக்க வேண்டும். அவர் அலுவலகத்திலோ, கிருஷ்ணதாஸின் இல்லத்திலோ வாட்ச்மேன்கள் உண்டு.

"யார் டாடி காதம்பரி?"

"கா.. காதம்பரி... அப்படி யாரும் எனக்குத் தெரியாது? எவனோ ஒரு பொறுக்கி இப்படி ஒட்டியிருக்கிறான்." பரமேஸ்வரின் குரல் கிடுகிடுத்தது.

வேகம் வேகமாக நடந்து அந்த எழுத்துக்களைக் கிழித்து எடுக்கப் பார்த்தார், முடியவில்லை.

எழுத்துக்கள் கண்ணாடியின் உட்புறமிருந்து ஒட்டப்பட்டிருந்தன. அப்படியானால்... அப்படியானால்...

காருக்குள் ஒருத்தன் திருட்டுத்தனமாக நுழைந்து ஒட்டியிருக்கிறான். டிரைவரை அனுப்பிவிட்டு அவரே காரை ஓட்டிப்போனது காதம்பரியைச் சந்திக்கத்தான். டிரைவர் இல்லாத நேரமாக காருக்குள் நுழைந்து...

யார் செய்திருக்க முடியும்...

காதம்பரியா? அவளை... அவளை...

"என்னங்க... உங்களுக்குப் ஃபோன்..." என்று சொல்லிக்கொண்டே அவர் மனைவி கோர்ட்லெஸ் ஃபோனை எடுத்துக்கொண்டு வெளியே வந்தாள்.

அவள் இந்தக் கண்றாவியைப் பார்த்துவிடக் கூடாதே என்று பரபரப்பாக அவர் அவளை நெருங்கினார்.

"யாருங்க காதம்பரி?"

"கா... த.. ம்..பரியா?"

"ஃபோனில் காதம்பரி தான் பேசுகிறதாகச் சொன்னாள்."

ஃபோன் ரிஸீவரை வெடுக்கென்று பிடுங்கினார். காதம்பரிக்கு அவ்வளவு திமிர் வந்துவிட்டதா?

"ஹலோ" என்று ரிஸீவரில் குரைத்தார்.

"ஹாய் கிரிமினல் லோயர்" என்றது ஒரு ஆணின் குரல். "காதம்பரியின் செக்ஸியான குரலை எதிர்பார்த்து வந்தாயா? ஸாரி!"

"யார்... யார் நீ?"

"ஸ்டிக்கர் மேன்" தொடர்பு அறுந்தது.

"நான்ஸென்ஸ்" என்றார், பரமேஸ்வர்.

"எவனோ திமிர் பிடித்தவன்"

"திமிர் பிடித்தவன் பெயர் காதம்பரியா?"

"ஐயோ... பேசியது ஆண்... பெண்ணில்லை"

"என்னிடம் பேசியது பெண் குரல்தான். அழகாகக் காதம்பரி என்று சொன்னாளே... லோயர் பரமேஸ்வருடன் பர்ஸனலாகப் பேசவேண்டும் என்று சொன்னாளே!"

"எவனோ கிறுக்குப் பயல் ப்ரக்டிக்கல் ஜோக் செய்வதாக நினைத்துக்கொண்டு விளையாடுகின்றான்" என்றார், பரமேஸ்வர் தோற்றுப்போனவராகி.

"டாடி... இதை இப்படியே விடக்கூடாது. உடனே பொலீஸிற்குச் சொல்லுங்கள்... என்று மூச்சிரைக்க வந்து நின்றாள் அபிதா.

"பொலீஸ்... யெஸ் பொலீஸ்" என்று பரமேஸ்வர் சற்றுத் தடுமாறினார்.

"டோன்ட் வொறி. இதைக் கவனிக்க வேண்டியபடி நான் கவனித்துக் கொள்கின்றேன்"

எழுதுவது

**சுபா**

அவரால் மகளின் விழிகளைப் பார்த்துப் பேச முடியவில்லை.

"சரி... சாப்பிட வாருங்கள். உங்களுக்காகக் காத்திருக்கின்றேன்" என்றாள் மனைவி.

"இல்லை... ஜானகி... கிருஷ்ணதாஸைச் சந்திக்கப் போயிருந்தேன். அங்கே டின்னர் முடிந்துவிட்டது."

பரமேஸ்வர் பேச்சுத் திசை மாறியதே என்று வெகுவாகச் சந்தோஷப்பட்டார். ஆனாலும், காதம்பரி... காதம்பரி என்று நெஞ்சுக்குள் ஒரு வண்டு குடைய ஆரம்பித்தது.

(கைதியின் கதை தொடரும்)

# ஆறுமனமே ஆறு!

*எனது முதலாவது அனுபவத் தொடரை ஆரம்பிக்கும் இத் தருணத்தில், என்னை ஆற்றுப்படுத்தல் துறையில் ஈடுபடுத்த அக்கறையுடன் உந்து சக்தியை வழங்கிய ஈழ ஏதிலியர் மறுவாழ்வுக் கழக ஸ்தாபகரும், தந்தை செல்வாவின் மைந்தருமான திரு.சா.செ. சந்திரகாசன் ஐயா அவர்களையும், முனைவர் அருட்திரு கம்பர் மாணிக்கம் (மதுரை) அவர்களையும், திருமதி மாலா தர்மராஜா (திருச்சி) அவர்களையும் முதன் மைப்படுத்தக் கடமைப்பட்டுள்ளேன்.*

**(குறிப்பு)** "ஆற்றுப்படுத்தலின் இரகசியம் பேணப்படுவது அவசியம் என்பதால் பெயர்கள் மாற்றப்பட்டுள்ளன."

## அகதி வாழ்வில் சிறுவரின் சீரழிவு-01

**நீ**ண்ட காலமாக அகதிகள் முகாமிலேயே வாழும் சரஸ்வதி, சமையலுக்கு விறகு தேடுவதற்காக முகாமின் பின்பக்கம் சென்றவள் அந்தக் காட்சியைக் கண்டு அதிர்ச்சி அடைந்தாள். ஆத்திரத்தை அடக்க முடியாமல் கையில் கிடைத்த விறகு கட்டையால் இருவருக்கும் ஆத்திரம் தீரு மட்டும்அடித்துவிட்டு, தன் மகள் விஜியை தரதரவென இழுத்துக் கொண்டு, இருப்பிடத்துக்குச் சென்றாள்.



அடிபட்ட விஜி ஒரு மூலையில் இருந்து தேம்பித் தேம்பி அழுது கொண்டிருந்தாள்.

கூலி வேலைக்குச் சென்றிருந்த சரஸ்வதியின் கணவன் கணேஷ் முகாமுக்குத் திரும்பியவுடன் சரஸ்வதி நடந்தவற்றைத் தெரிவிக்கவே, மகள் விஜிக்கு 'பளார் பளார்' எனக் கன்னத்தில் அறைந்தான் கணேஷ். விஜியின் அழுகை மேலும் அதிகரித்தது.

சம்பவத்தை ஜீரணிக்க முடியாமலும், தமது மகள் விஜியை அடித்துவிட்ட கவலையிலும் சரஸ்வதியும் கணேஷும்இரவு தூங்கவே இல்லை.

விஜி குடும்பத்தில் கடைசிப் பிள்ளை. எல்லாருக்கும் செல்லம். பெற்றோர் இப்படி ஒருபோதும் அடித்ததே இல்லை. தாயும் தகப்பனும் தனக்கு அடித்ததை நினைத்து அழுதழுதே அவள் தூங்கிவிட்டாள்.

அதன்பின் விஜி எவருடனும் பேசுவதில்லை, விளையாடுவதில்லை. உண்பது உறங்குவதுகூடக் குறைந்துவிட்டது. 'எப்போதும் எங்கோ வெறிக்கப் பார்த்தபடியே இருப்பாள்.

பெற்றோருக்கு பெருங்கவலை. சுகாதார நலப்பணியாளர் சுகந்தியிடம் விஜியைக் காட்டினர். விடயத்தைக் கேட்டறிந்த சுகந்தி அவர்களை என்னிடம் அனுப்பிவைத்தார்.

எனது அலுவலகத்துக்கு வந்த அவர்களை, ஆதரவாக இருக்கைகளில் அமரும்படி கூறி, அவர்களின் குடும்ப விபரங்கள், இருப்பிடம் என்பவற்றை அறிந்து கொண்டேன்.

1991ம் ஆண்டு வன்னியிலிருந்து இடம்பெயர்ந்து பத்து வருடங்களாக அகதிமுகாமில் வாழ்கின்றனர். வன்னியில் தொழில் விவசாயம். இரு ஆண்குழந்தைகளும், இரு பெண் குழந்தைகளும்இருக்கிறார்கள். விஜி கடைசிப் பெண்குழந்தை. வயது ஐந்து. முகாமிலுள்ள பாலர் பாடசாலைக்குச் சென்று வருகிறார். சரஸ்வதி வீட்டு வேலைகளைக் கவனிக்கிறார். கணவர் கூலி வேலைக்குச் சென்று வருவார். மற்றைய பிள்ளைகள் அருகிலுள்ள பாடசாலைக்குச் செல்கிறார்கள்.

தங்களைப் பற்றிய விபரங்களை இயல்பாகவே இருவரும் தெரிவித்தார்கள். ஆர்வத்துடன் அறிந்து கொண்டேன்.

பின்னர் அவர்களுக்கு இருக்கும் பிரச்சனையை அறிய விரும்பினேன். அன்போடும் ஆர்வத்தோடும் அவர்களின் பிரச்சனையைக் கேட்டறிந்தேன்.

சரஸ்வதி சொன்னார். "அன்று சனிக்கிழமை. பாடசாலைகள் நடைபெறவில்லை. பாடசாலை தவிர்ந்த ஏனைய நேரங்களில் பிள்ளைகள் தொலைக்காட்சி பார்ப்பார்கள். சிறிய வீடுகள் கட்டி, ஒடிப்பிடித்து விளையாடுவார்கள். மகள் விஜி மத்தியானம் சாப்பிட்டுவிட்டு விளையாடப் போனவள் நாலு மணியாகியும் தேனீர் குடிக்கவரவில்லை. விறகும் தேடிக்கொண்டு அவளையும் கூட்டிக்கொண்டு வருவமெண்டு, முகாமுக்குப் பின்னால போனேன். அங்கை விளையாட்டு வீட்டுக்குள்ள இருந்து "என்னை விடடா! என்னை விடடா!" என்று என்ரை மகள் விஜியின் குரல் கேட்டுது. வீட்டு மறைப்பை உயர்த்திப் பார்த்தேன். என்ரை மகள் விஜி பிறந்தமேனியாகக் கிடந்தாள். அவளுக்கு மேலே சிவகாமியின் மகன் முரளி படுத்துப் பரந்து கொண்டிருக்க, எனக்கு என்ன செய்யிறதெண்டே தெரியேல்லை. அருகில கிடந்த விறகு கட்டையால ரண்டுபேருக்கும் அடிச்சுப் போட்டு விஜியை இழுத்துக்கொண்டு வந்திட்டன்." என்ற சரஸ்வதி தன் உணர்ச்சிகளை அடக்க முடியாமல் தன் மகளைக் கட்டியணைத்து அழுது விட்டாள்.

அழுகை மனப்பாரத்தைச் சற்றுக் குறைக்கும் என்பதால் அவள் அழுவதை நான் தடுக்கவில்லை. அத்தோடு விஜிக்கும் பெற்றோரின் அரவணைப்புத் தேவையாயிருந்தது.

கண்கலங்கிய கணேஷ் சொன்னார். "வேலைக் களையோட வந்த எனக்கு இந்த விஷயத்தைக் கேட்க, ஆத்திரத்தில நானும் நல்லா அடிச்சுப் போட்டேன். குழந்தை பாவம். இந்தச் சம்பவம் நல்லாப் பாதிச்சுப்போட்டுது அவள் அடங்கிப் போய்விட்டாள்" தன் அனுதாபத்தை வெளிப்படுத்தினார்.

(தொடர்ந்துவரும்...)

# தொழிலாளர் அவலம் அனுதினம்!

## இரண்டுபட்ட மலையக மே தினம்!!

இந்த வருடமும் மலையகத் தோட்டத் தொழிலாளர்களின் மே தின ஊர்வலங்கள் நுவரெலியா, ஹட்டன் ஆகிய இடங்களில் நடைபெற்றன. நுவரெலியாவில் மலையக மக்கள் முன்னணித் தலைவர் பெ.சந்திரசேகரன் தலைமையிலும், ஹட்டனில் நட்சத்திர சதுக்கத்தில் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் தலைவர் ஆறுமுகம் தொண்டமான் தலைமையிலும் மேதினக் கொண்டாட்டங்கள் நடைபெற்றன.

நுவரெலியாவிலும், ஹட்டனிலும் தனித் தனியாக நடாத்திய இந்த இரண்டு மேதினக் கூட்டங்களிலும் பெருந்திரளான மக்கள் கலந்துகொண்டிந்தனர். இந்த இரண்டு தொழிற சங்கங்களும் ஒன்றாக இணைந்து ஒரே இடத்திலே மேதின ஊர்வலத் தையும், கூட்டத்தையும் நடாத்தியிருந்தால் நிலைமை எப்படி இருந்திருக்கும்?

காலங் காலமாகத் தோட்டப்புற மக்கள் மேதினத்தைக் கொண்டாடி, தமது பல்வேறு கோரிக்கைகளை முன் வைக்கின்றனர். சற்றுச் சிந்தித்துப் பார்த்தால், இவையனைத்தும் நிறைவேற்றப்படுகின்றதா? அரசுதான் இவற்றுக்குச் செவி சாய்க்கின்றதா? என்பது கேள்விக்குறியாகவே இருந்து வருகின்றது. இந்த முறை மலையகத்தில் நடைபெற்ற மேதின ஊர்வலங்களில் தொழிலாளர்கள் பல்வேறு சுலோகங்களை ஏந்தியவண்ணம் கலந்துகொண்டனர். அவற்றில் "சம்பள உயர்வு" கோஷம்தான் முக்கிய கோரிக்கையாக இருந்தது. இந்த வார்த்தை தான் தொழிலாளர்களை இன்றுவரை ஏமாற்றி வந்துள்ளது. நாட்டில் ஏற்பட்டிருக்கின்ற இந்த இக்கட்டான பொருளாதார நெருக்கடியில் ஒரு நாள் உணவுக்கே துன்பப்படும் இந்தத் தொழிலாளர்களின் வாழ்வில் புதுமை பிறக்க இந்த மே தினமாவது வழிவகுக்குமா?

மலையகத்தில் எத்தனையோ தொழிற்சங்கங்கள் இருக்கின்றன. அவையனைத்தும் மலையக மக்களுக்காகவே வாதாடுவதுபோலக் காட்டிக் கொண்டாலும் உண்மையில் அவை தொழிலாளர்களுக்குச் செய்த நன்மை என்ன? என்று கேள்வி எழுப்புமளவுக்கு அவற்றின் செயற்பாடுகள் முடங்கிக் கிடக்கின்றன. பல்லாண்டுகாலமாக, பல சந்தர்ப்பங்களிலும், பல மே தினங்களிலும், பல அரசுகளால், பல தொழிற்சங்கங்களால் தோட்டக் குடியிருப்புக் காணிகள் மலையக மக்களுக்குச் சொந்தமாக்கப்படும் என்று வாக்குறுதிகள் அளிக்கப்பட்டன. ஆனால், அந்த வாக்குறுதிகளே சொந்தமில்லாமல் சென்றுவிட்டன. தொழிலாளர்கள் தமது மே தின ஊர்வலத்தின்போது பல்வேறு கோரிக்கைகளை முன்வைக்கின்றனர். ஆனால், அவை அனைத்தும் நிறைவேற்றப்படாமலேயே போகின்றன.

ஆகவே, இந்தமுறை கொண்டாடப்பட்ட மே தினம் தொழிலாளர்களின் வாழ்வு வளம்பெற எவ்வாறு வழியமைத்துக்கொடுக்கும்?

கிருஷ்ணன் சிவா, மஸ்கெலியா.

# பேச்சுவார்த்தையில்

## மலையகத் தமிழரின் நிலையென்ன?

இருபது வருடகால யுத்தம் நிறுத்தப்பட்டு புரிந்துணர்வு உடன்படிக்கை மூலம் நிலையான சமாதானத்தை உருவாக்க எல்லா அரசியல் தலைவர்களும், நலன்விரும்பிகளும் முயற்சிக்கும் இக்கால கட்டத்திலே, எங்கு பார்த்தாலும், எதைப் படித்தாலும் இந்த சமாதானப் பேச்சுவார்த்தைபற்றியே காணப்படுகின்றது.

இந்தப் புரிந்துணர்வு ஒப்பந்தம் எந்தளவிற்குச் சாத்தியப்படும்? என்பது கேள்விக்குறியாக இருந்தாலும், தற்போது வடக்கிலே இதனால் ஏற்பட்டு வருகின்ற மாற்றங்கள் நல்லறிகுறிகளாகத் தோன்றுவது எமக்கெல்லாம் சந்தோஷத்தைத் தருகின்றது.

இது இப்படியிருக்க, தமிழ் போராளிகள் ஆரம்பகாலகட்டத்திலே ஆயுதப் போராட்டம் நடாத்தியபொழுது அவர்களுடன் இணைந்த எம் மலையக வாலிபர்கள், இப்போராட்டமானது தங்களுக்கும் தாம் வாழும் பிரதேசத்திற்கும் பயன்பட்டாலும், பயன்படாவிட்டாலும் தங்களுக்கும், தங்கள் குடும்பத்தார், சுற்றத்தார் அனைவருக்கும் பாதிப்பை ஏற்படுத்தும் என்ற ஆபத்து இருந்தும், சற்றும் தயங்காது "நாம் தமிழினம்" என்ற தியாக உணர்வோடு இந்தப் போராட்டத்தில் ஈடுபட்டு வீரமரணம் அடைந்துள்ளார்கள் என்பது மறுக்கமுடியாத உண்மை.

இந்த மலையக தியாகிகள் எவ்வாறு, எந்த இயக்கத்தில் இணைந்து போராடினார்கள் என்பது தற்போது முக்கியமானதல்ல. அவர்களின் நோக்கம், பங்களிப்பு, தியாகங்கள் மதிக்கப்பட வேண்டியவையே! அத் தியாக மரணங்கள் மூலம் தமது மலையகப் பிரதேசங்களுக்கும் ஏதோவொரு வகையில் விடிவு பிறந்துள்ளது என நாம் எண்ணினால் அது எமது இழப்புக்களுக்கு நாம் பெற்ற கைமாறு என்று சந்தோஷப்படலாம்.

ஆனால், தற்போது புலிகளுடன் பேச்சுவார்த்தை ஆரம்பிக்கப்படும்பொழுது பேசப்போகும், கோரப்போகும் அரசியல் சமூகப் பிரச்சனைகளில் வடக்கு கிழக்கையும், மலையகத்தையும் வேறுபடுத்திப் பார்க்கக்கூடிய கண்ணோட்டம் காணப்பட்டால் அது எந்த விதத்திலும் உகந்ததாக அமையாது.மலையகத் தலைவர்கள் எனக் கூறிக்கொள்ளும் "தலைமைகள்" புலிகள் தலைவரிடம் போய் தமது பிரச்சனைகளையும், நிலைப்பாட்டையும் கூறுவதிருக்க, வடக்கு கிழக்கிற்குக் கோரப்போகும் சகல அரசியல் சுயநிர்ணய உரிமைகளையும் மலையகத்திற்கும் கிடைக்கக்கூடிய வகையில் பேச்சுவார்த்தைகளில் மலையகப் பிரதிநிதிகளும் பங்கேற்க வேண்டும். தலைவர் பிரபாகரனும், மற்றைய முன்னாள் போராளித் தலைவர்களும் மலையக இளைஞர்களின் தியாகங்களையும் பங்களிப்பையும் மதித்து காத்திரமான நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பது எமது எதிர்பார்ப்பும், வேண்டுகோளுமாகும்.

மலையகத்துச் செங்கோலன்.

# இந்திய வம்சாவழிங்களா நாம?

**தாய்** தந்தை இல்லாதவங்க யாருன்னாக்க சட்டுப் புட்டுன்னு சொல்லிப்புலாம் அனாதைங்கன்னு. பேரில்லாதவங்கள என்னன்னு சொல்லலாமுங்க?

ஏங் கேக்கறேன்னா, நாம இந்த மண்ணிலையும் மலையிலையும் குடியேறி தலைமொற தலைமொறையாக் கடந்துகிட்டுப் போயிகிட்டிருக்கு. இன்னும் நாம நம்மள எப்பிடி சொல்லிக்கறதுன்னு ஒரு அறுதியான பேச்சு இல்லிங்களே.

நம்மள என்னென்வோ பெயருங்களச் சொல்லிக் கூப்பிடுறானுங்க. வடக்கத்தயான், தோட்டக்காட்டான், கள்ளத்தோணி,

> வெறுமன இந்த நாட்டில வாழுறமுன்னு இல்லாம, இதுதா எங்க நாடுன்னு வாழுற நாம ஏன் இந்திய வம்சாவழிங்கற பெயரச் சொமக்கணும்? நாம இலங்கையங்கன்னு உரித்துச் சொல்லிக்கற பெயரா இல்ல சூட்டிக்கனும்!

வந்தேறுகுடியின்னெல்லாம் இளக்காரமா வுந்தா பேசிக்கிட்டாங்க. பத்திரிகையில இதுங்களச் சொல்லறப்போவே சங்கையீனமாத் தோனுதுன்னா நெசமாவே இதுங்களக் காதுபடக் கேக்கறப்போ எம்புட்டு வேதனையா இருக்கு மின்னு பாருங்க.

அவுங்க ஏதுவேண்ணா சொல்லிப் புட்டுப் போகட்டுங்க. நாம நம்மள எப்புடிங்க சொல்லிக்கறது?

நா என்ன கேக்கறேன்னா, நம்மள இந்திய வம்சாவழிங்கன்னு சொல்லிக்கச் சொல்லி இப்ப சொல்லிக்கிட்டு வாறானுங்களே அது நமக்கு தோதான பேருதாங்களா?

இந்திய வம்சாவழின்னு சொல்லிக்கின்னாத்தான் நமக்கு அனுகூலமா இருக்கு மின்னு மறைஞ்ச பெரியவரு சொல்லிப்புட்டு போயிட்டாரு. அதில நாம பாக்கிற அனுகூலம் என்னாங்க?

இந்தியாவோட நம்ம தொடர்ப முன்னாடி காட்டிக்கின்னாத்தா நமக்கு ஏதுங் கிடைக்குமுன்னு சொல்ல வாறாங்களா இவுக?

நாம எதையும் பெற்றுக்கறதுக்காக அதுக்கு ஏத்தாப்புல நம்மள இன்னாருன்னு சொல்லிக்கனுங்களா? இல்லை, நாம இன்னார்தா எங்கறத சொல்லி நமக்கு உண்டான உரிமைங்கள வழங்கனுன்னு கேக்கனுங்களா?

வெறும் சலுகைக்காக நமக்கு ஒரு பெயரச் சூட்டிக்கலாமுங்களா? இந்தியாவுல தாழ்த்தப்பட்டவங்களுக்கு பின்தங்கிய வகுப்பினருன்னு பெயருவைச்சு அவுங்கள காலாகாலமா பின்தங்கினவங்களாத்தானேங்க ஆக்கிட்டாங்க. நாமளும் சலுகைங்களுக்காக பெயரத் தேடிக்கிட்டா அப்புடித்தானுங்களே ஆகிப் புடுவோ?

இல்லீன்னா இந்தியாவோட பெயர சேத்துக்கிட்டா ஏதோ இந்தியா தன்னோட பிரஜைங்கன்னு ஏத்துக்கப் போதுங்களா இல்லை நம்மளப் பாதுகாத்து நமக்குண்டான உரிமைங்கள வாங்கிக் கொடுத்துடத்தாம் போதாங்க? இத்தினி காலமா



நாம நரக வேதனைப்பட்டுப் புழுவா உழலக்க, நமக்குன்னு ஒரு துரும்பத்தன்னும் பெற்றுத் தரமுடியாத அவனுக இந்தப் பெயரக்கண்டுதா ஏதோ பொத்துக்கிட்டு கொட்டப் போறானுகளா?

ஏங்க, அந்த சிறிமா சாஸ்திரி ஒப்பந்த முன்னு ஒண்ண அரங்கேற்றி நம்மளயெல்லாம் நாடற்றவங்களா அலையவுட்டாங்களே, அது இந்த இந்தியாவு சேந்து செய்த வெளையாட்டில்லிங்களா? ரத்தமு சதையுமாப் பச்சை பச்சையாப் பிரிச்சு பலவந்தமாக் கப்பலேத்தி அனுப்பின சொந்தங்களக் கதறக் கதறப் பிரிஞ்சப்ப கோட்டே ரெயில்வே பிளாட்பாரந் தொட்டு மன்னார் துறைமொகம் வரைக்கும் ஒப்பாரி வைச்ச காலத்த மறந்துபுட்டோங்களா?

நம்மள இந்திய வம்சாவழின்னு சொல்லிக்கறதில என்ன வாழப்போகுன்னு புரியலிங்க.

நாம இப்ப யாரு? இந்தியரா? இலங்கையருன்னு தானே இலங்கை அரசாங்கத்து கிட்ட உரிமையோட நமக்குண்டானதுங்களக் கேட்டுக்கிட்டிருக்கோ.

அப்புறம் ஏங்க இந்திய வம்சாவழின்னு பேயருல போயி அன்னியச் சாயல முத்திரை குத்தனும்? நாம இல்லீங்க, நம்ம முன்னோருங்க இந்தியாவில இருந்து வந்தாங்கங்கறதுக்காக நாம இப்பவு இந்திய வம்சாவழிங்க, எப்பவும் இந்திய வம்சாவழிங்களாத்தா நிலைக்கனுங்களா?

இப்பவே மூனு தலைமொறைக்கு மேல கடந்துட்டுதில்லீங்களா? நம்ம தாய் தந்தைங்க இங்கயே பொறந்து நம்ம பிள்ளை குட்டிங்களும் இலங்கையில பொறந்து அவுங்களக்கும் இங்கயே சந்ததி உண்டாகிக்கினு போறப்ப நாம இலங்கையங்க எங்கறதுதானேங்க நெசத்துக்கும் நெசமாயிக்கினு போவுது?

இந்திய வம்சாவழின்னு நம்மள மட்டும் ஏன் சொல்லிக்கனும்? இந்த நாட்டில இப்ப இலங்கையங்கன்னு சொல்லிக்கற தமிழங்க, சிங்களவங்க எல்லாருந்தானேங்க இந்திய வம்சாவழிங்க. இவுங்கல்லாம் எப்பவோ ஒரு காலத்தில இந்தியாவில இருந்து வந்தவுங்க தானேங்க? இந்த நாட்டுக்கு நெசமான சொந்தக்காரங்கன்னு சொல்லிக்கறதுன்னா அது வேடுவங்க தானுங்களே? ஆனா இன்னிக்கு அவுங்களா நாட்ட ஆளுறாங்க?

**மலையூரான்**

நாம யாருங்கறதிலயிருந்துதானேங்க நமக்கு என்ன பேரு தோதாகுமுன்னு பாக்கனுங்க. நாம நம்மள மொதல்ல இலங்கையரா எண்ணிக்கறதா இந்தியரா எண்ணிக்கறதா? இலங்கையில வாழ்ந்துகிட்டு, இலங்கையோட பொருளாதாரத்துக்கு ஒரு அச்சாரமாவு இருந்துகிட்டு, இலங்கையோட நன்மை தீமைங்களில நாமும் பங்கேத்துக்கிட்டு வாழுற நம்ம நாளாந்த வாழ்வுல இந்தியரா சித்த வினாடிதன்னும் நாம நம்மள உணர்ந்திருக்கோமுங்களா?

வெறுமன இந்த நாட்டில வாழுற முன்னு இல்லாம, இதுதா எங்க நாடுன்னு வாழுற நாம ஏன் இந்திய வம்சாவழிங்கற பெயரச் சொமக்கனும்? நாம இலங்கையங்கன்னு உரித்துச் சொல்லிக்கற பெயரா இல்ல சூட்டிக்கனும்!

ஏதோ, ஏம் புத்தியில பட்ட கேள்வீங்கள கேட்டுப்புட்டேனுங்க. இதுக்கு மிஞ்சி நீங்க யாரும் வித்தியாசமா யோசிச்சா அதுங்கள தாராளமா சொல்லுங்க. நானு ஒக்காந்து கேட்டு நாயமிருந்தா ஏத்துக்கறேன். ■

# கட்சிமாறும் சட்ட மூலம்

சமாதானச் சூட்டோடு முக்கியமான ஒரு காரியத்தைச் செய்து முடித்துவிடலாம் என அரசாங்கம் கணக்குப்போட்டது. அதாவது ஒரு வருடத்தின் பின்னர் பாராளுமன்றத்தைக் கலைக்க ஜனாதிபதிக்கு இருக்கும் அதிகாரத்தை இல்லாமல் செய்யும் சட்டமூலம் ஒன்றைக்கொண்டு வந்து அதனைப் பாராளுமன்றத்தில் நிறைவேற்ற அரசு திட்டமிட்டிருந்தது.

மனச்சாட்சியின் அடிப்படையில் வாக்களிக்கும் சட்டமூலம் அல்லது கட்சி மாறல் சட்டமூலம் என்ற பெயரில் எதிர்வரும் 21ம் திகதி பாராளுமன்றத்திற்கு வரவிருந்த இந்தச் சட்டமூலம் காலவரையறையின்றி ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

இந்தச் சட்டமூலத்துடன் பாராளுமன்றத்தைக் கலைக்க ஜனாதிபதிக்கு இருக்கும் அதிகாரத்தைப் பறிக்கும் விதத்திலேயே ஏற்பாடுகளும் செய்யப்பட்டிருந்தன. ஆனால், அரசாங்கத்தின் இந்த முயற்சிக்கு எதிர்பார்த்தளவு ஆதரவு கிடைக்கவில்லை. எதிர்க்கட்சி உறுப்பினர்களை வளைத்துப்போட்டாவது மூன்றில் இரண்டு பெரும்பான்மை பலத்துடன் இந்தச் சட்டமூலத்தை நிறைவேற்றி விடுவது என்ற அரசாங்கத்தின் எண்ணத்தில் மண் விழுந்துள்ளது.

கட்சி மாறல் சட்டமூலத்திற்கு ஆதரவாக பொதுஜன ஐக்கிய முன்னணிக்குள்ளிருந்து சில குரல்கள் கேட்கின்றபோதிலும் பாராளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் சிறுபான்மைக் கட்சிகள் பலவும் இதற்கு எதிர்ப்புத் தெரிவித்துள்ளன.

நிறைவேற்று அதிகார முறையை ஒழிப்பது ஒன்றே தமது அபிலாஷை என்று பிரசாரம் செய்துவந்த ஜே.வி.பி. இப்போதைய நிலைமையில் இந்தச் சட்டமூலத்திற்கு ஆதரவு வழங்கி திருமதி குமாரதுங்கவின் அதிகாரத்தைக் குறைக்க விரும்பும் எனத் தெரியவில்லை.

இதனால், சட்டமூலம் நிறைவேறாது என்று தெளிவாகத் தெரிந்துகொண்ட அரசாங்கம் அதனைக் கொண்டுவருவதை ஒத்திவைத்துள்ளது. இது பாராளுமன்றத்திற்குக் கொண்டுவரப்பட்டிருந்தால் அரசுக்கும், எதிர்க்கட்சிக்கும் இடையிலான முரண்பாடு மேலும் அதிகரித்திருக்கும்.

## ஸ்போர்ட்ஸ்

# உலகக் கிண்ண உதைபந்தாட்டம்
# இலங்கையில் நேரடி ஒளிபரப்பு?

உலகக் கிண்ண உதைபந்தாட்ட வரலாற்றிலேயே முதன்முதலாக ஆசியாவில் இடம்பெறும் உதைபந்தாட்டப் போட்டிகளை இலங்கை ரசிகர்கள் நேரடியாகக் கண்டுகளிப்பதென்பது கேள்விக்குறியாகியுள்ளது. இன்னும் சில நாட்களில் யப்பானிலும், கொரியாவிலும் ஆரம்பமாகும் மேற்படி போட்டியின் ஆட்டங்களை இலங்கையில் நேரடி ஒளிபரப்புச் செய்யும் உரிமையை இலங்கை ரூபவாஹினிக் கூட்டுத்தாபனம் பெற்றுக்கொண்டுள்ளது. இந்த நேரடி ஒளிபரப்பினால் ஏற்படும் செலவினங்களை ஈடுசெய்வதற்குப் போதியளவு விளம்பர அனுசரணையாளர்களைச் சேர்க்க முடியாமல் போனதால், இந்நிகழ்ச்சியை ஒளிபரப்புச் செய்வது பற்றித் தீவிரமாக ஆராய்ந்து வருகிறது.

"ரூபவாஹினிக் கூட்டுத்தாபனம் கிரிக்கெட் போட்டிகளுக்கு முக்கியத்துவம் அளிப்பது போல் உதைபந்தாட்டத்திற்கும் வழங்காமல் மாற்றாந்தாய் மனப்பாங்கில் செயற்படுகிறது" என இலங்கை உதைபந்தாட்ட ரசிகர்கள் குற்றஞ் சாட்டியுள்ளனர்.

# அந்நிய மண்ணில் இந்திய
# விக்கெட் காப்பாளர் வரலாற்றுச் சதம்!



கிரிக்கெட் ரசிகர்கள் எதிர்பார்க்கும்போது அணி ஆட்டமிழப்பதும், எதிர் பார்க்காதபோது விளாசித் தள்ளுவதும் இந்திய அணிக்குக் கை வந்த கலை. மே.இ.தீவுகளுடனான மூன்றாவது டெஸ்ட் போட்டியில் படுதோல்வியடைந்த இந்திய அணி, நான்காவது டெஸ்டின் முதல் இனிங்ஸிலே 9 விக்கெட்டுக்கள் இழப்பிற்கு 513 ஓட்டங்களை அபாரமாகக் குவித்து ஆட்டத்தை இடைநிறுத்திக்கொண்டது.

அந்நிய மைதானத்தில் தனது முதலாவது சதத்தைப் பெற்றுக்கொண்ட முதலாவது இந்திய விக்கெட் காப்பாளர் என்ற பெருமையைப் பெற்ற அஜய் ரத்ரா ஆட்டமிழக்காது 115 ஓட்டங்களையும் வி.லக்ஸ்மன், 130 ஓட்டங்களையும், ட்ராவிட், ஜாபீர் முறையே 91, 86 ஓட்டங்களையும் பெற்று இந்திய அணியை வலுவான நிலைக்கு இட்டுச்சென்றுள்ளனர். மூன்றாம் நாள் ஆட்ட முடிவில், தனது முதலாவது இனிங்ஸில் 3 விக்கெட்டுக்கள் இழப்பிற்கு 187 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்ட மே.இ.தீவுகள் அணி தொடர்ந்து 126 ஓட்டங்களுடன் ஆடிக் கொண்டிருக்கின்றது.

சமநிலையில் ஆட்டத்தைக் கொண்டுவருவதற்கு அதிக பட்ச வாய்ப்பைக்கொண்ட இப்போட்டியில் இந்திய அணி பந்துவீச்சாளர்கள் காட்டும் திறமையைப் பொறுத்தே, இந்திய அணியின் வெற்றி வாயப்புக் காணப்படுகிறது.

மே.இ.தீவுகள் அணி சார்பாக ஹின்ட்ஸ் 65 ஓட்டங்களையும், சர்வான் ஆட்டமிழக்காது 50 ஓட்டங்களையும் பெற்றுள்ளனர். இரு அணிகளின் நட்சத்திரத் துடுப்பாட்ட வீரர்களான, டென்டுல்கர் ஓட்டம் எதுவும் பெறாமலும், லாரா 4 ஓட்டங்களுடனும் ஆட்டமிழந்தது குறிப்பிடத்தக்கது.

# தத்தளிக்கும் அன்பு

கட்டிலில் கலைந்து கிடந்தாள் லாவண்யா.

அவளும் குமரனும் மட்டுமே அந்த அறைக்குள் வரமுடியும் என்பதால் அளவுக்கு மீறிய அலட்சியம் தெரிந்தது அந்தக் கலைதலில்!

கூட்டம் முடிந்து களைத்துச் சோர்ந்து வந்தவர் எவரோ கழற்றி வீசிய மாலையெனக் கிடந்தாள்.

வெறும் உள்ளாடை மட்டுமே அவளுடலைத் தழுவியிருந்தது.

அவள் கைகால்களை எறிந்து அப்படியும் இப்படியுமாகப் புரண்டுகொண்டிருந்ததில் தன் கடமையைச் சரிவரச் செய்யமுடியாமல் தவித்துக் கிடந்தது ஆடை.

அவளது மேடு பள்ளங்களில் ஏறியும் இறங்கியும் மூச்சுவாங்கியிருந்த அந்த மஸ்லின் துணி, மறைக்க வேண்டிய இடங்களிலிருந்தும் தான் வழுகி வீழ்ந்துவிட்டதைக் கண்டிக்காமல், இழுத்துச் சரிசெய்யாமல் கண்டுகொள்ளாதிருக்கிறாளே என்ற கவலையில் தான் பிரிந்து வந்த பிரதேசங்களை நோக்கிப் பெருமூச்சுவிட்டபடி சரிந்து கிடந்தது.

காற்றின் உதவியுடன் அவள் மானத்தைக் காப்பாற்றிவிடலாமா? என்று முயன்று முயன்று முடியாமல் தோற்றது.

அவள் அங்கங்களின் வழுவழுப்பில் தனக்குப் பிடிமானம் கிடைக்காது என்பது தெரிந்து சோர்ந்தது.

அவள் பெருமூச்சில் ஏறியிறங்கிய மார்புப் பிரதேசத்துத் துணி தன் இருப்பைக் காப்பாற்றிக்கொள்ளப் படாதபாடுபட்டது.

அவளோ அலட்சியமாகத் தன்னைக் காற்றுக்கும் அறை நிழலுக்கும் முழுமையாக ஒப்படைத்துக் கிடந்தாள்.

அவளது உள்ளாடை பயந்தது நடந்துவிட்டது.

வாசலில் குமரன் தோன்றினான்.

கதவை மெல்ல மூடினான்.

அவள் காலடியில் வந்து சிறிது நேரம் வைத்த கண் வாங்காமல் பார்த்தபடி நின்றான்.

தன்னை விரோதமுடன் பார்க்க வேண்டியவன் கண்களிலேயே படமுடியாதவாறு விலகிக் கிடக்கிறேனே என்று நொந்துகொண்டது அவள் ஆடை.

இவள் என்ன தூங்குகிறாளா? தூங்குவதுபோல் பாசாங்கு செய்கிறாளா?

முன்னால் நின்று ஒருவன் உன்மத்தனாகிக்கொண்டிருப்பது தெரியாதபடி அப்படி என்ன உறக்கம்?

அவள் ஆடை, தனக்கு நேரப்போகும் கதியை எண்ணிக் கலக்கம் கொண்டது.

குமரன் மெல்ல அருகில் சென்று கட்டில் விளிம்பில் அமர்ந்தான்.

இரு கைகளாலும் அவள் தோள்களைப் பற்றிப் பிடித்தபடி முழங்கைகளைப் படுக்கையில் ஊன்றி முகத்தை அவள் முகத்தை நோக்கிக் கொண்டு சென்றான்.

லாவண்யா திடுக்கிட்டு விழித்தபோது காலம் கடந்துவிட்டிருந்தது.

அவள் திமிறலே வெளித்தெரியாதபடிக்குக் குமரன் அவளை மூடிப் பரவியிருந்தான்.

அவளிடமிருந்து வெளிப்பட்ட மூச்சு முட்டிய முனகல் மட்டுமே கேட்டது.

கைகால்களை உதறி அவள் அசைக்க அசைக்க அவன் மேலும் மேலும் அவள் அங்கங்களுக்குள் இறங்கினான்



[illegible] அங்கங்கே துண்டுதுணுக்காக அகப்பட்டிருந்த உள்ளாடை இப்போது பரிதாபமாக அலறியது.

அவனை உன்மத்தனாக்கிய அவள் மேடு பள்ளங்களைக் கரைத்து சமதளமாகத் தன்னுடலோடு அப்பிக் கொண்டான்.

அவன் வெறிகொண்டவனாகப் போர் புரிந்தான்.

மூச்சுவிடக் கிடைத்த ஓர் இடைவெளியில்,

"ஆ...இதென்ன காட்டுமிராண்டித்தனம்?" என்று அவள் முணுமுணுத்தாள்.

அவன் பதில் பேசாது இயங்கினான்.

"ஊருக்கே உதாரணமான பண்பாளர்.... இப்படியா காட்டுமிராண்டியாக நடந்துகொள்வது?" கோபத்தோடு அவனை உலுக்கினாள்.

"வாட்டி எடுக்கும் காட்டுமிராண்டிகளைத்தான் பெண்கள் மாலைபோட்டு வரவேற்கிறார்கள் என்று என் முன்னோர் சொல்லியிருக்கிறார்கள்..." என்றான் குமரன்.

"ம்... பெண்களைப் பேசவே விடாத உங்கள் முன்னோர் வேறென்னவெல்லாம் சொல்லியிருக்கிறார்கள்?" என்று இகழ்ச்சியான குரலில் கேட்டாள் லாவண்யா.

அவள் கேலியைக் கண்டுகொள்ளாமல், குமரன் தன் அணைப்பிலிருந்து அவளை விட்டுவிடாமல் பேசினான். "காதல் புணர்ச்சியில் யாரிடத்தில் துன்பத்தை மிகுதியும் அனுபவிக்கிறார்களோ அவர்களிடத்தில்தான் தங்கள் உள்ளத்தையும் ஒப்படைக்க முன்வருவார்களாம் பெண்கள். புரட்டி எடுக்கும் காட்டுமிராண்டிகளிடம்தான் அவர்கள் ஈர்ப்பெல்லாம். நுண்மையான குறிப்பில் காதலை வெளியிடும் மனிதனுக்கு அவர்கள் வசப்படுவதில்லையாம்...."

"யார் சொன்னது?"

"சொன்னார்கள்... யார் என்று இப்போது ஏன்?"

"அதுதானே முக்கியம். உங்கள் வர்க்கமே தங்கள் காட்டுமிராண்டித் தனத்திற்குச் சப்பைக்கட்டு கட்டுவதற்கு இப்படிப் பழியை எங்கள்மீது போட்டுக் கதை சொல்லிவருவதுதானே வழக்கம்..."

"அனுபவித்துக் கண்டதைத்தானே சொல்லியிருப்பார்கள்..."

"என்ன அனுபவம்? என்ன கண்டுபிடிப்பு? உங்களைப் போல வன்மையானவர்களாக நாங்கள் படைக்கப்படவில்லை. மெல்லியல்தானே எங்கள் தன்மை. எங்கள் மென்மைக் குறிப்பை உணராதவர்களாகக் காட்டுமிராண்டிகள்போல் நடந்துகொள்வதற்குச் சப்பைக்கட்டு வேறு..." சினத்துடன் கூறியபடி திரும்பிப் படுத்தாள் லாவண்யா.

குமரன் இறங்கிவந்து கெஞ்ச ஆரம்பித்தான்.

அவள் பாதங்களை எடுத்துத் தன் மடியில் வைத்துக்கொண்டு அதை வருடியபடியும் உள்ளங்காலைத் தன் கன்னத்தில் ஒற்றியபடியும் "என் செல்லம்" என்று சொல்லி முத்தமழை பொழிய ஆரம்பித்தான்.

அவள் கூச்சத்தில் கால்களை இழுத்துவிடுவித்தாள். "என்ன இவன்! காட்டுமிராண்டி போலப் பிடுங்குகிறான். சினந்து பேசினால், சிறு குழந்தைபோல இறைஞ்ச ஆரம்பித்துவிடுகிறான்.

இரண்டுமே இவனது உயர்ந்த தகுதிக்கு ஏற்ற நடவடிக்கைகளாகத் தெரியவில்லை. ஊரவர்களால் போற்றி மதிக்கப்படும் இவன், இப்படி என் மீது பாய்ந்து பிடுங்குவதும், இல்லாவிட்டால் இகழ்ச்சிக்குரிய முறையில் கூடலன்பிற்கு இரப்பதும் சரியில்லையே! ஆனால், என் மீது கொண்ட அன்புதான் இவனை இப்படித் தத்தளிக்க வைக்கிறது...." என்று தனக்குள் எண்ணிப் புன்னகை பூத்தாள் லாவண்யா.

ஆடல் மயிலியலி
யன்பன் அணியாகம்
கூடுங்கால் மெல்லென்
குறிப்பறியான் - ஊடல்
இளிவந்த செய்கை
இரவாளன் யாண்டும்
விளிவந்த வேட்கை
யிலன்!

(வீரசோழியம் நூற்பா 27)

இலக்கிய நயம்

தருவது முழடில்யன்

★ சமீபத்தில் நீங்கள் பார்த்து ரசித்தது எது?

ஜெபநாயகம் சர்வானந்தன், ஏறாவூர்-05.

ரசித்தது அல்ல. ரசித்துக்கொண்டிருப்பது, எதிர்க்கட்சியும், ஜே.வி.பி.யும் எப்போதாவது கூட்டம் போட்டுத் தங்கள் கருத்தைச் சிங்கள மக்களிடம் நைந்த குரலில் சொல்லிக்கொண்டிருப்பதைப் பிரமாண்டமாக்கி ஊக எதிர்ப்புக் கட்டுரைகள் எழுதுவதைத் தவிர எங்கள் தமிழ் பத்திரிகைக் கட்டுரையாளர்களுக்கு எழுத வேறு விஷயமின்றி, அவர்கள் மாவரைத்துக் கொண்டிருப்பதைத்தான்!

★ மனதைப் பக்குவப்படுத்த என்ன செய்ய வேண்டும்?

ரவிகோபி, கொழும்பு.

வயதாகும்வரை காத்திருக்க வேண்டும்.

★ காதலித்து மணம் முடிப்பதிலா? பேசி மணம் முடிப்பதிலா சுகம் அதிகம்?

இ.கோபிநாத், மட்டக்களப்பு.

ஹும்... சுகம் எல்லாம் காதலித்துக்கொண்டும், பேசிக்கொண்டும் இருக்கும்வரைதான் கோபிநாத்.

★ தமிழ் மக்கள் ஒன்று திரண்டு ஆதரவைத் தெரிவித்து நிற்கிறார்கள். இது புலிகளுக்கு மகிழ்ச்சி தரக்கூடியதுதானே?

இ.விஜயமாலா, கண்டி.

பழியை யார் மீதும் போட்டுக் கொள்ள முடியாதென்பதால் பொறுப்பும் அதிகமாகியிருக்கிறது. அது அவ்வளவு மகிழ்ச்சி தரக்கூடியதல்ல.

★ நான் காதலிக்கும் பெண் என்னைக் காதலிக்கிறாரா? என்று அறியத் தயவு செய்து ஒரு வழி கூறுங்கள்? (காதலைச் சொல்லப் பயமாக இருக்கிறது)

எம்.ஜே.ரெட், மட்டக்களப்பு.

முதலில் அந்தப் பெண்ணோடு- காதலை வெளிப்படுத்தாத, கூச்சம் அகற்றும் ஓர் அறிமுக உரையாடலைத் தொடங்குங்கள். பேசப் பேசக் காதலைச் சொல்ல வழி தெரியும். (பயந்தால் ஒன்றுமே நடக்காது. கண்ணைக் கசக்கும் சூரியனோ ரெட்... ரெட்...ரெட்!)

★ நடிகையரில் உங்களைக் கவர்ந்த அழகி யார்?

எஸ்.மனோகரி, கொழும்பு-13.

பத்மினி என்று சொன்னால் என்னை வயதானவன் என்று நினைப்பீர்கள். ஆனால், அந்தக்கால எங்கள் அப்பாக்கள் என்ன பாடு பட்டிருப்பார்கள் என்ற ஆதங்கத்தோடு சொல்கிறேன். வாவ்! என்ன ஒரு அழகு!

★ நீங்கள் எதிர்பார்த்த இலட்சியங்கள் ஏதாவது நடைபெறாமல் போனதுண்டா?

எம்.ஐ.றன்சியா, சிலாபம்.

நடைபெறாமல் இருக்கும்வரை தானே அவை இலட்சியங்களாகவும் இருக்க முடியும்.

★ ரி.எம்.சௌந்தரராஜனின் முகவரியைத் தருவீர்களா? (இது மூன்றாவது முறை கேட்டு எழுதுகின்றேன்)

நிருபன், யாழ்ப்பாணம்.

மூன்றுமுறைக்கு மேல் புத்தருக்குக் கூடக் கோபம் வந்துவிடுமாம்! இதோ பிடியுங்கள்: இல.43, மேற்கு வட்டச் சாலை, மந்தைவெளிப்பாக்கம், சென்னை 600 028.

★ ஒளிபரப்பாகும் மெகா தொடர் நாடகங்களில் தங்களைக் கவர்ந்தது எது?

ஐ.எஸ்.பிரியா, கித்துள்.

என்னைப் பொறுத்தவரை மெகா தொடர்கள் எல்லாம் மகா இடர்கள் தான்.

## சிந்தியா பதில்கள்

★ நடிகை ஸ்நேகாவின் முகவரியைத் தருவீர்களா?

அஜந்தகுமார், அக்கரைப்பற்று.

28/1, மன்னார் முதலி தெரு, சென்னை 600 026.



ஒரு முகவரிக்காக இத்தனை தபாலட்டைகளா! ஆனாலும் இது மோசம் அஜந்தகுமார்.

★ "மல்லிகை என் மன்னன் மயங்கும்..." எனப் பாடி எல்லோரையும் மயக்கிய வாணி ஜெயராம் இப்போது என்ன செய்கிறார்?

தீபா, கொழும்பு-06.

பல நாடுகளுக்கும் சென்று மேடைக் கச்சேரிகள் செய்து உலகை மயக்கி வருகிறார். சமீபத்தில் "நந்தா" படத்தில் ஒரு பாடல் பாடியிருக்கிறார். கேட்கவில்லையா?

★ கனவுகளால் ஏதும் பயன் உண்டா?

ரமேஷ், மட்டக்களப்பு.

எலியாஸ் ஹேராவே தையல் மெஷினைக் கண்டு பிடித்தவர். தைப்பதற்கான மெஷினை உருவாக்கும் பணியில் ஈடுபட்டிருந்தவருக்கு இருந்த ஒரே சிக்கல் ஊசியை மெஷினில் எப்படிப் பொருத்துவது என்பதில்தான். பின்புறம் காதுள்ள கைத்தையல் ஊசியைப் பல்வேறு விதமாகவும் தையல் மெஷினில் பொருத்திப் பார்த்துத் தோல்வியால் துவண்டு போனார்.

ஒருநாள் எலியாஸ் வேகமாக ஓடிக் கொண்டிருந்தார். முட்செடிகள் முகத்தைக் கிழித்தன. பயங்கர ஆயுதங்களோடு தன்னைக் காட்டுவாசிகள் துரத்துவதை உணர்ந்தார். மேடு பள்ளங்களில் விழுந்தெழுந்து பின்னங்கால் பிடரியில் அடிபட ஓடினார். எப்படி ஓடி என்ன? காட்டுவாசிகள் அவரைச் சூழ்ந்துகொண்டார்கள். அவர் விழுந்து கிடந்து நடுங்கிக் கொண்டிருந்தார். சுற்றிலும் ஈட்டிகளுடன் காட்டுவாசிகள். ஈட்டி முனைகளில் மெல்லிய துளைகள். எலியாஸ் திடுக்கிட்டுக் கண்விழித்தார். கண்ட கனவை மறுபடி நினைவு கூர்ந்தார். காட்டுவாசிகளின் ஈட்டிமுனை அவரது பிரச்சனைக்குத் தீர்வு சொன்னது. நுனியில் காதுள்ள ஊசிகளைச் செய்து தையல் மெஷினில் பொருத்த.... அவருக்கு வெற்றி!

# மன்னாதி மன்னன்

104

## மகாசூரனின் மதியூகம்

இந்திரலோகத்திற்கு ஒரு மானிடன் வந்திருக்கிறான் என்பதைக் காவலர்கள் மூலம் தெரிந்துகொண்ட இந்திரன் கடுங்கோபமுற்றான்.

"முன்பு அசுரர்கள் பலர் தவமிருந்து இறைவனிடம் வரங்களைப் பெற்று அடிக்கடி இந்திரலோகம் வந்து பல இடையூறுகளைச் செய்துவந்தனர். ஆனால், அத்தகைய அசுரர்கள் எல்லோரும் அழிந்தொழிந்துவிட்டார்கள். இப்போது சாதாரண மானிடன் ஒருவன் வந்திருப்பதாகக் கூறுகிறார்கள். அசுரர்களுக்கு இருந்த அத்தகைய தைரியம் இப்போது மானிடர்களுக்கு எவ்வாறு வரமுடியும்?" என்று இந்திரன் பலவாறு சிந்தனைசெய்தான். "சாதாரண மானிடனுக்கு இந்திரலோகம் வருவதென்பது அத்தனை சுலபமல்ல. இவன் ஒரு அபூர்வ பிறவியாக இருக்க வேண்டும்" என்ற முடிவக்கு வந்த இந்திரன் அந்த மானிடனைச் சபைக்கு அழைத்துவரும்படி கட்டளையிட்டான். காவலர்களும் இந்திரன் முன்னிலையில் மகாசூரனை அழைத்து வந்தார்கள்.

மகாசூரன் பயபக்தியுடன் இந்திரனை வணங்கி நின்றான். அவனை நோக்கி இந்திரன், "நீ எதற்காக இந்திரலோகம் வந்தாய்?" என்று சற்றுக் கடுமையான குரலில் விசாரித்தான்.

இந்திரன் கோபத்துடன் வினவிய போதும் மகாசூரன் மருண்டுபோய்விடவில்லை. துணிவுடன், "தேவேந்திரப் பிரபோ! தங்களுடைய சபையைச் சேர்ந்த ஒரு பெண்ணை நான் மனதார விரும்பினேன். சிலகாலம் அப்பெண்ணும், வேறு இரு கன்னிகைகளும் பூலோகம் வந்து எனது தமையன்மாருடனும், என்னுடனும் மகிழ்ச்சியாகக் காலம் கடத்தினர். இப்பொழுது அந்தக் கன்னியர்கள் மூவரும் தங்கள் சபைக்கு வந்துவிட்டனர். அவர்களுள் இளையவளான ரூபகன்னிகையை மிகவும் விரும்பினேன். ஏனைய கன்னியர்கள் தேவலோகம் வந்துவிட்ட போதிலும் ரூபகன்னிகை ஒவ்வொருநாள் மாலையிலும் என்னிடம் வந்து இரவு முழுவதும் மகிழ்ச்சியாகத் தங்கிவிட்டு பொழுது புலர்ந்ததும் இங்கு திரும்பிவிடுவார். ரூபகன்னிகை என்னிடம் தந்த வீணை உடைந்துவிட்டதனால் அவர் என்னிடம் வருவதை நிறுத்திக்கொண்டார். தாங்கள்தான் ரூபகன்னிகையை என்னுடன் அனுப்புவதற்கு உதவி செய்ய வேண்டும்" என்று மன்றாட்டமாகக் கேட்டான்.

சகல விபரங்களையும் கேட்டறிந்து கொண்ட இந்திரன் அந்த மூன்று கன்னிகைகளையும் வரவழைத்தார். மகாசூரன் கூறிய சம்பவங்கள் உண்மைதானா என்று அவர்களிடம் வினவினார். அவர்களும் எல்லாவற்றையும் ஒப்புக் கொண்டனர்.

தேவகன்னிகையர் மூவரும், தேவேந்திரனால் கடும் தண்டனைக்குள்ளாக்கப்படலாம் என்று பயந்தனர். ஆனால், தேவேந்திரன், "நீங்கள் மூவரும் பூலோகத்தில் மானிடரின் இச்சைக்குப் பாத்திரமாயிருந்தவர்கள். ஆகவே, இனிமேல் நீங்கள் தேவலோகத்தில் வாழும் அந்தஸ்தை இழந்துவிட்டீர்கள். எனவே, உடனடியாகவே இந்த மானிடனுடன் பூலோகம் சென்று நீங்கள் ஏற்கனவே வாழ்ந்த இளவரசர்களுடன் வாழக் கடவீர்கள். அத்துடன் இதுவரை உங்கள் மூவரிடமிருந்த தெய்வீக சக்திகள் அனைத்தையும் இழந்துவிடுவீர்கள். நீங்கள் தேவகன்னிகையர் என்ற நினைப்பும் உங்களை விட்டு நீங்கி சாதாரண மானிடர்களாகவே பூலோகத்தில் வாழ்



வீர்கள்" என்று சாபமிட்டார்.

தேவலோக வாசிகள் என்ற அந்தஸ்தை இழப்பதை எண்ணிக் கன்னியர்கள் மூவரும் கலங்கியபோதும் பூலோகத்தில் அரச குடும்பத்தில் வாழும் சந்தர்ப்பம் கிடைத்ததை எண்ணி மறுபுறம் மகிழ்ச்சியடைந்தார்கள்.

மகாசூரனுக்கு இந்திரன் வெகுமதிகளை அளித்துப் பூலோகத்திற்குக் கன்னிகையர்களுடன் அனுப்பி வைத்தார். நால்வரும் பூலோக எல்லையை அடையுமுன்னர் அவர்களை ஒரு பெரும் தீப்பிளம்பு தாக்கியது. நால்வரையும் தீ சூழ்ந்து கொண்டு அவர்களை எங்கும் நகர விடாது தடுத்தது. அவர்கள் நால்வரும் செய்வதறியாது திகைத்து நின்றனர்.

இதேகாலகட்டத்தில் திருமால்புரி அரண்மனையில் பெரும் சோகம் குடிகொண்டது. இந்திரலோகம் சென்று வருவதாகக் கூறிச் சென்ற தங்கள் தம்பியான மகாசூரன் இதுநாள்வரை நாடு திரும்பவில்லையே, அவனுக்கு என்ன ஆனதோ தெரியவில்லையே என்று மகாசூரனின் தமையன்மார் இருவரும் கலங்கினர். அரண்மனைச் சோதிடரை அழைத்துத் தங்கள் தம்பி இதுவரை திரும்பி வராமலிருப்பதற்கான காரணம் என்ன என்பதை அறிந்து கூறும்படி கேட்டனர்.

சோதிடரும் பலவகை ஏடுகளைப் புரட்டி ஆராய்ந்து பின்னர், "தங்கள் தம்பியான மகாசூரன் தீயினால் சூழப்பட்டு சங்கடமான சூழ்நிலையில் இருக்கிறார். இன்னும் ஐந்து நாளிகைக்குள் அவரைக் காப்பாற்றாவிட்டால், அவர் தீக்கிரையாகிவிடுவார்" என்று கூறினார். இதனைக் கேட்ட சகோதரர்கள் கலங்கித் துடித்தனர்.

மகாசூரன் தீயினால் சூழப்பட்டுள்ள இடத்திற்கு சாதாரண மானிடர்கள் எவரும் செல்லமுடியாது என்றும், மகா பராக்கிரமசாலியான ஒருவரால் மட்டுமே அங்கு செல்ல முடியும் என்றும் சோதிடர் மேலும் கூறி, அங்கிருந்த கோவிலினுள்ளே செப்புச் சாசனத்தில் சில யோசனைகள் கூறப்பட்டிருப்பதாகவும் சொன்னார்.

இளவரசர்கள் இருவரும் கோயிலின் உள்ளே சென்று சோதிடர் குறிப்பிட்ட சாசனத்தைக் கண்டனர். அதில், "அந்த ஆலயத்தின் முன்புறமாகத் தீ வளர்த்து, கோபுரத்தின் உச்சியில் ஏறி, கீழேயுள்ள தீக்குள் குதித்தால், அவ்வாறு குதிப்பவர் பாதாள உலகம் செல்வார். அங்கே அவருக்குப் பார்வதி சமேதராக சிவபிரான் காட்சியளித்து மகாசூரனைக் காப்பாற்றும் மார்க்கத்தைக் கூறுவார்" என்ற வாசகம் எழுதப்பட்டிருந்தது.

இருப்பினும் இளவரசர்கள் இருவருக்கும் ஆலய கோபுரத்தின் உச்சி மீது ஏறி தீயினுள் குதிப்பதற்கான தைரியம் இருக்கவில்லை. அந்த ஆலயத்திற்கு வந்திருந்த மாமன்னர் விக்கிரமாதித்தன், ஆலய வாயிலில் துக்கம் குடிகொள்ள அமர்ந்திருந்த திருமால்புரி இளவரசர்கள் இருவரையும் கண்டு, அவர்களின்

### இராஜகுமாரன்

துயரத்திற்குக் காரணம் என்னவென்று விசாரித்தார். இளவரசர்கள் இருவரையும் கவலைப்படாமலிருக்கும்படி தேற்றிவிட்டு கோபுர வாயிலில் தீ மூட்டும் படி கூறினார். தீ கொழுந்துவிட்டு எரிந்து கொண்டிருக்கும்போது கோபுரத்தின் உச்சியிலேறிய விக்கிரமாதித்த மாமன்னர் தீயினுள் பாய்ந்தார்.

தீயினுள் பாய்ந்த மன்னர் விக்கிரமாதித்தன் நேராகப் பாதாளலோகம் சென்றார். அங்கே சிவபெருமான் பார்வதி சமேதராக விக்கிரமாதித்த மன்னருக்குக் காட்சி கொடுத்தார்.

(மன்னன் வருவான்...)

## காதில பூ கந்தசாமி

### நோட்டீஸ் பலகை



நான் சொல்வ தெல்லாம் பொய். பொய்யைத் தவிர வேறொன்றுமில்லை *-காதில பூ கந்தசாமி-*

குஜராத்தில இந்து முஸ்லிம் கலவரங்கள் நடந்து பார்லிமென்டில விவாதம் நடக்கேக்க நான் கற்பனை விமானத்தில் பறந்துபோய் நேரில் பார்த்தது இது.

(இடம் இந்தியப் பாராளுமன்றம், பிரதமர் பேசுகிறார்)

வாஜ்பேய்: இந்தியா எங்கள் தாய்நாடு. அதன் பிள்ளைகள்தான் இந்துக்களும் முஸ்லிம்களும். எனவே குஜராத்தில் நடந்தது ஒரு துன்பியல் சம்பவம். அதனை மறப்போம். மன்னிப்போம்.

சோனியா காந்தி: மறப்பதா, மன்னிப்பதா? கணவனை இழந்த துயரம் தெரியுமா? முஸ்லிம் பெண்களைக் கற்பழித்தது யார்? கண்டுபிடித்துவிட்டீர்களா?

வாஜ்பேய்: ஆம். தீர விசாரித்துவிட்டோம். நிச்சயமாக அது ஆண்களாகத்தான் இருக்க வேண்டும்.

சோனியா: நீர் ஒரு பெண் ஒடுக்குமுறையாளர்!

வாஜ்பேய்: இல்லை, நிச்சயமாக இல்லை, குஜராத் கலவரத்தில் ஆண்களும்தான் ஒடுக்கப்பட்டார்கள்!

வை.கோ: குஜராத்தில் கலவரமா? ஏன் இலங்கையிலும்தான் கலவரம். இன்னும் 10 முறை என்னை எம்.பீ.யாக்கக் கூடிய கண்ணீக் கதைகளை வைத்திருக்கிறேன். தம்பி பிரபாவை நான் கடல் கடந்து சென்று காட்டுக்குள் சந்தித்தபோது.... எப்பிடி வர்ணிப்பேன் அந்தக் கதையை....

சபாநாயகர்: இது குஜராத் பிரச்சனை. சப்ஜக்ரடை அந்தப்பக்கம் திருப்புங்க.

வை.கோ: ஆமாம், குஜராத், அது எந்தப் பக்கம் இருக்கிறது? எப்படியும் அது இலங்கைப் பக்கமாகத்தான் இருக்க வேண்டும். அங்கே இலங்கையிலே சமாதானப் பேச்சுக்கள் தொடங்கி விட்டன. தம்பி பிரபா முஸ்லிம்களை திரும்பவும் வந்து குடியேற அனுமதியளித்துவிட்டார். இது தெரியாமல், முஸ்லிம்கள் இங்கே, அகதி முகாம்களில் வாடுவதாக சோனியா நீலிக் கண்ணீர் வடிக்கிறார். என்னிடம் ஒரு கப்பலைத் தாருங்கள். நான் தம்பி பிரபாவுடன் பேசி குஜராத் முஸ்லிம்களைக் கொண்டுபோய் யாழ்ப்பாணத்தில் குடியேற்றுவேன்.

தி.மு.க. எம்.பி: இலங்கைப் பேச்சுவார்த்தைகளில் இந்தியா கலந்து கொள்ளக்கூடாது. இந்தியாவைக் கலந்து கொள்ளாமல் பேச்சுவார்த்தைகளும் நடக்கக் கூடாது. புலிகளை இந்தியாவுக்குள் அனுமதிக்கலாம் அனுமதிக்காதும் விடலாம். ராஜீவ் கொலையில் குற்றவாளிகளைத் தண்டிக்கலாம் அல்லது மன்னிக்கலாம். எனவே குஜராத்தில் நடந்த கலவரத்துக்காக பிரதமர் பகிரங்க மன்னிப்புக் கோருவதும் கோராமல் விடுவதும் அவர் விருப்பம். குஜராத் முதலமைச்சர் நரேந்திர மௌளி பதவி நீக்கப்பட்டாலோ படாவிட்டாலோ பாராளுமன்றம் கலைந்து எங்கள் ஆசனங்கள் பறிபோய்விடக் கூடாது. அதனால் அரசாங்கம் அவரைப் பதவி விலக்கிவிட்டு மீண்டும் பதவியில் அமர்த்துவதே கலைஞர் கூறும் வழி.

அ.தி.மு.க எம்பி: குஜராத்தில் கலவரம் நடந்ததைக் கண்டிப்பதா வரவேற்பதா நடுநிலை வகிப்பதாவென்று அம்மாதான் தீர்மானிப்பா. நான் அவவின் கால்களில் வீழுமுன் எதையும் பேசி அது அவவின் காதுகளில் விழுந்தால் பின்னர் நானும் குஜராத் அகதிகளோடுதான் வாழவேண்டி வரும். அதனால் குஜராத் கலவரத்துக்கு உடனடியாக இந்தியா இலங்கைக்கு படையை அனுப்பி பிரபாகரனைக் கைதுசெய்வதொன்றே அம்மாவுக்குப் பிடித்த சரியான வழி. நரேந்திர மௌளியைப் பதவி விலத்துவதுபற்றிக் கவலைப்படாதீர்கள். எங்கள் பன்னீர்ச்செல்வத்தை அங்கு அனுப்பி ஒரு பொம்மை அரசாங்கத்தை நடத்த அம்மா உதவுவா.

சிவசேனை எம்பி: இந்துக்கள் இராமர் கோவில் கட்டும் பணியில் இருக்கும்போது நாம் முஸ்லிம்களைத் தாக்கியதாகப் பொய்ப் பிரசாரங்களை அன்னிய நாட்டவர் பரப்புகிறார்கள். சோனியா காந்தியும் ஒரு அன்னியர் என்பதால் அவர் இராமர் பணியை களங்கப்படுத்தவே இதைச் செய்கிறார்.

அத்வானி: தாமரை எங்கள் சின்னம். அதை தா - மரை என்று பிரித்துவிட எதிர்க்கட்சிகள் முனைகின்றன. குஜராத்திலும் தாமரை உண்டு. அங்கே முஸ்லிம்கள் தாமரைகளைப் பறிக்கிறார்கள். அதனால்தான் தாமரைகளைக் காக்க இந்துக்களுக்கு உரிமை உண்டு என்கிறேன். கலவரங்கள் வருவது இயற்கைதான். இயற்கையை ரசிக்கத் தெரிய வேண்டும். அதற்காக நாம் ஏன் கலவரமடைய வேண்டும்?

சோனியா: கலவரத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு என்ன வழங்கப்போகிறீர்கள்?

வாஜ்பேய்: ஆறுதல், ஆறுதல்.

காங்கிரஸ் எம்.பி: கலவரத்தை அடக்க பொலீசார் என்ன நடவடிக்கை எடுத்தார்கள்?

ஜோர்ஜ் பர்னாண்டஸ்: கலவரம் ஓயும்வரை பார்த்துக்கொண்டிருந்தார்கள்.

சோனியா: கலவரங்களில் கொலையுண்டவர்களுக்கு என்ன பதில் சொல்லப் போகிறீர்கள்?

அத்வானி: இறந்தவர்களோடு நாம் பேச முடியாது. அவர்கள் அடுத்த பிறப்பில் இந்துவாகப் பிறக்க ஆண்டவனை வேண்டிக் கொள்கிறேன்.

காங்கிரஸ் எம்.பி: அப்படியானால் இப்போது எஞ்சியுள்ள முஸ்லிம்களுக்கு உங்கள் அரசாங்கத்தில் என்ன பாதுகாப்பு.

வாஜ்பேய்: அவர்கள் ஏற்கெனவே பாதுகாக்கப்பட்டு விட்டார்கள். அதனால்தான் எஞ்சியிருக்கிறார்கள்.

சேனியா: இறுதியாகச் சொல்லுங்கள் குஜராத் முதலமைச்சரை நீக்கப் போகிறீர்களா இல்லையா?

வாஜ்பேய்: அவரை நீக்காவிட்டால் நீங்கள் என்ன செய்யப்போகிறீர்கள்?

சோனியா: நீக்கும்படி திரும்பவும் கேட்போம்.

அத்வானி: நீக்கிவிட்டால்?

சோனியா: ஏன் நீக்கினீகளென மற்றவர்களைக் கேட்க வைப்போம்.

வாஜ்பேய்: உங்கள் அரசாங்கத்தில் கலவரங்களை எப்படிக் கையாண்டீர்கள்?

சோனியா: நான் அப்போது இருக்கவில்லை, எதற்கும் எங்கள் அடுத்த ஆட்சியில் நடக்கும் கலவரங்களை இருந்து பாருங்களேன்.

**யாவும் கலப்படமற்ற கற்பனை**

## இந்தவாரம் உங்கள் பலன்

19.05.2002 தொடங்கி 25.05.2002வரை

**சோதிட மாமணி தில்லை**

### கிரக நிலை

இடபம் - சூரியன், புதன், சனி, இராகு

மிதுனம் - வியாழன், வெள்ளி, செவ்வாய், விருட்சிகம் - கேது

சந்திரன் கர்க்கடகம், சிங்கம், கன்னி, துலாம் இராசிகளில் இவ்வாரம் சஞ்சரிப்பார்.

**மேடம்**

(அச்சுவினி, பரணி, கார்த்திகை முதற்கால்) செய்தொழில் விருத்தி, பணவரவு, மனக்கஷ்டம் நீங்கும், உத்தியோகத்தில் உயர்வுக்கு இடமுண்டு. மாணவர்களுக்கு கல்வி நிலையில் மாற்றம் ஏற்படும். விவ சாயிகள், வியாபாரிகள் முதலீடுகளால் இலாபம் அடைவர்.

அதிஸ்ட நாள்: திங்கள், அதிஸ்ட இல.: 5.

**இடபம்**

(கார்த்திகை பின் முக்கால், ரோகிணி, மிருகசீரிடத்து முன்னரை) காரியானுகூலம், மனமகிழ்ச்சி, பெரியோர் உதவி, உத்தியோகநிலையில் மாற்றம், மாணவர்களின் கல்வியில் உயர்வுண்டாகும். விவசாயிகள், வியாபாரிகள் மத்திம இலாபம் அடைவர்.

அதிஸ்ட நாள்: புதன், அதிஸ்ட இல.: 4.

**மிதுனம்**

(மிருகசீரிடத்துப் பின்னரை, திருவாதிரை, புனர்பூசத்து முன்முக்கால்) குடும்ப மகிழ்ச்சி, பிரயாண அனுகூலம், பெரியோர் உதவி, தேகாரோக்கிய நன்மை, உத்தியோகத்தில் எதிர்பார்த்த முன்னேற்றம், மாணவர் கல்வி மேன்மை. விவசாயிகள், வியாபாரிகள் குறைந்த இலாபம் பெறுவர்.

அதிஸ்ட நாள்: வெள்ளி, அதிஸ்ட இல.: 2.

**கர்க்கடகம்**

(புனர்பூசத்து நாலாங்கால், பூசம், ஆயிலியம்) தொழில் கஷ்டம், பிரயாண மிகுதி, உறவினர் பகை, மனக்கவலை, உத்தியோக ரீதியில் கவலை, மாணவர் கல்வி முன்னேற்றம், விவசாயிகள், வியாபாரிகள் முதலீடுகளால் அற்ப இலாபம் அடைவர்.

அதிஸ்ட நாள்: செவ்வாய், அதிஸ்ட இல.: 7.

**சிங்கம்**

(மகம், பூரம், உத்தரத்து முதற்கால்) குடும்பத்தில் மறைமுக எதிர்ப்பு, பணக்கஷ்டம், பிரயாண மிகுதி, அன்னியர் உதவி, உத்தியோக நிலையில் கூடுதல் கஷ்டம், மாணவர்கள் கல்வியில் மந்தநிலையுண்டு. விவசாயிகள், வியாபாரிகள் குறைந்த இலாபம் பெறுவர்.

அதிஸ்ட நாள்: வெள்ளி, அதிஸ்ட இல.: 3.

**கன்னி**

(உத்தரத்துப் பின் முக்கால், அத்தம், சித்திரையின் முன்னரை) தொழில் விருத்தி, முன்னேற்றம், அன்னியர் உதவி, கௌரவம், உத்தியோகத்தர்களுக்கு நன்மைகள் சேரல், மாணவர்கள் கல்வியில் உயர்ந்த நிலை, விவசாயிகள், வியாபாரிகள் உரிய இலாபம் பெறுவர்.

அதிஸ்ட நாள்: திங்கள், அதிஸ்ட இல.: 1.

**துலாம்**

(சித்திரையின் பின்னரை, சுவாதி, விசாகத்து முன்முக்கால்) குடும்பத்தில் மனக்கவலை, காரியத்தடை, பணக்கஷ்டம், கடன்படல், உத்தியோக நிலையில் மேலதிகாரிகளின் தொல்லை, மாணவர்கள் கல்வியில் பிரச்சனை, விவசாயிகள், வியாபாரிகள் முதலீடுகளில் எதிர்ப்பு உண்டாம்.

அதிஸ்ட நாள்: வியாழன், அதிஸ்ட இல.: 2.

**விருட்சிகம்**

(விசாகத்து நாலாங்கால், அனுஷம், கேட்டை) தொழில் கஷ்டம், பணவரவு முடங்கல், பெரியோர் உதவி, இனசன நன்மை, உத்தியோகத்தில் எதிர்பார்த்த நன்மை தடை, மாணவர்கள் கல்வியில் மந்த நிலை, விவசாயிகள், வியாபாரிகள் உரிய இலாபம் அடைவர்.

அதிஸ்ட நாள்: வெள்ளி, அதிஸ்ட இல.: 5.

**தனு**

(மூலம், பூராடம், உத்தராடத்து முதற்கால்) தொழில் சிறப்பு, இனசன மேன்மை, குடும்ப மகிழ்ச்சி, காரியானுகூலம், உத்தியோகத்தில் முன்னேற்றம், மாணவர்கள் கல்வியில் உயர்ச்சி, விவசாயிகள், வியாபாரிகள் இலாபம் அடைவர்.

அதிஸ்ட நாள்: புதன், அதிஸ்ட இல.: 5.

**மகரம்**

(உத்தராடத்துப் பின் முக்கால், திருவோணம், அவிட்டத்து முன்னரை) குடும்பத்தில் சிறிது பிரச்சனை, பிள்ளைகளால் மனக்கவலை, பொருள் விரயம், உத்தியோக ரீதியாக மறைமுக எதிர்ப்பு, மாணவர் கல்வியில் மந்தநிலை, விவசாயிகள், வியாபாரிகள் குறைந்த இலாபம் பெறுவர்.

அதிஸ்ட நாள்: வெள்ளி, அதிஸ்ட இல.: 6.

**கும்பம்**

(அவிட்டத்துப் பின்னரை, சதயம், பூரட்டாதி முன்முக்கால்) தொழில்நிலை மந்தம், பிரயாண மிகுதி, பெரியோர் உதவி, அரச தண்டம், பணக்கஷ்டம், உத்தியோகநிலை மாற்றம், மாணவர் கல்வியில் விரக்தி, விவசாயிகள், வியாபாரிகள் மத்திம இலாபம் அடைவர்.

அதிஸ்ட நாள்: செவ்வாய். அதிஸ்ட இல.: 4.

**மீனம்**

(பூரட்டாதி நாலாங்கால், உத்திரட்டாதி, ரேவதி) இனசனப் பகை, தொழில் கஷ்டம், பணவரவு தடை, தேகாரோக்கியம் பாதித்தல், உத்தியோக ரீதியில் மனக்கவலை, மாணவர் கல்வியில் தடைகள் உண்டு, விவசாயிகள், வியாபாரிகள் எதையும் திட்டமிட்டுச் செய்வது நன்மைதரும்.

அதிஸ்ட நாள்: திங்கள். அதிஸ்ட இல.: 5.



ஸ்ரீ கல்யாணி ஜுவல்லர்ஸ்

SRI KALYANY JEWELLS

5 SEA STREET, COLOMBO 11

செட்டியார் தெரு, கொழும்பு




# வெற்றி

← இப் படத்தில் இருக்கும் குழந்தையின் கை பிறக்கும் போதே இருந்ததல்ல. டாக்டர் வீ.பத்மநாதன் என்பவரின் தலைமையிலான 55 பேர் அடங்கிய மலேசிய மருத்துவர் குழுவொன்று செய்த சாதனைச் சத்திர சிகிச்சை ஒன்றின்போது குழந்தைக்குச் செயற்கைக் கை பொருத்தப்பட்டது.

மலேசியப் பெண்மணி ஒருவருக்குப் பிறந்த இரட்டைக் குழந்தைகளில் ஒன்றுக்கு மூளையில் ஏற்பட்டிருந்த கடுமையான பாதிப்பினால் சில நாட்கள்கூட உயிர் வாழ மாட்டாது என்று டாக்டர்களால் முடிவு செய்யப்பட்டது. மற்றைய குழந்தைக்கு ஒரு கை இல்லை. சில நாட்களில் இறந்துவிடலாம் என ஐயம் தெரிவித்த மருத்துவர்கள் குழந்தையின் கையைச் சத்திர சிகிச்சை செய்து பிரித்து, இந்தக் குழந்தைக்குப் பொருத்தி யிருக்கிறார்கள். இந்தச் சத்திரசிகிச்சை பதினைந்து மணித்தியாலங்களில் மேற்கொள்ளப்பட்டது.

உலகிலேயே மிகக் குறைந்த வயதில் உறுப்பொன்றை முழுமையாக மாற்றுச் சத்திர சிகிச்சை மூலம் பெற்ற குழந்தை இதுதான். இக் குழந்தையின் சகோதரனுடையதையே பொருத்தப்பட்டிருப்பதால் மரபணு தொடர்ச்சியும், செல்களும் ஒரே தன்மையைக் கொண்டவையாக இருக்கும். ஆதலால், இந்தக் குழந்தையின் கை பிரச்சனையின்றி வளரும் என டாக்டர்கள் நம்பிக்கை தெரிவிக்கின்றனர்.




அருள் ஜுவல்லர்ஸ்

3 SEA STREET, COLOMBO 11

செட்டியார் தெரு, கொழும்பு


# ஆற்றல்

ஹங் தூதி நியுன் என்ற இந்த வியட்நாம் மங்கையின் தொழில் சர்க்கஸ் காட்டுவது தான். கையிரண்டையும் நிலத்தில் ஊன்றி உடலை வளைத்துக் கால்களில் அம்பையும் வில்லையும் ஏந்தி 16 அடி தூரத்தில் உள்ள இலக்கைக் குறிபார்த்து சரியாகத் தாக்கும் அசாதாரண ஆற்றலைக் கொண்டிருக்கிறார்.

↓



↑ஒரு தொழிலாளியின் மகளான இவர் சிறு வயது முதல் சர்க்கஸ் விளையாட்டில் ஈடுபட்டு வருகின்றார். தினசரி குறைந்தபட்சம் மூன்று மணித்தியாலங்களாவது பயிற்சி செய்யும் ஹங் தூதி சர்க்கஸ் அரங்கில் மிகுந்த நம்பிக்கையுடன் காணப்படுகின்றார்.

வியட்நாமில் மிகவும் பிரபலமான இவர் மேடைக்கு வரும்போதே, பார்வையாளர்கள் அளவுகடந்த மகிழ்ச்சியுடன் ஆரவாரம் செய்து வரவேற்கின்றனர்.

# வித்தியாசம்

↓மூன்று தலைகளை வெட்டி மேசை மீது அடுக்கி வைத்திருப்பதாக நினைத்துவிடாதீர்கள். இது பிரித்தானிய புகைப்பட நிபுணர் ஒருவரின் வித்தியாசமான ஒரு முயற்சி.

மேசையின் கீழ்ப் பக்கத்தில் முற்றாக உடலை மறைத்துவைத்துத் தலையை மட்டும் இரண்டு சப்பாத்துக்களுக்கு நடுவில் தெரியும்படி செய்திருக்கிறார். நவீன புகைப்படத் துறை சம்பந்தமான கண்காட்சி ஒன்றில் இந்த வித்தியாசமான படைப்பு ஏராளமான மக்களின் பாராட்டைப் பெற்றது.




# ஈருடல் ஓருயிர்

↓ஒட்டிப் பிறந்த உடலோடு இன்னும் சில தினங்களில் தமது 28வது பிறந்தநாளைக் கொண்டாடக் காத்திருக்கும் ஈரானிய சகோதரிகளான லாலா பிஜானியும், லேடன் பிஜானியும் தற்போது தெஹ்ரான் சட்டக்கல்லூரியில் சட்டம் பயின்று வருகின்றனர்.

எமது உடல்கள் பிரிக்கப்பட்டு தனித்துவமான வாழ்வை அனுபவிப்பதே எங்களது ஒரே கனவு என்று கூறும் இவர்களின் தலைகள் ஒட்டியிருக்கும் விதத்தைப் பொறுத்தவரையில் அவற்றை வெட்டிப் பிரிப்பது மிகவும் ஆபத்தான முயற்சியாக இருக்கும் என மருத்துவர்கள் கருதுகின்றனர். 1996ம் ஆண்டு இவர்களைப் பரிசோதித்த ஜேர்மனிய மருத்துவர்கள் உடலைச் சத்திர சிகிச்சை மூலம் பிரிக்க முற்பட்டால் யாரேனும் ஒருவர் மரணிக்க வேண்டி ஏற்படலாம் என்று தெரிவித்திருந்தனர். ஒருவருக்காக மற்றவர் மரணிக்கத் தயாராக இருப்பதாக இந்த இரு யுவதிகளும் கூறுகின்றனர். சிரமமான வாழ்விலிருந்து ஒருவரேனும் மீள வேண்டும் என்பது இவர்களது விருப்பம்.

ஒருவருக்கொருவர் அன்பாக இருக்கும் இந்தச் சகோதரிகள் உடலால் ஒட்டியிருந்தாலும் மாறுபட்ட குண இயல்புகளைக் கொண்டிருக்கின்றனர். ஒருவருக்குப் புத்தகம் வாசிக்க மிகவும் விருப்பம். சமையல் செய்ய விருப்பமில்லை. மற்றவருக்கு நிறைய நேரம் தூங்குவது பிடிக்கும். ரீவி பார்க்கப் பிடிக்காது. இருவரும் தமது தனிப்பட்ட வாழ்க்கை குறித்தும் ஆசைகள் குறித்தும் அதிக நேரம் விவாதித்துக்கொள்வார்கள்.

இருவருக்கும் உயர் கல்விக்காக தெஹ்ரான் பல்கலைக்கழகம் புலமைப்பரிசில் வழங்கியிருக்கிறது. பிரிந்து வாழும் ஆசையைச் சுமந்துகொண்டு ஒரே ஸ்கார்ஃபைப் பயன்படுத்தித் தலையை மறைத்த வண்ணம் கலாசாலை போய் வருகிறார்கள் இந்த அபூர்வ சகோதரிகள்.





இப்பத்திரிகை கொழும்பு-06, வெள்ளவத்தை, நெல்சன் பிளேஸ், 16A ஆம் இலக்கத்தில் டி.டி. எண்டர்பிரைசஸ் (பிரைவேட்) லிமிடெட் ஸ்தாபனத்தால் பொரலஸ்கமுவயில் உள்ள சீ.பீ.டி. அச்சகத்தில் மே 05 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்படுகிறது.